REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 ஒக்டோபர் 20 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 249 | Friday 20, October, 2023 | 24 பக்கங்கள் | 50/-

வாரமஞ்சரியுடன் வர்த்தமானி இலவசம்

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தினகரன் வாரமஞ்சரியுடன் இலவச இணைப்பாக வெளிவரவுள்ள வர்த்தமானி அறிவித்தலில் நீதி சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கான சட்ட ஆணைக் குழு திணைக்களத்தின் நிறைவேற்று சேவை வகுதியைச் சேர்ந்த செயலாளர் பதவிக்கு ஆட் சேர்ப்பு, தொழில்நுட்பவியல் நிறுவகம் மொறட்டுவ பல்கலைக்கழக தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதி 2023/2024, போன்ற பல விடயங்கள் வெளிவரவுள்ளன. பிரதிக்கு முந்துங்கள்.

பிரதமருக்கு பொப்பி மலர் அணிவிப்பு

உயிர்நீத்த பாதுகாப்புப் படைவீரர்களின் நினைவூரும் 'பொப்பி மலர்' தினத்தை முன்னிட்டு பாராளுமன்றத்தில் பொப்பி மலர் அணிவிக்கப்பட்டது. முன்னாள் பாதுகாப்புப் படை வீரர்கள் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் உபுல் பெரேராவினால் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு பொப்பி மலர் அணிவிக்கப் பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

03 பாராளுமன்றத்தில் செங்கோலை தொட்ட SJB MP மான்னப்பெரும ஒருமாதம் சபைக்கு வரத் தடை

கடன் மீட்சிக்கான இடைக்கால, நீண்ட கால வேலைத்திட்டத்துக்காக

இலங்கைக்கு முழுமையான ஆதரவை சீனா வழங்கும்

சீன நிதி அமைச்சர் லியு குன் (Liu Kun) உறுதிபடத் தெரிவிப்பு

இலங்கையின் கடன் மீட்சிக்காக இரு தரப்பினருக்கும் பொருத்தமான இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சீனா முழுமையான ஆதரவை வழங்க தயாராக இருப்பதாக சீன நிதி அமைச்சர் லியு குன் (Liu Kun) தெரிவித்தார்.

சீனாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீன நிதி அமைச்சருக்கும் இடையிலான இரு தரப்பு பேச்சுவார்த்தை நேற்று (19) காலை பீஜிங்கில் நடைபெற்றதோடு இதன் போதே சீன நிதி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவாலை சீனா நன்கு புரிந்துகொண்டுள்ளதாக தெரிவித்த சீன நிதி அமைச்சர், நெருக்கடியை சமாளிக்க இதுவரை

இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் வரவேற்றார்.

நெருக்கடியை சமாளிக்க இதுவரை இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் வரவேற்றார்

இலங்கையின் அபிவிருத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சீனா தொடர்ந்து பூரண ஆதரவை வழங்குமெனவும் சீன நிதி அமைச்சர் உறுதியளித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான பணப் பரிமாற்றம் தொடர்பில் நீண்டகாலமாக கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாகவும், சீனாவுடன் நெருக்கமாகச் செயற்படும் ஏனைய 06

அடுத்த ஆண்டு ஜூன் வரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது!

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் வரை, அவசியமான எரிபொருளுக்கான டெண்டர் செயற்பாடுகள் அனைத்தும் நிறைவடைந்து விட்டதால் அதுவரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் நுகர்வோருக்குத் தேவையான எரிபொருளை எவ்வித சிக்கலும் இன்றி வழங்க முடியும் என்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக தெரிவித்தார். இந்நாட்டில் எரிபொருளை விநியோகிக்கும் வாய்ப்பை சீனாவின் சினோபெக் நிறுவனத்துக்கு வழங்கியதன் மூலம் வருடத்துக்கு சுமார் 500 மில்லியன் டொலர்களுக்கு அதிகமான அந்நியச் செலாவணியை நாட்டில் சேமிக்க முடியமென எதிர்பார்க்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (19) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் 06

இஸ்ரேல்–பலஸ்தீன பிரச்சினை சபையில் ஒத்திவைப்பு விவாதம்

இஸ்ரேல் – பலஸ்தீன பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக தலையிடுமாறு கோரும் சபை ஒத்திவைப்பு விவாதத்தை, நாளை (20) நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (19) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

இதற்கு அமைய நாளைய தினம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்காது மு.ப 9.30 மணி முதல் 06

தேசிய மீலாத் விழா மன்னார் மாநகரில்

ஜனாதிபதி ரணில் தலைமையில் ஏற்பாடு

ஏ.எம்.ஜாவித்

தேசிய மீலாதுன் நபி விழா நாளை மறுதினம் (22) மன்னார் சிலாவத்துறை முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கவுள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்நிகழ்வில், புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், மன்னார் மாவட்டச் செயலாளர் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் 06

தரம்–5 புலமைப்பரிசில் வினாத்தாள் தினகரனில்

தினகரன் THINAKARAN கிரைகர்

தரம்–5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலவச மாதிரி வினாத்தாள் உங்கள் தினகரனில் இன்று தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் தொடர்ந்து வெளிவருகின்றது. பிரதிகளைப் பெற்று பயனடையுங்கள்.

IGP யை ஜனாதிபதியே நியமிக்க வேண்டும்

அரசியலமைப்புச் சபைக்கு கிடையாது

பொலிஸ் மாஅதிபரை ஜனாதிபதியே நியமிக்க வேண்டும். இந்த அதிகாரம் அரசியலமைப்புச் சபைக்கு கிடையாதென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படாத விவகாரம் 06

IMF இன் இரண்டாம் தவணை கடனுதவி விரைவில் கிடைக்கும்

பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நம்பிக்கை

சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்படும் நீடிக்கப்பட்ட கடன் திட்டத்தின் இரண்டாம் தவணை, விரைவில் கிடைக்குமென பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்கான பேச்சுவார்த்தைகள் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். 06

புலிகள் இயக்கம் குறித்து சர்ச்சையான கருத்து; விஜயகலா வழக்கிலிருந்து விடுதலை

கே.வி தவராசாவின் வாதங்களையடுத்து தீர்ப்பு

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீள் உருவாக்கம் தொடர்பில் கருத்து வெளியிட்டாரென தெரிவித்து, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று அவரை விடுதலை செய்தது. விஜயகலா மகேஸ்வரன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா இவருக்காக வாதிட்டார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் 06

மாணவர்கள், தொழிலாளர்களது வாழ்க்கையுடன் விளையாடாதீர்

இன்றைய ஹர்த்தால் குறித்து என்.ரவிக்குமார் காட்டம்

மட்டக்களப்பு மத்திய குறூப் விசேடநிருபர்

வடக்கு, கிழக்கில் இன்று தேவையற்ற ஹர்த்தால்களை நடத்தி பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களினதும், அன்றாடம் தொழில் புரிவோரதும் வாழ்வுடனும் விளையாட வேண்டாமென புதிய ஜனநாயக மக்கள் கட்சியின் தலைவர் என். ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடத்தப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகவும், நீதவனாகவும் கடமையாற்றிய சரவணராஜா, தனக்கு உயிர் அச்சுறுத்தல் 06

ஐக்கிய தேசிய கட்சியின் விசேட மாநாடு நாளை

புதுமையான முறையில் மீளுருவாக்கம்

ஐக்கிய தேசிய கட்சியின் விசேட மாநாடு நாளை சனிக்கிழமை (21) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் சுகததாச உள்ளக அரங்கில் மாலை 03 மணிக்கு நடைபெறவுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியை புதுமையான முறையில் மீளுருவாக்கம் செய்யும் வகையிலும், ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராவதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்குமான முன்னோடியாக இந்த விசேட மாநாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக 06

கோழி இறைச்சி விலையில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றம்

சந்தையில் பல விலைகளில் விற்பனை

சந்தையில் கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ளதால் கோழி இறைச்சிக்கான தேவையும் குறைந்துள்ளதாக கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. கோழி இறைச்சிக்கான சரியான கட்டுப்பாட்டு விலை இல்லாமை மற்றும் உற்பத்தி செலவு அதிகரிப்புக்களாலே, 06

உணவுப் பொதிக்குள் பூரான்; திருமலையில் உரிமையாளர் கைது

திருகோணமலை நகரிலுள்ள உணவகமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட உணவுப் பொதியில் பூரான் இருந்ததாக, வாடிக்கையாளர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். தாம், கொள்வனவு செய்த மதிய உணவுப்பொதியில் பூரான் இருந்ததை அவதானித்தவர், இது குறித்து பொதுச் சுகாதார பரிசோதகருக்கு முறைப்பாடு செய்தார். இதனையடுத்து கடை உரிமையாளர் மற்றும் சமையற்காரர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். கடையை மூடியதுடன், கைதான இருவரரும் எச்சரிக்கையின் பின் சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு

கண்டி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெய்து வரும் கடும் மழையால் பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் 06

ரூபா 14 இலட்சம் பெறுமதி: சட்டவிரோத சிகரெட்டுகள் விமான நிலையத்தில் சிக்கின

ஒருவர் கைதாகி பிணையில் விடுவிப்பு

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சுமார் 14 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வந்தவர், நேற்று (19) காலை கைது செய்யப்பட்டார். கட்டுநாயக்க விமான நிலைய 06

நாட்டில் எலிக்காய்ச்சல் பரவல் குறித்து எச்சரிக்கை

சுகாதார மேம்பாட்டுப்பிரிவு அறிக்கை

இலங்கையில் எலிக்காய்ச்சல் பரவல் அதிகரித்து வருதாகவும் இது தொடர்பில் எச்சரிக்கை மிக அவசியமென்றும் சுகாதார மேம்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.

எலிக்காய்ச்சல் பரவுவதன் நிலை தொடர்பில் (18) விசேட அறிவித்தலை 06

நகர்வலம்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவிப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சில கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்

வடமேல் மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ஓய்வூதிய பணிக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு குருநாகல் கூட்டுறவு கிராமிய வங்கி சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கால்நடை வள இராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள திஸாநாயக்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

தற்போது பாலர் பாடசாலைகளில் கற்பித்துக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு சில கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பாக அதற்குப் பொறுப்பான அமைச்சர், அமைச்சரவை பத்திரத்தை தயாரித்து வருகின்றார்.

எதிர்காலத்தில் இந்நாட்டின் முன்பள்ளி துறைக்கு இது நல்ல தொரு விடயமாக அமையும். குழந்தைகளை எதிர்காலத்தில் சரியான பாதைக்கு கொண்டு செல்வதில் பாலர் பாடசாலை முக்கிய பங்கு வகிக்கிறது.

நாட்டுக்கு நல்ல எதிர்கால குடிமகனை உருவாக்க குழந்தைகளின் மனம் நன்றாக இருக்க வேண்டும்.

ஒரு சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வீட்டில் மிகவும் கொடூரமாக நடத்துகின்றனர். இதனால் குழந்தைகளின் இயல்பு

நிலை கொடூர மனோநிலை மாற்றத்துக்கு உள்ளாகிறது.

இந்த மனநிலையுடன் வீட்டில் இருந்து வரும் குழந்தையை ஆசிரியர்கள் நல்ல முறையில் எப்படி தயார்படுத்துவது.

காரணம், பாலர் பாடசாலைக்கு வரும் குழந்தைகள் மிகக் குறுகிய நேரமே ஆசிரியருடன் இருக்கின்றனர். எனவே, நல்ல குழந்தையை உருவாக்குவதில் பெற்றோருக்கும் பெரும் பங்கு உள்ளது என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என்றார்.

மாத்தறை மாவட்டத்தில் அடைமழை; பல பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கின

(வெலிகம தினகரன் நிருபர்)

மாத்தறை மாவட்டத்தில் தொடர்மழை காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

வீதிகள், வயல் நிலங்கள், பயிர்ச் செய்கை நிலங்கள் போன்றன நீரில் மூழ்கி உள்ளன. வீதியோர வியாபாரிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச தனியார் நிறுவனங்களில் கடமை புரியும் அதிகாரிகள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் என பல தரப்பினரும் இவ்வாறு பல பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

இப்பகுதி பாடசாலைகளில் 2ம் தவணைப் பரீட்சைகள் இடம் பெற்று வரும் இவ் வேளையில், அடைமழை காரணமாக மாணவர்கள், ஆசிரியர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். வடிகான்கள் நிறைந்து வழிந்தோடுவதால் பல்வேறு தொற்று நோய்கள் ஏற்படவும் காரணமாக உள்ளது.

இச்சீரற்ற காலநிலையால் டெங்கு நோய், எலிக்காய்ச்சல் போன்றன பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர். சிறுவர்களுக்கு கண் நோய் பரவும் நிலையும் காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

கண் நோயால் பாதிக்கப்பட்டவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கிணற்றில் விழுந்திருந்த நிலையில் தாய் உயிருடன் மீட்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கொக்காவெவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட கடாரம்புர பிரதேசத்தில் தாயொருவர் அவரது மூன்று வயது குழந்தையுடன் வீட்டுத் தோட்ட கிணற்றில் விழுந்திருந்த நிலையில் மீட்கப்பட்டு இருவரையும் கலென்பிந்துனுவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது குழந்தை கடந்த செவ்வாய் கிழமை (17) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிணற்றில் விழுந்திருந்து மீட்கப்பட்ட தாய் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டுக்கு தொலைவில் அமைந்துள்ள வீட்டுத்தோட்ட கிணற்றுக்கு அருகாமையில் குழந்தைக்கு பால் கொடுக்கும் போது குழந்தை கிணற்றில் விழுந்ததனால் குழந்தையை மீட்பதற்காக கிணற்றில் குதித்ததாக தாய் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொக்காவெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

பலஸ்தீன் இஸ்ரேல் நெருக்கடியை தீர்க்க

ஐ.நா மற்றும் உலக நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டும்

பலஸ்தீன் – இஸ்ரேல் நெருக்கடியை விரைவில் முடிவுக்கு கொண்டு வந்து அமைதி, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்ப ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்று பலஸ்தீனுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான எம். பௌஸான் அன்வர் தெரிவித்துள்ளார். இவ்வாறான நடவடிக்கையின் ஊடாக பலஸ்தீன் இஸ்ரேல் விவகாரத்தில் அமைதி சமாதானத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், பலஸ்தீனில் நான் தூதுவராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் அங்குள்ள மக்கள் மாத்திரமல்லாமல் வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் மக்களும் அரசியல் பிரதிநிதிகளும் கூட பல விதமான நெருக்கடிகளுக்கும் கெடுபிடிகளுக்கும் உள்ளாவதை நேரில் அவதானித்துள்ளேன். இதற்கு இஸ்ரேல் – பலஸ்தீன் நெருக்கடியே அடிப்படைக் காரணமாகும்.

இந்த நெருக்கடி நீடிப்பதால் பலஸ்தீன் இஸ்ரேல் மாத்திரமல்லாமல் பிராந்திய நாடுகளும் அமைதி சமாதான நிலையை இழந்துள்ளன.

இக்காலப்பகுதிக்குள் இப்பிராந்தியம் மூன்று நான்கு யுத்தங்களை சந்தித்துள்ளது. இருந்த போதிலும் இப்பிரச்சினைக்கு இன்னும் தீர்வு எட்டப்படவில்லை.

கடந்த 7, 8 தசாப்தங்களாக நீடிக்கக்கூடிய இந்நெருக்கடியானது முதலாம் உலகப் போரின் பின்னர் உருவானது. மேற்குலகின் அன்றைய ஒரு சில சக்திகளால் தோற்றுவிக்கப்பட்ட நெருக்கடியே இது. அந்த சக்திகள் அன்று மேற்கொண்ட இந்நடவடிக்கையின் விளைவாக தோற்றம் பெற்ற இந்நெருக்கடி, இரத்தம் சிந்துதலுகளும் மரணங்களும் வழிவகுத்துள்ளன. இந்த நிலையைத் தொடர்ந்தும் நீடிக்க இடமளிக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

'Hassim Omar Foundation' அனுசரணையில் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் திட்டத்தின் 4வது கட்டமாக காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்துக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. நிலையத்தின் தலைவர் கவிமாமணி ஜவ்பர் கானுக்கு ஒரு லட்சம் ரூபாய் பணத்தை நிறுவனத்தின் பணிமனையில் வைத்து புரவலரினால் வழங்கி வைக்கப்பட்டபோது. அருகில் புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதாமேத்தா, முபாரக் அப்துல் மஜீத் ஆகியோர் உடன் காணப்படுகின்றனர்.

சமூக சேவையாளர் ழரீப் மௌலானா காலமானார்

(அஜ்வாத் பாஸி)

பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த சமூக சேவையாளரும் மாணிக்க வியாபாரியுமான மொஹமட் ழரீப் மௌலானா (வயது 60) நேற்று முன்தினம் (18) இரவு சீனன்கோட்டையில் காலமானார்.

சீனன்கோட்டை பிரதேச சமூக சேவை அமைப்புகளில் தன்னை ஈடுபடுத்தி அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இவர், சன்ரைஸ் உதைபந்தாட்ட அணியின் ஆரம்ப, சிரேஷ்ட உறுப்பினராவார். அணியின் வெற்றிக்காக பலமுறை தன்னை ஈடுபடுத்தி, அணியின் வெற்றியில் பங்காற்றிய சிறந்த வீரரென்ற பட்டத்தையும் களுத்துறை மாவட்டத்தில் முன்னணி சிறந்த விளையாட்டு வீரர் என்ற நாமத்தையும் பலமுறை தனதாக்கிக் கொண்ட வீரராவார். அத்துடன் ஊரிலுள்ள வளர்ந்து வரும் இளம் உதைபந்தாட்ட வீரர்களுக்கும் இலவச பயிற்சிகளையும் வழங்கி சிறந்த முறையில் வழிநடாத்தினார். மூன்று பிள்ளைகளின் தந்தையான அன்னாரின் ஜனாஸா நேற்று மாலை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்னாரின் ஜனாஸாவில் உலமாக்கள், ஊர் பிரமுகர்கள், விளையாட்டு வீரர்கள், அரசியல்வாதிகள் உட்பட சன்ரைஸ் விளையாட்டு கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் பதவியேற்று ஒன்பதாண்டு நிறைவு

உலகில் முன்னணி நாடாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ள சவுதி அரேபியா

சவூதி அரேபியாவின் மன்னரும் இரு புனிதப் பள்ளிவாசல்களின் பாதுகாவலருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத் சவுதி அரேபியாவின் மன்னராகப் பதவியேற்று ஒன்பது வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இது தொடர்பாக பல்வேறு நிகழ்வுகள் சவுதி அரேபியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளன.

மன்னர் சல்மான் பதவியேற்ற பின்னர் சமூக, பொருளாதார, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு மட்டத்தில் சவுதி அரேபியாவில் பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் கோடிக்கணக்கான ரியால் செலவிடப்பட்டு வருகின்றது. இதன் ஊடாக பொருளாதார ரீதியில் மாத்திரமல்லாமல் சமூக, கலாசார ரீதியிலும் சவுதியில் பாரிய முன்னேற்றங்கள் இக்காலப்பகுதியில் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த 09 வருட காலப்பகுதியில் சவுதி அரேபியாவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இதன் பயனாக பிராந்திய நாடுகளால் மாத்திரமல்லாமல் உலகளாவிய நாடுகளாலும் திரும்பிப் பார்க்கப்படும் அளவுக்கு சவுதி முன்னேற்றமடைந்துள்ளது.

பயங்கரவாதம், போதைப்பொருள்

குற்றங்களை முற்றாக ஒழித்துக் கட்டுவதில் அதிகூடிய கவனம் செலுத்தி செயற்பட்டுவரும் சவுதி அரேபியா மனிதாபிமானம், மனித நேயம் என்பவற்றின் மேம்பாட்டின் நிமித்தம் பல்வேறு வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.

சவுதியைக் கட்டியெழுப்புவதற்கு மன்னருக்கு பக்கபலமாக பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மான் செயற்பட்டு வருகின்றார். அதன் ஊடாக உலகில் தனித்துவம் மிக்க நாடாக வளர்ச்சி பெற்று வருகின்றது சவுதி அரேபியா.

அதேநேரம் பிராந்தியத்திலும் உலக நாடுகள் மத்தியிலும் அமைதி, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முக்கிய பங்காற்றிவரும் தற்போதைய சவுதி அரேபிய தலைமைத்துவம் அதன் நிமித்தம் அதிமுக்கியத்துவம் அளித்து செயற்பட்டு வருகின்றது.

அந்த வகையில் உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் இருநாடுகளுக்கும் இடையிலான சமாதானத்தை பேச்சுவார்த்தைக்கு சவூதி அரேபியா அண்மையில் மத்தியஸ்தம் வகித்தது. அத்தோடு பலஸ்தீன் – இஸ்ரேல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருவதிலும் அர்ப்பணிப்பு மிக்க இராஜதந்திர முயற்சிகளையும் அந்நாடு முன்னெடுத்துள்ளது. உலகில் முன்னணி நாடாக சவுதியைக் கட்டியெழுப்புவ

தில் அதிகூடிய கவனம் செலுத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் மன்னர் சல்மானும் இளவரசர் முஹம்மத் சல்மானும் வளர்முக நாடுகளின் சமூக பொருளாதார முன்னேற்றங்களுக்கும் அளப்பரிய பங்களிப்புக்களை நல்கி வருகின்றனர்.

அந்த வகையில் இலங்கையில் வீதி, பாலங்கள், வைத்தியசாலைகள், பல்கலைக்கழகங்கள் உட்பட பல்வேறு துறைகளதும் அபிவிருத்திகளுக்கும் சவுதி உதவி, ஒத்துழைப்புக்களை நல்கி வருகின்றது.

இதேவேளை ரியாத்தைத் தலைமையகமாகக் கொண்டுள்ள மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையத்தின் ஊடாக பலவகையான மனிதாபிமான உதவி ஒத்துழைப்புக்கள் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இலங்கையில் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேருக்கு விழிவெண்படல சத்திர சிகிச்சையை முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டது.

இதன் நிமித்தம் தென்மாகாணத்தில் வலஸ்முல்லவிலும் கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியிலும் இரண்டு விழிவெண்படல சத்திரசிகிச்சை முகாம்கள் நடாத்தப்பட்டன. இம்முகாம்களில் இலவசமாக கண் பார்வைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதோடு மூக்குக்கண்ணாடிகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

அந்த வகையில் விஷன் 2030 வேலைத்திட்டம், நியோம் திட்டம் என்பவற்றின் ஊடாகவும் சவூதி அரேபியாவை கட்டியெழுப்புவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மன்னர் சல்மான் தனது சொந்த நாட்டு மக்களது பிரச்சினைகள் போன்றே உலக மக்களதும் குறிப்பாக முஸ்லிம்களதும் தேவைகளையும் பிரச்சினைகளையும் மிகுந்த அக்கறையோடு நோக்கக்கூடிய தலைவராக இருந்து வருகின்றார். இவரது பதவிக் காலத்தில் சவூதி அரேபியா அடைந்து கொண்டுள்ள முன்னேற்றங்களும் வளர்ச்சிகளும் வரலாற்றில் அழியாத்தடம் பதித்தவையாக உள்ளன.

ஆகவே மன்னர் சல்மான் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் ஸல்மான் ஆகியோரின் தலைமைத்துவமும் பணிகளும் நீடித்து நிலைத்திட இறையருள் கிடைத்திடட்டும்.

மௌலவி எம்.எச்.ஷேஹுத்தீன் மதனி
அல்ஹிக்மா நிறுவனம்
கொழும்பு

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஒக்டோபர் 20 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	04.41
லுஹர்	11.57
அஸர்	03.16
மஃரிப்	05.55
இஷா	07.05

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் ஐப்பசி 03

ராகுகாலம் : பகல் : 10.32 - 12.02வரை
சுபநேரம் : காலை : 06.02 - 07.32வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

ஊடகவியலாளர் சுபாஷினியின் தாயார் காலமானார்

எமது சகோதர தினமின நாழிதழின் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி சுபாஷினி சேனாநாயக்கவின் தாயார் காலமானார்.

பிரேதம்,பொரளை, கித்துல்வத்த வீதி, எப். ஆர். சேனநாயக்கா இறுதிச்சடங்கு மண்டபத்தில் (மயானத்திற்கு 06

காஸாவில் மரணித்தோருக்கு துஆ, மறைமுக ஜனாஸா தொழுகை

பலஸ்தீன் மற்றும் காஸாவில் நிகழ்த்தப்படுகின்ற மனிதாபிமானமற்ற இனப்படுகொலைகளாலும் 'அல்அஹ்லி' அரபு வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட 06

தனியார் பல்கலைகள் அமைப்பது பொருளாதாரத்துக்கு பங்களிக்கும்

உயர் கல்விக்கான வாய்ப்புகளால் தொழினுட்ப சவால்களை வெல்லாலம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் மேலும் தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பாக அமையும் எனவும் 25க்கும் மேற்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களை அமைத்தாலும் சிறந்தது எனவும் முன்னாள் உயர் கல்வி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்பி.திசாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று, தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவது அரசாங்கத்தின் கொள்கையா? என எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே எஸ்.பி.திசாநாயக்க எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அனைத்து தனியார்

முன்னாள் உயர்கல்வி அமைச்சர் எஸ். பி.திசாநாயக்க

பல்கலைக்கழகங்களுக்கும் நான் அமைச்சராக பதவி வகித்த காலத்திலேயே, அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் 25க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களை நாட்டில் அமைத்தாலும் அவை எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்பினையே செய்யும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதனால், உயர் கல்விக்கான தனியார் பல்கலைக்கழகங்களை மேலும் நாட்டில் உருவாக்குவது மிகவும் அவசியமானது என்பதை குறிப்பிடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, நாம் எமது காலத்தில் உலக வங்கியின் நிதி உதவியைப் பெற்று தனியார் பல்கலைக்கழகங்களை கண்காணிப்பு செய்யும் திட்டம் ஒன்றை முன்னெடுத்ததாக, இதன் போது எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி தெரிவித்தார். இது தொடர்பில் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டது. எனினும் அது பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ், சிங்கள மொழி மூலமான 877 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சப்ரகமுவ மாகாணத்தில் 877 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆரச்சி (19) தெரிவித்தார்

இந்நியமனங்களை அரசியல் மற்றும் ஏனைய அழுத்தங்கள் எதுவுமின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க அறிவுறுத்தியுள்ளார். இதுபற்றி, சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆரச்சி தெரிவித்தார்.

இம்மாகாண பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர வகுப்புக்க 06

SJB MP மான்னப்பெருமவுக்கு ஒருமாதம் தடை விதிப்பு

சபாநாயகரின் அறிவுறுத்தலையும் மீறி சபை நடுவில் முறைகேடாக செயற்பட முனைந்த பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும நேற்று முதல் நான்கு வாரங்களுக்கு சபையிலிருந்து இடை நிறுத்தப் பட்டுள்ளார்.

சபை மத்தியில் பிரவேசித்து நிலையியற் கட்டளைக்கு முரணாக செங்கோலை கைகளால் தட்டிய அவரை 4வாரங்களுக்கு பாராளுமன்ற நடவடிக்கைகளிலிருந்து இடை நிறுத்துவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார். 06

பாலஸ்தீன தூதுவரை சந்தித்து கவலை தெரிவித்த எம்.பிக்கள்!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், இலங்கையில் உள்ள பாலஸ்தீன தூதரகத்தில், தூதுவர் கலாநிதி. ஸுஹைர் எம்.எச்.டார் செயிட்டை நேற்று (19) சந்தித்துக் கலந்துரையாடினார்.

எல்லை மீறிய இஸ்ரேலின் எதேச்சாதிகாரப் போக்குகளால், காஸாவில் ஏற்பட்டுள்ள அவலங்கள் 06

வரவு செலவு திட்டம் நாட்டு மக்கள் பயனடையும் வகையில் அமையும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிலையான பொருளாதாரத்தை இலக்காகக் கொண்டு நாட்டு மக்கள் பயனடையும் வகையில் அமையும் என, நிதி ராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொருளாதார மேம்பாட்டிற்கான தற்போதைய தீர்மானங்கள் கடுமையானதாக காணப்பட்டாலும், நாட்டின் எதிர்காலம் சிறந்ததாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான 06

"வடநிலா" கவிதை நூல் வெளியீட்டு விழா

நூலாசிரியர் மஸாஹிரா கனி எழுதிய "வடநிலா" கவிதை நூல் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை புத்தளம் தில்லையடி முஸ்லிம் மத்திய மஹாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும் இந்நிகழ்வில்,பிரதம அதிதியாக பேராசிரியர் டாக்டர், எஸ்,எல்,எப்.அக்பர் பங்கேற்கிறார்.விசேட அதிதிகளாக முன்னாள் அதிபரும்,தேசிய கல்வி நிறுவகத்தின் கருத்திட்ட அதிகாரியுமான எம்,ஏ,வாஹித் மற்றும் கணக்காளரும் திறை சேரியின் முன்னாள் பணிப்பாளருமான வீ,எம்,அமீன் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் றாஹிலாஸியாத் ஆகியோரும் பங்கேற்கின்றனர். கௌரவ அதிதிகளாக முன்னாள் மாகாண சுகாதார பணிப்பாளர் டாக்டர் என். பரீட், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் சட்டத்தரணி ஏ.எம், பாயிஸ், முன்னாள் பிரதேச செயலாளர் எம். முகுசீன், மஹ்றூப் ஆசிரியர்,றாசிக் ஆசிரியர், அஸீஸ் ஆசிரியர், முன்னாள் உதவிப் பணிப்பாளர் யாசீன், முன்னாள் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ. பரீட், மௌலவி அப்துல் ஜப்பார் ஆசிரியர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கேள்விக்கான அழைப்பு

மாவட்ட பொது வைத்தியசாலை - எம்பிலிப்பிட்டிய

மகப்பேற்றுப் பிரிவிற்குத் தேவையான அல்ட்ராசவுன்ட் ஸ்கேனர் இயந்திரத்தை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக்காட்டுதல் மற்றும் பராமரித்தல்

விடய இல. DGH/EMB/F03/11/02/2023/01

எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக்குழுவின் தலைவரால், இவ்வைத்தியசாலையின் மகப்பேற்று பிரிவிற்கு அல்ட்ராசவுன்ட் ஸ்கேனர் இயந்திரத்தை வழங்குதல், நிறுவுதல், செயற்பத்திக்காட்டுதல் மற்றும் பராமரித்தலுக்கு உதவுவதற்காக தகைமையுள்ள இலங்கை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டி கேள்வி முறைமையின் பிரகாரம் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் சகல கேள்விதார்களும் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத சித்திகரமான கேள்விதார்களாக இருத்தல் வேண்டும். ஆர்வம் காட்டுகின்ற திறன் மற்றும் தகைமையுடைய (CDDA/NMRA) கேள்வி வைப்பாளர்களால் மேலதிக தகவல்களை மற்றும் கேள்வி ஆவணங்களை எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர் (தொ. பே. இல. 0707072718) இற்கு எழுத்து மூலம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 15000.00 (பதினைந்தாயிரம் மட்டும்) செலுத்தி 2023.10.20 முதல் 2023.11.09 வரை வாரத்தின் வேலை நாட்களில் முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 2.00 இற்கு இடைப்பட்ட காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வியுடன் சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணைமுறி ரூபா 250,000.00 (இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் மட்டும்) ஆவதுடன், அது 2024.03.11 வரை செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்விப் பிணைக்கு அமைவாகாத எந்தக் கேள்வியும் முன் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

04. சகல கேள்விகளும் இரு பிரதிகளும், வேறுவேறாக உறைகளில் இட்டு மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு மீண்டும் ஒரு உறையில் உட்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலை மகப்பேற்று பிரிவிற்கு தேவையான அல்ட்ராசவுன்ட் ஸ்கேனர் இயந்திரத்தை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக்காட்டுதல் மற்றும் பராமரித்தல்" என்று குறிப்பிட்டு எம்பிலிப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக்குழுவின் தலைவருக்கு 2023.11.10 பிற்பகல் 2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடையும் வேளையில் வருகை தந்துள்ள பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பிற்பகல் 2.30 இற்கு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும்.

05. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.10.31 முற்பகல் 10.30 இற்கு வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். சகல கேள்விதாரர்களும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

06. எந்தக் கேள்வி சம்பந்தமாகவும் செலவுகள் பற்றி இவ்வைத்தியசாலை பொறுப்புக்கூறாது. மேலும் எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தலைவருக்கு உரியது.

07. கேள்வி ஆவணங்களில் மேற்கொள்ளப்படும் எந்த மாற்றங்களின் அருகிலும் கேள்விதாரரால் கையொப்பம் இட்டிருத்தல் வேண்டும்.

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,
எம்பிலிப்பிட்டிய.

2023.10.20
தொ.பே. இலக்கம் 047-2230261

இலங்கை வங்கி

ஏலவிலை கோரல்

இலங்கை வங்கிக்கான வாடிக்கையாளர் நம்பிக்கை முகாமைத்துவத் தீர்வுகள் மற்றும் வணிகர் தொடர்பு முகாமைத்துவத்தினை வடிவமைத்தல், வழங்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

விலைகூறல் இல: P/PROC/2023/166

1. இலங்கை வங்கிக்கான வாடிக்கையாளர் நம்பிக்கை முகாமைத்துவத் தீர்வுகள் மற்றும் வணிகர் தொடர்பு முகாமைத்துவத்தினை வடிவமைத்து, வழங்கி, நடைமுறைப்படுத்தி, பராமரிப்பதற்கு ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலைகூறல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

2. ஏல விலைகூறுவோர் விலைகூறல் மதிப்பீட்டின்போது கருத்திற்கொள்ளப்படுவதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

   I. கடந்த 03 நிதியாண்டுகளின் (2021/22, 2020/21 மற்றும் 2019/20 அல்லது 2022,2021 மற்றும் 2020) ஆகக்குறைந்த சராசரி வருடாந்த வருவாயானது 50.0 மில்லியன் ரூபாயாக இருக்க வேண்டும்.

   II. கடந்த 05 ஆண்டுகளுக்குள் இவ்விலைகோரல் இறுதித் திகதி வரையில் இலங்கையில் வாடிக்கையாளர் நம்பிக்கை முகாமைத்துவத் தீர்வை ஆகக்குறைந்தது ஒரு வங்கியியல்/நிதி நிறுவனத்திற்காவது நடைமுறைப்படுத்தி தற்போதும் செயற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். (கடந்த 05 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்பட்ட அனைத்து கட்டளைகளினதும் ஆவண ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

   III. விலைகூறுபவர் பல்பொருள் அங்காடிகள், பிரயாணம் மற்றும் ஓய்வு, ஆடைத் துறை, பொழுதுபோக்கு, ஆகாரபானம், வாழ்வியல்முறை உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்களை/சேவைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 200 இற்கும் மேற்பட்ட வணிகர்களின் வணிக வலையமைப்பைக் கொண்டிருக்க வேண்டும்.

3. விலைகூறுவோர் மேற்கூறப்பட்ட தகுதி அளவுகோல்களை மெய்ப்பிப்பதற்கான சான்றுப்படுத்தப்பட்ட ஆவண ஆதாரங்களை விலை கூறல் ஆவணங்களுடன் சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும். அத்தகைய ஆவண ஆதாரங்களை சமர்ப்பிக்கத் தவறின் குறித்த விலைகூறலானது நிராகரிக்கப்படும்.

4. ஏல விலைகூறலானது தேசிய போட்டிசார் விலைகூறல் நடைமுறைகளூடாக (NCB) நடத்தப்படும்.

5. இவ்விலைகூறலில் ஆர்வமுள்ளோர் மீளளிக்கப்படாத 25,000.00 ரூபாயை வரிகளுடன் செலுத்தி இங்கு கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் எழுத்து மூலமான விண்ணப்பத்தினை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலுள்ள முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியைக் கொள்வனவு செய்யலாம்.

6. முக்கிய திகதிகள்

   I. விலைகூறல் ஆவணங்கள் வெளியிடப்படும் இறுதித் திகதியும் நேரமும்: 2023.11.09 14:30 மணி

   II. விலைகூறல் ஆவணங்கள் வெளியிடப்படும் நேரம்: 09:00 மணியிலிருந்து 14:30 மணி வரை

   III. விலைகூறல்களுக்கான இறுதித் திகதியும் நேரமும்: 2023.11.10 10:00 மணி

   IV. விலைகூறல்கள் திறக்கப்படும் நேரமும் திகதியும்: விலைகூறல்கள் மூடப்பட்ட மாத்திரத்தில்

   V. விலைகூறல்கள் செல்லுபடியாவது 2024.02.09

7. இவ்விலைகூறலுக்கான முற்கூட்டிய கூட்டமானது கொழும்பு 01, இலங்கை வங்கித் தலைமையகத்தின் 14ஆம் தளத்தில் அமைந்துள்ள மாநாட்டறையில் 2023.10.30 திகதி முற்பகல் 11.00 மணிக்கு இடம்பெறும்.

8. இலங்கை வங்கி தவிர்ந்த இலங்கையில் செயற்படும் வணிக வங்கியொன்றினால் 1.0 மில்லியன் ரூபாய்க்கு வழங்கப்பட்டதும் 2024.03.08 ஆம் திகதி வரையில் செல்லுபடியானதுமான விலைகூறல் பிணைமுறி மற்றும் ஆகக்குறைந்த விவரக்குறிப்புகளுடன் விலைகூறல் ஆவணங்களை இணைத்து அனுப்புதல் வேண்டும். விலைகூறல் பிணை முறிகளுக்குப் பதிலாக பண வைப்புகள்/கொடுப்பனவுக் கட்டளைகள்/வங்கி உண்டியல்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். விலைகூறுபவரினால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9. எந்தவிதக் காரணங்களையும் கூறாது ஏதேனும் அல்லது அனைத்து விலைகூறல்களையும் நிராகரிக்கும் உரிமையையும் விலைகூறலின் ஏதேனும் ஓர் பகுதியை மாத்திரம் ஏற்றுக்கொள்ளும் உரிமையையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு
14ஆம் மாடி, இலங்கை வங்கித் தலைமையகம்
"BOC" சதுக்கம், இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி – +94 112 544310, +94 112 204270
மின்னஞ்சல் - procurement@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (ika) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங், இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

தினகரன்

THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 03ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 04

குறள் தரும் சிந்தனை

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு

தமக்கு வரும் பழிக்காக மட்டுமின்றிப் பிறர்க்கு வரும் பழிக்காகவும் வருந்தி நாணுகின்றவர், நாணம் எனும் பண்பிற்கான உறைவிடமாவார்.

இலங்கையின் முதலாவது கடற்றொழில் முதலீட்டு வலயம்

இலங்கையானது இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கும் முக்கிய நாடுகளில் ஒன்றாகும். நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள இந்நாடு கடல் வளத்தையும் சொந்தமாகக் கொண்டுள்ளது. கடலானது நிலத்தைப் போன்று இயற்கையாகவே எண்ணிறைந்த வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

இருந்த போதிலும் இலங்கைக்கு சொந்தமான கடல் பரப்பில் காணப்படும் வளங்களில் பெரும்பகுதி இன்னும் பயன்படுத்தப்படாத நிலையிலேயே காணப்படுகிறது. இற்றைவரையும் இந்நாட்டைச் சூழவுள்ள மீன்வளம்தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. இக்கடற்பரப்பில் பாரியளவு மீன்வளம் காணப்படுகிறது. அதனால் இக்கைத்தொழில் துறையில் 2.4 மில்லியன் மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்திற்கு இந்நாட்டு கடற்றொழில்துறை குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கி வருகின்றது. அதுவே பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

ஆனால் கடலில் மீன்களுக்கு அப்பால் பல்வேறு வளங்கள் இயற்கையாகவே காணப்படுகின்றன. இருந்த போதிலும் அந்த வளங்களை நாட்டின் பொருளாதார நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்வது குறித்து போதியளவில் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் நாடென்ற வகையில் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்கு கடல்வளத்தையும் பயன்படுத்திக் கொள்ள முடியும். கடல்வளத்தைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ள பல நாடுகள் உலகில் உள்ளன. எமது அயல்நாடான மாலைதீவின் பொருளாதாரத்தின் அடித்தளமே கடல்வளத்தில்தான் அமைந்துள்ளது.

எனினும் தமக்குச் சொந்தமான நிலத்திலும் கடலிலும் இயற்கையாகவே வளங்கள் நிரம்பப் பெற்று இருந்தும் கூட இலங்கை கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. ஆன போதிலும் அந்த நெருக்கடியில் இருந்து விரைவாக மீட்சி பெறும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களின் பயனாக நாடு மீட்சி பெற்று தற்போது மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்திருக்கிறது.

நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பவென பரந்த அடிப்படையில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள இன்றைய சூழலில், நாட்டின் நாலாபுறமும் கடலில் காணப்படும் வளங்களையும் பயன்படுத்திக் கொள்ளத் தவறலாகாது. இவ்வளங்களையும் பொருளாதார மேம்பாட்டுக்கு பயன்படுத்திக் கொள்ளும் போது நாட்டின் பொருளாதார மேம்பாடு துரிதமடையும். பொருளாதாரம் பல முறையில் கட்டியெழுப்பப்படுவதற்கும் பக்கத்துணையாக அமையும்.

இவ்வாறான சூழலில் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு நாட்டைச் சூழவுள்ள கடல் வளத்தைப் பயன்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவமும் தற்போது உணரப்பட்டிருக்கிறது. அதன் வெளிப்பாடாக வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு கடற்றொழிலுக்கென தனியான முதலீட்டு வலயமொன்றை அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் முதலாவது முதலீட்டு வலயமாகவே இது விளங்குகிறது. இவ்வலயமானது இந்நாட்டின் கடற்றொழில் துறையில் ஒரு திருப்புமுனையாக அமையும். இந்நாட்டின் கடற்றொழில்துறையின் மறுமலர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இவ்வலயம் பின்புலமாக அமையும். குறிப்பாக இந்நாட்டு கடற்றொழில் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட பல வகையான முதலீடுகள் இவ் வலயத்தை நோக்கி வந்து சேரும். இதனை உறுதிபடக் கூறலாம்.

குறிப்பாக மீன்பிடிக் கைத்தொழிலோடு சம்பந்தப்பட்ட முதலீடுகள் மாத்திரமல்லாமல், கருவாடு உற்பத்தி, ரின் மீன் உற்பத்தி, மீன்பிடிப் படகு, வள்ளங்கள் மற்றும் வலைகள் உற்பத்திகள் அடங்கலாக கடற்றொழில் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து முதலீடுகளும் இங்கு வர முடியும்.

கடற்றொழிலுக்கென தனியான முதலீட்டு வலயமொன்றை அமைக்கும் நடவடிக்கைகள் தற்போது இங்கு முன்னெடுக்கப்பட்ட போதிலும் இப்பிராந்தியத்திலுள்ள பல நாடுகள் இவ்வாறான பல முதலீட்டு வலயங்களை ஏற்கனவே அமைத்துள்ளன. அவற்றின் ஊடாக அந்தந்த நாடுகள் பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியனவாக உள்ளன.

அந்த வகையில் இம்முதலீட்டு வலயத்தின் ஊடாக கடற்றொழில் சம்பந்தப்பட்ட முதலீடுகள் மாத்திரமல்லாமல் அந்நிய செலாவணியும் இங்கு வந்து சேரும். அவற்றின் ஊடாக புதிய தொழில் வாய்ப்புகளும் உருவாவதோடு இந்நாட்டின் வேலைவாய்ப்பின்மைக்கு குறிப்பிடத்தக்களவில் தீர்வு வழங்கக் கூடியதாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

முப்பெரும் தேவியரின் அருள் வேண்டி அனுஷ்டிக்கும் நவராத்திரி விரதம்

சைவசமய விழாக்களில் நவராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நவராத்திரிவிரதம் ஆரம்பமாகியது. புரட்டாதி மாதத்தில் கொண்டாடப்படும் இவ்விழாவில் முதல் மூன்று நாட்களும் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்கள் இலக்குமிக்கும், கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதிதேவிக்குமாக ஒன்பது நாட்கள் கொண்டாடப்பட்டு, இறுதியாக பத்தாம் நாள் விஜயதசமிஆயுதபூஜையாக கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தில் வித்தியாரம்பம் நடைபெறும்.

சக்திவழிபாடே தாய்வழிபாடு அல்லது அன்னை வழிபாடு என்று கூறப்படுகின்றது. சக்திவழிபாடு மிகவும் பழைமையானது. அன்னையே உயிர்களுக்கு போகத்தையும், முத்தியையும் அளிப்பவள். இவ்வாறு வேண்டுவோருக்கு வேண்டியதை வேண்டியாங்கு வகுத்தருளுகின்ற காரணத்தால் அவள் அகிலஅண்டங்களுக்கும் அன்னையாக விளங்குகின்றாள்.

எங்கும் எதிலும் எஞ்ஞான்றும் நீக்கமற்ற நிறைபொருளாகத் திகழ்கின்ற ஆதிசக்தியாகிய பராசக்தி பல்வேறு தேவியம்சங்களைக் கொண்டருளித் திகழ்கின்றாள். எங்கும் நிறைந்த பொருளாகப் போற்றப்படுகின்ற அந்த ஆதிசக்தி பராசக்தி, பூரணி, இராஜ இராஜேஸ்வரி என்னும் திருப்பெயர்களைக் கொண்டருளுகின்றாள். முத்தொழிலைச் செய்யும் போது பிரம்மாணி, வைணவி, உருத்திராணி என்ற திருப்பெயரும் ஈஸ்வரனுக்கு ஒப்பாகும் போது துர்க்கையாகவும், செல்வத்தின் உருவாகும் போது இலக்குமியாகவும், வித்தையின் வடிவாகும் போது சரஸ்வதியாகவும் காட்சி தருகின்றாள்.

அண்டங்களாகி, அவற்றிலுள்ள உயிர்க்குலங்கள் அனைத்துமாகி உலகவாழ்வை நடத்தி வைப்பவள் பராசக்திஆவாள். துர்க்கை அச்சம் போக்குபவள். ஆபத்து காலத்தில் தன்னிடத்தில் அடைக்கலம் புகுந்தவர்க்கு அச்சம் போக்கி அருள்பவள் துர்க்கை.

இலட்சுமிதேவி மக்களிடம் பிரியமுடையவள். இலட்சுமியைப் பூவின் திருவென்றும் அழகின் புனைக்கலம் என்றும் அமுதில் பிறந்தாள் என்றும் கூறுவர். தன்னுடைய கருணை நோக்கினாலே தன்னை அடைந்தவர்களுக்கு அருள் செய்கிறாள்.

கலைகள் தந்து அருள்பவள் சரஸ்வதிதேவியாவாள். இவளை சரஸ்வதி, கலைமகள், பனுவலாட்டி, வாணி, வெண்டாமரையாள் முதலிய திருநாமங்களில் வழிபடுவர். சொல், அறிவுணர்வு, கல்வி, மெய்யறிவு என்பவற்றின் நிலைக்களமாகவும்,சகல வித்தைகளின் வடிவமாகவும் விளங்குகின்றாள். சகல வித்தைகளின் வடிவம் தான் என்பது தோன்றும்படி எப்போதும் கைகளில் வீணை, புத்தகம் ஏந்தியபடி காட்சியளிப்பவள். இவள் வெண்டாமரையில் வீற்றிருப்பவள்.

தேவியரை வழிபடுவோருக்கு தேவியர்களின் திருவருள் பேறு கிடைக்கும். நம் வாழ்வு நல்வாழ்வாக விளங்குவதற்கு தேவியர்களின் அருள் சிறப்புற்றிருக்க வேண்டும். எனவே நாம் தேவியரை வணங்கி, வழிபாடு செய்து நிறைவாழ்வை பெறுவோமாக! நாம் நவராத்திரி விரத்தை அனுஷ்டித்து மேன்மையடைவோம்.

கலாபூஷணம் இ.சியாமளாதேவி
வடிவேலன்...✍

பொருளாதார அபிவிருத்தியில் புதிய பரிமாணத்துக்கு வழிவகுத்த கே.கே.எஸ்-நாகபட்டினம் கப்பல் சேவை

இலங்கைக்கும்–இந்தியாவுக்கும் இடையில் நான்கு தசாப்தத்தின் பின்னர் புதிய அத்தியாயம் ஆரம்பம்

இலங்கைக்கும் எமது அண்டைநாடான இந்தியாவுக்கும் இடையில் இராஜதந்திர, பொருளாதார உறவில் புதியதொரு அத்தியாயத்துக்கு மேலும் அடித்தளமிடும் வகையில் இலங்கையின் காங்கேசன்துறைக்கும், இந்தியாவின் தமிழ்நாட்டின் நாகபட்டினத்துக்கும் இடையில் பயணிகள் கப்பல்சேவை தொடங்கப்பட்டமை ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல்சேவை, ஏற்கனவே தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இடம்பெற்றிருந்த போதிலும், இலங்கையில் நிலவிய யுத்தம் காரணமாக 1984ஆம் ஆண்டு அச்சேவை இடைநிறுத்தப்பட்டது. இலங்கையில் சுமுகநிலைமை நிலவும் இக்காலப்பகுதியில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காங்கேசன்துறை_ நாகபட்டினம் பயணிகள் கப்பல் சேவை சுமார் நாற்பது வருடங்களின் பின்னர் ஒக்டோபர் 14ஆம் திகதி தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாகபட்டினத்திலிருந்து காங்கேசன்துறைக்கு 50 பயணிகள் மற்றும் 14 கப்பல் பணியாளர்களுடன் 'செரியாபாணி' பயணிகள் கப்பல் காங்கேசன்துறையை வந்தடைந்து, மீண்டும் காங்கேசன்துறையிலிருந்து 30 பயணிகளுடன் நாகபட்டினம் சென்றது. இந்த கப்பல்சேவை ஆரம்பிக்கப்பட்டமை இரு நாடுகளின் நல்லுறவை மேலும் வலுப்படுத்துகின்றது.

நாகபட்டினத்திலிருந்து வர்த்தகர்கள், சுற்றுலாப் பயணிகள், இலங்கையைச் சேர்ந்த இந்தியாவில் வசிப்பவர்கள் உள்ளிட்டோரும் காங்கேசன்துறையிலிருந்து வர்த்தகர்கள், சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்டோரும் செரியாபாணியின் முதல் பயணத்தில் இணைந்தனர்.

இந்தப் பயணிகள் கப்பல்சேவையில் ஒருவழிக் கட்டணமாக 27,000 ரூபாவும் இருவழிக் கட்டணமாக 53,500 ரூபாவும் அறவிடப்படுவதுடன், இலவசமாக 50 கிலோகிராம் பொருட்களுடன் பயணிகள் பயணிக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையில் தூரம் அதிகமாக காணப்படும் நிலையில், இதன் பயணக் கட்டணத்தை குறைத்து, 50 கிலோகிராமை விட, சற்று அதிக நிறையுடைய பொருட்களுடன் பயணிக்க பயணிகளுக்கு வாய்ப்பளிக்கவும் உரிய தரப்பினர் முயன்று வருவதாக, நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பல்சேவை தொடர்ந்து வெற்றிகரமாக இடம்பெறுவது பயணிகளின் கைகளிலேயே தங்கியுள்ளதாகவும் அதிகளவில் பயணிகள் இந்த கப்பல்சேவையை நாடும் பட்சத்தில்

இந்தப் பயணம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென்பதுடன், மேலும் பாரிய கப்பலை சேவையில் ஈடுபடுத்த வாய்ப்பு உள்ளதாகவும், அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பல்சேவையானது சீரற்ற காலநிலை காரணமாக சிறிது காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டு, மீண்டும் எதிர்வரும் ஜனவரியிலிருந்து தொடங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவுக்குச் சொந்தமான செரியாபாணி அதிவேக கப்பல் கேரள மாநிலத்தின் கொச்சியில் கட்டப்பட்டதுடன், 35 மீற்றர் நீளமும் 9.6 மீற்றர் அகலமும் கொண்டதாகும். இந்தக் கப்பலில் 14 கப்பல் பணியாளர்களுடன் 150 பயணிகள் பயணிக்கக்கூடிய வசதி உண்டு.

செரியாபாணி கப்பல் மணிக்கு 36 கிலோமீற்றர் வேகத்தில் பயணிப்பதுடன், 60 கடல் மைல் தூரத்தைக் கொண்ட காங்கேசன்துறை_ நாகட்டினத்துக்கு இடையில் மூன்றரை மணித்தியாலத்தில் பயணத்தை பூர்த்தி செய்துவிடும். இந்தப் பயணத்துக்கு கடவுச்சீட்டு அவசியமாவதுடன், சுற்றுலா வீஸா பெற்றுக்கொண்டே பயணத்தை தொடர்வது அவசியமாக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை_ நாகபட்டினத்துக்கு இடையிலான கப்பல்சேவையினால் இருநாடுகளுக்கும் இடையில் பிரதானமாக வர்த்தக நடவடிக்கைகள் விரிவடைந்து பொருளாதார அபிவிருத்தி மேலும் வலுவடைவதுடன், சுற்றுலா அபிவிருத்தியும் ஏற்படும். புதிய வர்த்தகர்கள் உருவாகுவார்கள். கைத்தொழில் அபிவிருத்தி ஏற்பட்டு, புதிய கைத்தொழில் உற்பத்தி நிலையங்கள் உருவாகுவதுடன், புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். இதனால் இரு நாடுகளுக்கும் அந்நிய செலாவணி வருமானம் அதிகரிக்கும்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையில் சமூக கலை, கலாசாரம், மதஇணக்கம், நட்புறவு மேலும் வலுவடையும் சாத்தியம் இருப்பதாக, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலைய சமூக கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் நவரட்னம் பாலமுரளி தெரிவித்தார்.

இருநாட்டு வர்த்தகர்கள், சுற்றுலாப் பயணிகள், வசதி குறைந்தோர் ஆகியோர் காங்கேசன்துறை நாகபட்டினம் கப்பல்சேவையினால் அதிக நன்மையடையும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை நாகபட்டினம் கப்பல்சேவையினால் சனத்தொகை குறைந்த இலங்கையை விட, சனத்தொகை கூடிய இந்தியாவே அதிகளவில் நன்மையடையும் வாய்ப்பு உள்ளது. அனைத்திலும் தாராளமயமான உற்பத்திகளைக் கண்டுவரும் இந்தியா, அதன் உற்பத்திகளை சந்தைப்படுத்த இலங்கை ஒரு களமாக அமையும்.

இதனால் இந்தியாவிலுள்ள உற்பத்தியாளர்களும் வர்த்தகர்களும் வெற்றிகரமான வர்த்தகத்தை முன்னெடுக்க வாய்ப்பு உள்ளது.

இலங்கையை பொறுத்தவரையில் எமது நாட்டின் உற்பத்திகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு ஏற்படுவதுடன், வர்த்தகத்தை நோக்காகக் கொண்ட புதிய உற்பத்தி முயற்சிகள் உருவாக வழிவகுக்கும். இதனால் இலங்கையிலும் புதிய உற்பத்தியாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகர்கள் உருவாகுவார்கள்.

இலங்கையிலிருந்து விவசாய உற்பத்திகள், வாசனைத் திரவியங்கள், தேயிலை, கோப்பி, மிளகு உள்ளிட்ட உற்பத்திகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உள்ளதுடன், இலங்கையில் வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும்.

யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட காங்கேசன்துறை மீண்டும் அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கு இந்தக் கப்பல்சேவை வரப்பிரசாதமாக அமைகின்றது.

காங்கேசன்துறையில் புதிதாக வர்த்தக நிலையங்கள், ஹோட்டல்கள் மற்றும் தங்குமிட விடுதிகள், உள்ளூர் உற்பத்தி சார்ந்த கடைகள், வாகனப் போக்குவரத்து முகவரகங்கள், பயண முகவரகங்கள் உருவாக வழிவகுக்கும். எமது நாட்டுக் கைத்தொழிலாளர்களின் கைப்பணிகளை விற்பனை செய்யயும் ஓர் இடமாக காங்கேசன்துறை விளங்கும்.

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வரும் கப்பல் பயணிகள் அங்கிருந்து தாம் விரும்பிய இடங்களுக்கு பயணிப்பதற்கு வாகனங்களை நாடுவதனால் வாகன உரிமையாளர்கள், வாகனத் தொழிலாளர்கள் நன்மையடைவர். ஹோட்டல் மற்றும் தங்குமிட விடுதி உரிமையாளர்கள், இவற்றில் பணியாற்றுபவர்கள் நன்மையடைவர். புதிய சுற்றுலா வழிகாட்டிகள் உருவாகுவதுடன், ஏற்கனவே உள்ள சுற்றுலா வழிகாட்டிகளுக்கு வேலை வாய்ப்பு பெருகும்.

எமது நாட்டிலுள்ள சுற்றுலாத் தளங்களை பார்வையிட சுற்றுலாப் பயணிகள் வருவதனால், சுற்றுலா வருமானமும்அதிகரிக்கும். ஆக மொத்தத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் பன்முகப்படுத்தப்பட்ட வர்த்தக, பொருளாதார நன்மை ஏற்படும். எமது நாட்டு இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் கிடைப்பதுடன், அவர்கள் வருமானம் ஈட்டி பொருளாதாரத்தில் முன்னேற வாய்ப்பு உள்ளது.

அத்துடன், பொருளாதாரத்தில் ஆர்வமுடைய சுறுசுறுப்பான இளைய சமுதாயம் உருவாகும். இதனால் இலங்கை மற்றும் இந்தியா அந்நிய செலாவணியை பெருக்க பெருவாய்ப்பாக காங்கேசன்துறை நாகபட்டினம் கப்பல்சேவை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கப்பல்சேவை வெற்றிகரமாக தொடர்ந்து நடக்குமாயின், பொருளாதார வர்த்தக இடமாக காங்கேசன்துறை பரிணமிக்கக்கூடிய சாத்தியம் இருப்பதையும் எதிர்வுகூறலாம். காங்கேசன்துறையின் அபிவிருத்தி யாழ்ப்பாணத்துக்கு பரவி, வடமாகாணம் வர்த்தக நடவடிக்கைகளில் முன்னேறும். வடமாகாணத்தின் பொருளாதார, வர்த்தக அபிவிருத்தி தென்னிலங்கையில் பரவி நாடு பூராகவும் பொருளாதார அபிவிருத்திக்கு களமாக அமையுமெனவும், விரிவுரையாளர் நவரட்னம் பாலமுரளி தெரிவித்தார்.

அத்துடன், இந்தியாவின் உற்பத்திகள் யாழ்ப்பாணம் உட்பட வடமாகாணத்திற்கு வந்துசேரும் அதேவேளை, எமது நாட்டு உற்பத்திகளும் அந்நாட்டில்அதிகளவில் புழக்கத்தில் காணப்படும் நிலைமை உருவாகும்.

பொருட்களைத் தேடி எமது நாட்டின் ஏனைய இடங்களிலுள்ள வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்துக்கு படையெடுக்கும் நிலைமை உருவாகும். இதனால் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளை இலகுவில் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

பொருளாதாரம், உற்பத்திகளில் பின்தங்கியுள்ள இலங்கை மீண்டும் முன்னேற இந்தக் கப்பல்சேவை ஒரு களத்தை ஏற்படுத்துமென்பது உறுதி.

ஆகையினால், காங்கேசன்துறை நாகபட்டினம் கப்பல்சேவை தொடர்ந்து இடம்பெற்று, இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறந்த அடித்தளமிட வேண்டுமென்பதே சமூக நலன்விரும்பிகள் அனைவரினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆர்.சுகந்தினி...✍

பொலிஸ் சேவையில் இருந்து எம்.எஸ்.அப்துல் மஜீத் ஓய்வு

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரியாக சேவையாற்றி வந்த பிரதம பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.அப்துல் மஜீத் பொலிஸ் சேவையில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.

சம்மாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், இஸ்மாலெப்பை மீராசாஹிப்_ சின்னலெப்பை ஆசியா உம்மா தம்பதியரின் மகனாவார். இவர் தனது கல்வியை சம்மாந்துறை அல்மர்ஜான் தேசிய பாடசாலையில் மேற்கொண்டதுடன் 1985 ஆம் ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்து கொண்டார்.

தனது பயிற்சியை மஹியங்கணை இராணுவ பயிற்சிக் கல்லூரியில் நிறைவு செய்ததுடன், கல்குடா பொலிஸ் நிலையத்தில் தனது முதலாவது நியமனத்தைப் பெற்றார். கொழும்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் உள்ள பல பொலிஸ் நிலையங்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் சேவையாற்றியுள்ளார்.

1994 முதல் 2000ஆம் ஆண்டு வரை விசேட அதிரடிப்படையில் இணைக்கப்பட்டு, அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று மற்றும் மல்வத்தை விசேட அதிரடிப்படை முகாம்களில் உதவிப் பொலிஸ் பரிசோதகராக கடமையாற்றியுள்ளார். மீண்டும் 2000ஆம் ஆண்டு முதல் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

போதைவஸ்துப் பாவனையைக் கட்டுப்படுத்துவதில் இவர் மேற்கொண்ட பணிகள் ஏராளம்.

இவர் கடமையாற்றிய பிரதேசங்களில் பொதுமக்களுடன் சிநேகபூர்வமாக நட்புறவினை பேணி வந்துள்ளார். சமூக மட்டக் குற்றச் செயல்களை தடுப்பதற்கும் குற்றவாளிகளை இனங்காண்பதற்கும் இந்நட்புறவு பெரிதும் துணை நின்றது. இவரின் 34 வருட சேவையைப் பாராட்டி தேசிய ஐக்கிய நல்லிணக்க ஊடகவியலாளர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவரும், முன்னாள் பிரதேச சபை உதவித் தவிசாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எஸ்.எம்.ஜஃபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபர் எம்.எஸ்.எம்.சம்சுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.ஜெயபத்ம, பிரதேச செயலாளர்களான எம்.ஏ.சி.அஹமட் சாபிர், எஸ்.எல்.எம்.ஹனீபா, எம்.ஐ.எம்.பிரினாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், ஓய்வு நிலை உதவி பொலிஸ் அத்திட்சகர் ஏ.வாஹித், அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பபள்யு.எஸ்.ஏ.சதாத், அட்டாளைச்சேனை ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன், முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர்களான சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், எம்.ஏ.றாசீக் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதன்போது அதிதிகளாய்க் கலந்து கொண்டனர். இதன் போது நிகழ்வின் அதிதிகளாகக் கலந்து கொண்ட நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் மற்றும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.ஜெயபத்ம ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

எம்.ஏ. றமீஸ்...✍
(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

மனிதருக்கு அல்லாஹ்வின் செய்தி

'மனிதர்களே...! நீங்கள் உங்கள் இறைவனுக்கு பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரைப் படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரில் இருந்து ஆண்கள், பெண்கள் எனப் பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து) கொள்ளுங்கள்.

(அல் குர்ஆன் 4:1)

மற்றொரு வசனத்தில், 'மனிதர்களே... உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணில் இருந்து தான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால் உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை.) எனினும் உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கிறாரோ அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் (அனைத்தையும்) நன்கறிந்தவனும் நன்கு தெரிந்தவனாகவும் இருக்கின்றான்

(அல் குர்ஆன் 49:13)

அல்லாஹ்தஆலா இந்த வசனங்கள் ஊடாக மாபெரும் செய்தியை மனித சமூகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கின்றான். அவன் சர்வ வல்லமை படைத்தவன். பூமி உள்ளிட்ட முழுப்பிரபஞ்சத்தையும் மாத்திரமல்லாமல் அவற்றிலுள்ள அத்தனை படைப்புக்களையும் படைத்து பராமரித்து ஒழுங்கமைத்து நிர்வகித்து வருபவன் அவன்.

இந்த உண்மையின் அடிப்படையில் அனைத்து மனிதர்களும் தம்மைப் படைத்த அல்லாஹ்வின் பக்கம் அழைக்கப்படுகிறார்கள். இயல்பானதும், எளிமையானதுமான இந்த உண்மைகள் மிகவும் ஆழமானதும் கனதியானதும் ஆகும். மனிதன் தன் காதுகளையும் உள்ளங்களையும் கொண்டு அவற்றைக் கூர்ந்து கவனித்தான் என்றால் அதுவே அவனது வாழ்வில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு போதுமானதாக அமையும். குறிப்பாக அறியாமைகளில் இருந்து விடுபட்டு ஈமானையும் நேர்வழியையும் நோக்கி வர வழிவகுக்கும்.

இந்த வசனங்கள் மனிதன் வெளிப்பட்ட ஆரம்ப மூலத்தை நினைவூட்டுவதன் மூலம் அவனைப் பூமியில் படைத்த அல்லாஹ்வின் பக்கம் கொண்டு வர எதிர்பார்க்கிறது.

மனிதன் தற்போதைய உடல் உருவ அமைப்பை பெற்றுக்கொள்ள முன்னர் ஒன்றுமில்லாத நிலையில் தான் இருந்தான். அவன் உலகில் பிறக்க வேண்டும். இங்கு வாழ வேண்டும் என்ற சுய விருப்பு, எதிர்பார்ப்போடு பிறந்தன் அல்லன். வரையறுக்கப்பட்ட சுதந்திரத்தோடு வசதி வாய்ப்புக்களைப் பெற்று உலகில் வாழலாம் என்று பிறக்க முன்னரே எண்ணிப் பார்த்தவனும் அல்லன் மனிதன்.

எவ்வித நாட்டமும் இல்லாத நிலையில் இருந்த மனிதனை, இந்த உலக வாழ்வுக்கு கொண்டு வந்தவன் யார்? அவனுக்கு உலகில் வாழ்வுக்கு தேவையான அத்தனை வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி கொடுத்தவன் யார்? உலகில் தமக்காக அனைத்து படைப்புக்களையும் உழைக்க வசப்படுத்தி தந்தவன் யார்? இம்மையிலும் மறுமையிலும் விமோசனம் பெற்றுக்கொள்வதற்கான தெளிவான நேர்வழிகாட்டலை வழங்கியுள்ளவன் யார்? என்பவற்றை அவன் எண்ணிப்பார்க்க தவறியுள்ளான்.

ஆனால் அல்லாஹ்தஆலா மனிதனைப் படைத்ததோடு மாத்திரமல்லாமல் அவனுக்கு தேவையான அத்தனை வசதிகளையும் ஏற்பாடு செய்து கொடுத்தவனாவான். மனிதன் இம்மையிலும் மறுமையிலும் விமோசனமும் சுபீட்சமும் பெற்றுக்கொள்வதற்கு தேவையான தெளிவான வாழ்க்கைப் பாதையை வரைந்து அப்பாதையை முடிவு செய்து உலகில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கான தனித்தன்மைகளையும் ஆற்றல்களையும் திறமைகளையும் அவனுக்கு வழங்கியுள்ளான். அவ்வாறு வழங்குவதற்கான உரிமை அல்லாஹ்வுக்கு மாத்திரமே உள்ளது. அவன் அனைத்தையும் அறிந்தவனாவான். அவனால் மாத்திரமே மனிதனை சிறந்த முறையில் பராமரித்து நிர்வகிக்க முடியும். அதனால் அவனது வழிகாட்டலில்படியே வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இவ் உலகில் மனிதனுக்கு வரையறுக்கப்பட்ட சுதந்திரமும் நன்மை தீமையைப் பிரித்தறியும் அறிவும் வழங்கப்பட்டுள்ளது. அவற்றை சரியான முறையில் பயன்படுத்தி ஈருலகிலும் விமோசனமும் சுபீட்சமும் பெற்றிட வேண்டும். அதனையே இலக்காகக் கொள்ள வேண்டும்.

தாம் பெற்றுக் கொண்டுள்ள சுதந்திரத்தையும் அறிவையும் மனிதன் சரியான முறையில் பயன்படுத்துவான் என்றால் அவன் நிச்சயமாக அல்லாஹ்வின் பக்கமே சார்ந்திருப்பான். உலகம் உள்ளிட்ட பிரபஞ்சமும் அத்தனை படைப்புக்களும் அல்லாஹ்வின் ஆற்றல்களையும் மகத்துவங்களையும் வெளிப்படுத்தி நிற்பதே அதற்கு போதுமான சான்றுகளாகும். அவற்றுக்கு முன்னால் அல்லாஹ்வைத் தவிர மனிதனுக்கு வேறொரு தெரிவு இருக்க முடியாது. அதனால் எவ்வித நிர்ப்பந்தமும் இன்றி அல்லாஹ்வை சார்ந்தவனாகவே மனிதன் இருப்பான்.

இந்த நிலையில் அல்லாஹ்தஆலா, '(இஸ்லாம்) மார்க்கத்தில் நிர்பந்தமே இல்லை. ஏனென்றால் வழி கேட்டிலிருந்து (விலகி) நேர்வழி (அடைவது எவ்வாறென்று) தெளிவாகிவிட்டது' (அல் குர்ஆன் 2:256) என்று குறிப்பிட்டிருக்கின்றான். உண்மையில் உலகம் உள்ளிட்ட பிரபஞ்சத்தையும் அவற்றிலுள்ள படைப்புக்களையும் அவற்றின் இயக்கங்களையும் மனிதன் சரியான கண் கொண்டு நோக்கும் போது நேர்வழி தெளிவாகிவிடும். அப்போது அவனது வாழ்வே இஸ்லாமாகிவிடும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது.

அதேநேரம் 'அவன் யாதொரு பொருளை(ப் படைக்க)க் கருதினால் அதனை 'ஆகுக' எனக்கூறுவது தான் (தாமதம்). உடன் அது ஆகிவிடுகிறது. (அல் குர்ஆன் 36:82)

அவ்வாறான மாபெரும் சக்தி, ஆற்றல்களைக் கொண்டவன் தான் அல்லாஹ். அப்படியிருந்தும் அவன் பூமிக்கான தனது பிரதிநிதியாக மனிதனைப் படைத்ததோடு அனைத்து மனிதர்களையும் ஆதம் (அலை), ஹவ்வா (அலை) என்ற ஒரே குடும்ப மூலத்தில் இருந்தே படைக்க நாடினான். இந்த மனித சமூகத்தின் மூல வேராக அவர்களே இருக்கின்றனர். அவர்களில் ஆதம் (அலை) அவர்களைத் தன் கரங்களால் படைத்ததாக அவன் குறிப்பிட்டிருக்கின்றான்.

'இப்லீஸே...நானே என் இரு கரங்களால் படைத்தவற்றிற்கு நீ சிரம் பணியாது உன்னைத் தடை செய்தது என்ன? (அல் குர்அன் 38:75) என்று அல்லாஹ் எழுப்பி இருக்கும் கேள்வி அதற்கான சான்றாகும். ஆதம் (அலை) அவர்களில் இருந்து தான் அவரது துணையை அவன் படைத்தான். அவர்கள் இருவரும் இணைந்த குடும்ப உறவின் ஊடாக ஆண்கள், பெண்கள் என மனித சமூகத்தைப் பரவச் செய்தான். இதன்படி உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் மூல பிதாவாக இவர்களே இருக்கின்றனர்.

அல்லாஹ் நாடி இருந்தால் ஆதம் (அலை) அவர்களை மாத்திரமல்லாமல் மேலும் ஏராளமான ஆண்களையும் பெண்களையும் படைத்து அவர்களை இணைத்து குருகிய காலத்திற்குள் புவியில் மனித சமூகத்தைப் பரவச் செய்திருக்கலாம். அது அவனுக்கு சிரமமான காரியமே அல்ல. அவ்வாறு செய்திருந்தால் மனிதர்கள் ஆரம்பம் முதலே பல தனித்தனி குடும்பங்களாக இருந்திருப்பார்கள். அந்த அனைத்து மனிதர்கள் ஊடாகவும் தம் பணிகளை அவன் முன்னெடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் மத்தியில் ஒரே படைப்பாளனினால் படைக்கப்பட்டவர்கள் என்பதைத் தவிர வேறு எந்த உறவும் எந்த இணைப்பும் இருந்திருக்காது. இருப்பினும் அல்லாஹ் அவ்வாறு செய்ய நாடவில்லை. அதற்கு காரணங்கள் இருக்காமல் இராது. யாவற்றையும் அறிந்தவன் அவன்.

(அடுத்த வாரம் நிறைவுறும்)

மர்லின் மரிக்கார்...

தொழுகையில் இறையச்சம்

'திண்ணமாக இறை நம்பிக்கையாளர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். அவர்கள் எத்தகையவர்கள் எனில், தங்களுடைய தொழுகையில் பயபக்தி (தக்வா) வை மேற்கொள்கின்றார்கள்' (ஸூரா: அல்முஃமினூன் 12)

'குஷூஃ' என்கிற சொல் பயபக்தி (இறையச்சம்) என இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 'குஷூஃ' என்பதற்கு குனிதல், அடங்கிப் போதல், அடக்கத்தையும் பணிவையும் வெளிப்படுத்துதல் என்பன பொருளாகும். ஒருவர் 'குஷூஃ' வை மேற்கொள்ளுதல் என்பது உள்ளத்து நிலைமையையும் குறிக்கும். உள்ளம் 'குஷூஃ'வை மேற்கொள்வது ஒன்றின் மீதான பயபக்தியால் ஆட்பட்டு அதன் மகத்துவம், பேராற்றல், பேரொளி ஆகியவற்றை நினைத்துத் திகைத்து மலைத்து நிற்பதை குறிக்கும்.

பொதுவாக பேராற்றலும் சர்வ வல்லமையும் மிக்க ஆளுமையின் முன்னால் நிற்கும் போது மனிதன் விக்கித்துப் போகின்றான். தலையைத் தாழ்த்திக் கொள்கின்றான். கைகள் தளர்ந்து விடுகின்றன, பார்வை ஒடுங்கி விடுகின்றது, குரல் அமுங்கிப் போகின்றது, மகத்துவமும் வல்லமையும் மிக்க ஆளுமையின் முன்னால் நிற்கும்போது மனிதனுக்குள் இயல்பாகவே ஏற்படுகின்ற தாக்கங்கள் அனைத்தும் மனிதனை ஆட்கொள்கின்றன.

ஒருமுறை ஒருவர் தாடியை நீவி விட்டவாறு தொழுது கொண்டிருப்பதைப் பார்த்த நபி (ஸல்) அவர்கள் 'அவருடைய உள்ளத்தில் குஷூஃ இருந்திருக்குமேயானால் அவருடைய உடலையும் குஷூஃ கவ்விக் கொண்டிருக்கும்' என்றார்கள். (நபிமொழி)

உள்ளத்துடன் தொடர்புடையதுதான் குஷூஃ எனில் அதன் இயல்பான தாக்கம் உடலையும் பாதிக்கும் என்பது மேலே கூறப்பட்ட நபி மொழியிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

தொழுகையின் அனைத்து நிலைகளும் மன நிறைவுடனும் மன அமைதியுடனும் நிறைவேற்றப்பட வேண்டியதாகும். ஒன்றை முழுமையாக நிறைவேற்றிய பிறகுதான் அடுத்த நிலைக்கு போக வேண்டும். தொழுகையின் போது மனத்தை இங்குமங்கும் அலைபாய விடாமல் ஒருமுகப்படுத்தி வைத்திருப்பதும் மிகவும் அவசியமானது.

வேண்டுமென்றே தொழுகைக்கு அப்பாற்பட்ட விஷயங்களைக் குறித்து யோசிப்பதிலிருந்தும் மனக் கணக்குகளைப் போடுவதிலிருந்தும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும். நம்மை அறியாமல் எண்ணங்கள் அலைமோதலாம். இது மனித இயல்பு. மனிதனின் பலவீனம் என்றாலும் தொழுகையின் போது உள்ளத்தையும் சிந்தனையையும் அல்லாஹ்வின் மீதே குவித்திருக்க முயல வேண்டும். ஒருமுகப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

அல்குர்ஆனின் வசனங்கள் ஓதப்பட்டாலும் சரி, அவனது புகழ் பாடப்பட்டாலும் சரி. வெறுமனே உதட்டளவில் சொல்லப்படுகின்றவையாக அல்லாமல் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மொழியப்படுகின்றவையாக அவை பரிணமிக்க வேண்டும். அந்த உன்னத நிலையை அடைவதற்காக முயல வேண்டும். அப்படியும் தன்னை மீறி வேறு எண்ணங்கள் அலைமோதினால் உடனே அந்தக் கணத்திலிருந்தே கவனத்தை திருப்பி தொழுகையின் பக்கம் கவனத்தை குவித்திட வேண்டும்.

தொகுப்பு: மைஸரா அப்துல் காதிர்...

பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்திய மார்க்கம்

இஸ்லாத்தின் இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்கள் ஒரு தடவை தோழர்களுடன் அமர்ந்து அலவளாவிக் கொண்டிருந்தார்கள். அப்போது இஸ்லாத்திற்கு முந்தைய அறியாமைக்கால பேச்சு எழுந்தது. அச்சமயம் தோழர் ஒருவர் தன் அடி மனதில் உறைந்து கிடந்த நிகழ்வைச் சொல்லத் தொடங்கினார்.

'இறைத்தூதரே! அந்த அறியாமைக்காலத்தில் என் மனைவி நிறை மாதக் கர்ப்பிணியாக இருந்த சமயம், நான் வியாபார விடயமாகப் பயணம் செல்ல வேண்டிய ஏற்பட்டது. அப்போது என் மனைவியிடம், 'ஆண் குழந்தை பிறந்தால் பத்திரமாகப் பார்த்துக்கொள். பெண் குழந்தை பிறந்தால் கொன்று புதைத்து விடு' என்று சொன்னேன். பிறகு நான் பயணத்தில் இருந்து திரும்பியபோது மனைவி, 'நமக்குப் பெண் குழந்தை பிறந்தது. நல்ல வேளை அது இறந்து விட்டது' என்று என்னிடம் சொன்னாள்.

சில ஆண்டுகள் சென்றன. ஒருநாள் என் வீட்டிற்கு ஒரு அழகான பெண் குழந்தை வந்து விளையாடுவதைக் கண்டு, 'யாரவள்?' என்று திடுக்கிட்டுக் கேட்டேன். அதற்கு என் மனைவி, 'பக்கத்து வீட்டுக் குழந்தை' என்றாள். அக்குழந்தை என்னிடம் பழகத் தொடங்கியது. குழந்தைக்கும் எனக்கும் இடையே இருந்த பாசத்தைக் கண்ட என் மனைவி, 'இக்குழந்தை மீது உங்களுக்கு அவ்வளவு பாசமா?' என்று கேட்டாள். 'ஆம்.. இவள் என் உயிரல்லவா?' என்றேன். அப்போது என் மனைவி, 'அன்று நான் சொன்னது பொய். இது பக்கத்து வீட்டு குழந்தை அல்ல. நம் குழந்தைதான். உங்களுக்குப் பயந்து நான் அப்படிச் சொன்னேன்' என்றாள்.

ஆனால் நான் அறியாமைக் காலத்து வெறித்தனத்தில், அக்குழந்தையைக் கொல்ல முடிவு செய்தேன். ஆனாலும் பாசம் என்னை விடவில்லை. பாசத்திற்கும், அறியாமைக்கால சிந்தனைகளுக்கும் இடையே நடந்த போராட்டத்தில் பாசம் தோற்றது.

ஒருநாள் என் அன்பு மகளைப் பாலைவன வெளிக்கு அழைத்துச் சென்றேன். என்னுடன் அவள் விளையாடிக் கொண்டும், கதை பேசிக் கொண்டும் இருந்தாள். ஒரு இடத்தில் குழியைத் தோண்டினேன். பாலைவனத்தின் மணல் என் தாடியில் பதிந்தன. அந்தச் செல்ல மகள் ஏதும் அறியாமல், தன் பிஞ்சு விரல்களால் என் தாடியில் உள்ள மணலைத் தட்டி விட்டாள். அப்படியிருந்தும் நான் கல்நெஞ்சக்காரன். என் மகளைக் குழியில் தள்ளி மணலைப் போட்டு, உயிரோடு புதைத்து விட்டேன் இறைத்தூதரே' என்று அந்நபித்தோழர் சொன்னதும், நபிகளார் அழ ஆரம்பித்து விட்டார்.

அருகில் இருந்த தோழர்கள், அத்தோழரைப் பார்த்து, 'என்ன காரியம் செய்தீர்? நபிகளாரையே அழச் செய்து விட்டீரே!' என்றபோது, நபி(ஸல்), 'அந்தக் காலம் மறைந்து விட்டது. நாம் பாவமன்னிப்பைத் தேடி மீண்டு விட்டோம்' என்று கூறியவண்ணம் தனது தாடி நனையும் அளவு அழுதார்கள்.

பின்னர் நபி(ஸல்) அவர்கள், 'நாம் எவ்வளவு கல் நெஞ்சகர்களாய் இருந்துள்ளோம். (இஸ்லாத்தின் வருகைக்கு முந்தைய) அறியாமைக் காலத்தில் செய்த செயல்கள் அனைத்தையும் இறைவன் மன்னித்து விடுவான். ஆகவே உமது நற்செயல்களை புதுப்பித்துக் கொள்வீராக!' என்று அத்தோழரைப் பார்த்துக் கூறினார்கள்.

(நபிமொழி)

நபி (ஸல்) அவர்கள் தாம் வாழ்ந்த காலத்திலேயே பெண் குழந்தைகளைப் புதைக்கும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள். அதேநேரம் அல் குர்ஆன், 'வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்' (6:151) என்ற இறை வசனத்தை ஓதிக் காட்டினார்கள்.

மறுமையில் உயிருடன் புதைக்கப்பட்ட குழந்தையிடம், 'எந்தக் குற்றத்திற்காக நீ கொல்லப்பட்டாய்?' (81:8) என்று கேட்கப்பட்டு, குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என்ற வசனத்தை ஓதிக்காட்டி மக்களை எச்சரிக்கவும் அன்னார் தவறவில்லை.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், 'ஒருவன் தன் பெண் குழந்தைகளை உயிருடன் புதைக்காமலும், கொடுமைப்படுத்தாமலும், ஆண் குழந்தைகளுடன் ஒப்பிட்டு வேறுபாடு காட்டாமலும் இருந்தால், இறைவன் அவனைச் சுவர்க்கத்தில் நுழையச் செய்வான்'என்று கூறினார்கள்.

(ஆதாரம்: அபூதாவூத்)

மற்றொரு சந்தர்ப்பத்தில், 'ஒருவருக்கு மூன்று பெண் குழந்தைகள் இருந்து, அவர்களைச் சிறந்த முறையில் வளர்த்து, கருணை புரிந்து, எவ்விதத் தீங்கும் செய்யாமல் இருந்தால் அவருக்குச் சுவர்க்கம் நிச்சயம்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதும் அருகில் இருந்த நபித்தோழர் ஒருவர், 'இறைத்தூதர் அவர்களே! இரு பெண் குழந்தைகள் என்றால்...?' அதற்கு நபிகளார், 'இரு பெண் குழந்தைகள் என்றாலும் சரியே!' என்றார்கள். (நபிமொழி)

ஆண்களும், பெண்களும் ஒரே மூலத்தில் இருந்தே படைக்கப்பட்டார்கள். எனவே இருவருமே கண்ணியத்திற்குரியவர்கள், சமமானவர்கள்.

இவ்வாறு பெண்களின் மாண்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்ட நபி(ஸல்) அவர்கள், பெண் சிசுக்கொலையை நிறுத்தியதோடு பெண்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்தினார்கள். மணவிலக்குப் பெறும் உரிமை, மறுமண உரிமை, பொருளீட்டும் உரிமை, சொத்துரிமை, வாரிசுரிமை, கல்வி உரிமை, அரசியலில் பங்கேற்கும் உரிமை என ஆண்களுக்குரிய எல்லா உரிமைகளையும் பெண்களுக்கும் பெற்றுக்கொடுத்தார்கள்.

அபூ மதீஹா...

நற்பண்புகளின் பிரதிபலன்கள்

மக்களுக்கு சாந்தியும், சமாதானத்தையும் கற்றுத்தரும் மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது. மனித சமுதாயத்திற்கு நற்பண்புகளை கற்றுத்தரும் இஸ்லாத்தின் சிறப்புகள் குறித்து தங்களது தோழர்களிடமும், தங்களை சந்திக்க வருபவர்களிடமும் நபி (ஸல்) அவர்கள் அடிக்கடி எடுத்துரைத்துள்ளார்கள்.

பிறரிடம் சொல்லாலும், செயலாலும் அழகிய நற்பண்புகளை பொழிய வேண்டும். 'நாவின் மூலம் பிறருக்கு நோவினை செய்பவன் முஸ்லிமில்லை' என்றும் அன்னார் அடிக்கடி தங்களது தோழர்களிடம் கூறியுள்ளார்கள். அதேபோன்று பொறுமை குறித்தும் நபி(ஸல்) அவர்கள் அடிக்கடி வலியுறுத்திள்ளார்கள். இதுபற்றி நபி(ஸல்) அவர்கள், பொறுமை என்றால் மூன்று நிலைகளில் இருக்க வேண்டும். அதில் முதலாவது இறைவனை வணங்குவதில் என்ன சிரமங்கள் இருப்பினும் அதை செய்து முடிக்க வேண்டும். வேலைப்பளு, சோம்பேறித்தனம் போன்றவற்றால் பொறுமை இழந்து இறை வணக்கத்தை விட்டுவிடக் கூடாது.

"நம்பிக்கை கொண்டோரே! பொறுமையுடனும், தொழுகையுடனும் (இறைவனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கிறான்" (2:153) என்பது அல் குர்ஆன் வசனமாகும்.

அடுத்தது, பாவச் செயல்களில் பொறுமை காட்ட வேண்டும். அதாவது, எவ்வளவு தான் மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தாலும்,

அது பாவமான காரியம் என்றால், அதை செய்யாமல் பொறுமையாக இருக்க வேண்டும். பொறுமையிழந்து அதை செய்து விட்டால், கெட்ட பெயர் ஏற்பட்டுவிடும். பின்னர் அந்த அவப்பெயரை நீக்குவது கஷ்டமாகி விடும். நல்லவராக வேண்டும் என்றால் கடினமான உழைப்பு தேவை. ஆனால், தீயவனாக வேண்டும் என்றால் சிறு தவறு செய்தால் போதும். எனவே பாவங்களைச் செய்யாமல் பொறுமை காக்க வேண்டும்.

'பாவம் செய்யும் ஒவ்வோர் ஆத்மாவும் தனக்கே, கேட்டைத் தேடிக்கொள்கிறது. ஓர் ஆத்மாவின் பாவச்சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது' (6:164) என்றும் அல் குர்ஆன் எச்சரிக்கின்றது.

மூன்றாவதாக, மனிதர்கள் தங்களுக்கு சோதனை ஏற்படும் காலங்களில் பொறுமை காக்க வேண்டும். நம் வாழ்வில் எத்தனை கஷ்டம் வந்தாலும், 'என்னைப் படைத்தவன் என்னை எப்படி நடத்த வேண்டும் என்று எண்ணி இருக்கிறானோ அப்படியே நடக்கும்' என்ற உறுதியான எண்ணம் வர வேண்டும். அப்போதுதான் சோதனையிலும் சாதனை படைக்க முடியும்.

பகலின் (காலை, மாலை ஆகிய) இரு முனைகளிலும், இரவின் பகுதியிலும் நீங்கள் தொழுகையை நிலைப்படுத்து வீராக நிச்சயமாக நற்செயல்கள், தீச்செயல்களைப் போக்கிவிடும் (இறைவனை) நினைவு கூருவோருக்கு இது நல்லுபதேசமாக இருக்கும்" (அல் குர்ஆன் 11:114)

நபியே! எந்நிலையிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பீராக. நிச்சயமாக அல்லாஹ் அழகிய செயல்கள் செய்வோரின் கூலியை வீணாக்கி விடமாட்டான்".

(அல் குர்ஆன் 11:115).

"இறையச்சத்துடன் யார் நற்செயல்கள் செய்கிறார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹ் சுவனபதிகளிலே புகுத்துவான். அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டே இருக்கும். அங்கே பொன்னாலான கடகங்களிலிருந்தும், முத்திலிருந்தும் ஆபரணங்கள் அணிவிக்கப்படுவார்கள். அங்கு அவர்களுடைய ஆடைகளும் பட்டாக இருக்கும்" (அல் குர்ஆன் 22:23)

இம்மையிலும் மறுமையிலும் ஒரு மனிதன் உயர்ந்த நிலையை பெற வேண்டும் என்றால் அதற்கு உதவும் நற்பண்புகளைத் தெரிந்து கொண்டு அதன்படி நடக்க வேண்டும். அந்த நல்வழியில் நடக்கும் போது இறைவனின் திருப்பொருத்தத்தை அடைந்திடலாம்.

அப்துல்லாஹ்...

பத்திரிகைகள், வெளிவரும் செய்திகள் தொடர்பில்

உதய கம்மம்பிலவின் கேள்விக்கு பிரதமர் தினேஸ் சபையில் பதில்

சரி செய்யும் அதிகாரம் சபாநாயகருக்கே என்றும் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பத்திரிகைகள் மற்றும் பல்வேறு ஊடகங்களில் பல விடயங்கள் வெளிவரலாம். அதேவேளை, சபாநாயகர் தொடர்பில் அல்லது சபாநாயகர் சபா பீடத்திலிருந்து சபாநாயகர் மேற்கொள்ளும் தீர்மானங்கள் தொடர்பில் எதிர்மறையான செய்திகள் வெளிவந்தால் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட பத்திரிகையை அழைத்து அதனை சரி செய்யும் அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளது.

எதிர்க்கட்சியினர் நாட்டிலுள்ள அனைத்து செய்தித் துண்டுகளையும் சபைக்கு கொண்டு வந்து அதனால் தான் நாம் ஒரு முகாமைத்துவத்துக்காக இடமளிக்கும் சட்டம் ஒன்றுக்கும் இடமளித்துள்ளோம் . இந்த கேள்வியை எழுப்பியமைக்காத தாம் உதய கம்மம்பில எம் பி க்கு நன்றி தெரிவிப்பதற்காகவும் பிரதமர் தெரிவித்தார்.

போதைப் பொருளோடு சம்பந்தப்பட்ட ஒருவரை பாதுகாப்பதற்காகவே அரசியலமைப்பு பேரவை செயற்பட்டுள்ளது என்றும், அதனாலேயே பொலிஸ் மாஅதிபரின் பதவி நீடிப்பை அனுமதிக்கவில்லை என்றும் செய்தி வெளியிட்ட அரச பத்திரிகைகளின் ஆசிரியர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை பிரச்சினையை எழுப்பியே உதய கம்மன்பில இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

அரச பத்திரிகைகள் இரண்டில் போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்ட ஒருவரை பாதுகாப்பதற்காகவே அரசியலமைப்பு பேரவை செயற்பட்டுள்ளது என்றும், இதனாலேயே பொலிஸ் மாஅதிபரின் பதவி நீடிப்பை அனுமதிக்கவில்லை என்றும் நேரடியாக தலைப்பு செய்திகள் ஊடாக குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளன.

இந்தப' பேரவையில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்டோர் உள்ளனர். இது தொடர்பில் முழு சபையின் சிறப்புரிமைகளும் மீறப்பட்டுள்ளன. இது பொய்யா? உண்மையா? என்று கூற வேண்டும் என்பதுடன், அந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோருகின்றேன் என்றார்.

இதன்போது பதிலளித்த பிரதமர் தினேஸ் குணவர்த்தன,

ஊடகங்களில் பல்வேறு விடயங்கள் வெளியாகின்றன. சபைக்கு சபாநாயகரே தலைமை வகிக்கின்றார். இதன்படி அவர் தீர்மானங்களை எடுக்கலாம். அது தொடர்பில் அந்த பத்திரிகைகளை அழைத்து அதனை திருத்தம் செய்யும் அதிகாரம் சபாநாயகருக்கு உள்ளதென்றார்.

இலங்கைக்கு முழுமையான...

சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுவதாகவும் சீன நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சவாலான பணியில் இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை மிகவும் பாராட்டுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாட்டின் பொருளாதார மீட்சியை ஏற்படுத்துவதற்கும் இலங்கையில் போட்டித்தன்மை வாய்ந்த டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்குமான வேலைத்திட்டம் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது. இந்த சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் சண்ட்ரா பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அடுத்த ஆண்டு ஜுன் வரை...

போதே இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக்க ,

"கடந்த காலங்களில் எமது நாடு பாரிய எரிபொருள் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தது. எரிபொருள் வரிசைகள் ஏற்பட்டன. அதேபோன்று விமானங்களுக்கு அவசியமான எரிபொருளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதனால் நாடு பாரிய சிக்கலுக்கு உள்ளானது. ஆனால் மிகவும் குறுகிய காலத்திலேயே அந்த நிலையில் இருந்து முழுமையாக மீண்டுவரஎம்மால் முடிந்தது. 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் என்பது, உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்த மாதமாகும். அன்று ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 50 அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஆனால் தொடர்ந்து வந்த நான்கு, ஐந்து மாதங்களுக்குள் அது 65 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. அதன் பின்னர் ரஷ்யா – உக்ரைன் யுத்தம் காரணமாக ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை சுமார் 100 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்தது.

அதன் பின்னர் கடந்த காலங்களில் ஏற்பட்ட சர்வதேச நிலைமைகள் காரணமாக அது 80 அமெரிக்க டொலர்கள் வரை குறைவடைந்தது. எனவே 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் குறைவாக இருந்து, படிப்படியாக அதிகரித்து வந்த மசகு எண்ணெய் விலை, இந்த வருடம், ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் ஓரளவு குறைந்துள்ளது. குறிப்பாக இந்த மாதத்தின் முதலாம் திகதியில் இருந்து ஆறாம் திகதி வரை உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை சுமார் 4% சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

இஸ்ரேல்–பலஸ்தீன பிரச்சினை...

பி.ப 5.30 மணி வரையும் சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த இங்கு தீர்மானிக்கப்பட்டது. ஆளும் கட்சி எதிர்க்கட்சியினரின் பொதுவான இணக்கப்பாட்டுடன் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அமைய விவாதம் நடத்தப்படும். பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இதற்கான பிரேரணையை முன்மொழிய, ஆளும் கட்சியின் சார்பில் இது வழிமொழியப்படும் என செயலாளர் நாயகம் தெரிவித்தார். இஸ்ரேல்பாலஸ்தீன மோதலுக்கு உடனடி போர் நிறுத்தத்தை அறிவிக்க சகல தரப்பினரையும் கோர வேண்டியதன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமை சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறும் வகையில் அமைந்துள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர், இலட்சக்கணக்கான மக்கள் காயமடைந்து இடம்பெயர்ந்துள்ளனர் .

IGP யை ஜனாதிபதியே...

குறித்து, பாராளுமன்றத்தில் நேற்று ஜே.வி.பியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து சபாநாயகர் மஹிந்த யாப்பா மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பு சபையினால் பொலிஸ் மாஅதிபரின் பெயரை அங்கீகரிக்க மட்டும்தான் முடியும். ஆனால், அவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே உள்ளது. ஜனாதிபதியின் இந்த அதிகாரத்தை அரசியலமைப்பினாலோ, அரசியலமைப்புச் சபையினாலோ கேள்விக்குட்படுத்த முடியாது. எனினும், ஜனாதிபதி நியமிக்கும் ஒருவரை அங்கீகாரிப்பதற்கோ அங்கீகரிக்காமல் விடுவதற்கோ அரசியலமைப்புச் சபைக்கு முழு அதிகாரம் உள்ளதென்றும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

IMF இன் இரண்டாம் தவணை...

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு ஏற்ப, இரண்டாவது தவணையை ஒரே தடவையில் வழங்க சர்வதேச நாணய நிதியம் இணங்கினால் அது ஆச்சரியம்தான், எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை, மேலும் நிறைவேற்றப்பட வேண்டிய மற்றும் உருவாக்கப்பட வேண்டிய நிலைமைகள் இருப்பதாகக் கூறியுள்ளார்.

புலிகள் இயக்கம் குறித்து...

மண்டபத்தில் 2018.06.02 நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் "வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் எழ வேண்டும்" என்ற சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டாரென தெரிவிக்கப்பட்டது.

அவரது கருத்து, அரசியலமைப்பின் 06 ஆவது பிரிவின் திருத்தம், 1978ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம்,, மற்றும் தண்டனைச் சட்டக்கோவை 120ஆம் ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றமென, கொழும்பு பிரதான நீதவான் நீதி நீதிமன்றத்தில் கொழும்பு குற்றப்புலனாயப்வுப் பகுப்பாய்வு மற்றும் தடுப்புப் பிரிவு அறிக்கை தாக்கல் செய்திருந்தன. இதையடுத்து, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா ஆஜரானார்.

விவாதத்தில் தவராசா சமர்ப்பித்ததாவது:

"விஜயகலா மகேஸ்வரன் ஜனாதிபதியின் மக்கள் சேவைத் திட்டத்தின் எட்டாவது நிகழ்ச்சியில் அரச அமைச்சர்கள் பலர் கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றுகையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாகப் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள் குறித்து அச்சத்தையும் ஆத்திரத்தையும் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டுப் பேசினார். தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற வன்முறைகள் இடம்பெறவில்லை. அப்படி நடைபெற்றால் அதற்கான தண்டனைகள் பாரதூரமாக இருந்தன. நாட்டின் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கபட வேண்டுமாயின் அத்தகைய நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கருதியதாகவே அவரது கருத்து அமைந்திருந்தது.இதுவன்றி நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் அவர் உரையாற்றவில்லையென நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள், தொழிலாளர்களது...

இருந்ததாக கூறி நாட்டை விட்டு வெளியேறிய சம்பவம் தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமை வடக்கு கிழக்கில் ஹர்த்தாலுக்கு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. இது குறித்து ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார். வடக்கு கிழக்கில் எதற்கு எடுத்தாலும் உடனடியாக ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்து முழு கடையடைப்பு போராட்டத்தை நடத்துவதே தற்போதைய தமிழ்த் தேசிய தலைமைகளின் வாடிக்கையாக்கி விட்டது. எனவே, இன்றைய ஹர்த்தாலை வடக்கு கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்கள் புறக்கணித்து பகிஷ்கரிக்க வேண்டும். முல்லைத்தீவு நீதிபதியின் செயற்பாடுகள் தன்னிச்சையாக அவரினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சம்பவம். அவருக்கு எவ்விதமான உயிர் அச்சுறுத்தலும் இருக்கவில்லை. அரசாங்கத்துக்கும் நீதித்துறைக்கும் அவமானத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டமை, குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்நிலையில் ஹர்த்தாலுக்கு இன்று தமிழ் கட்சிகள் அழைப்பு விடுப்பது மிகவும் கண்டனத்துக்குரியது.

ஐக்கிய தேசிய கட்சியின்...

சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்தோடு கட்சி யாப்பை மாற்றுவதற்கான நடவடிக்கைகளும் இங்கு முன்னெடுக்கப்படவுள்ளது.

இம்மாநாட்டை கடந்த (10) நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் மழை உள்ளிட்ட சில காரணிகளால் குறித்த தினத்தில் மாநாடு நடத்தப்படவில்லை.

எவ்வாறிருப்பினும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராவதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு முன்னோடியாக இந்த மாநாடு அமையும்.

பதவிகளுக்கு முக்கியத்துவமளிக்காமல், புதிய இளம் தலைமுறையினருக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும்.

அதற்கேற்ப புதிய முகங்களும் ஐ.தே.க.வில் இணையவுள்ளன. ஐ.தே.க. முகாமைத்துவ குழுவிலுள்ள பதவிகளில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. இதன் 07 உறுப்பினர்களும் சிறந்த புரிந்துணர்வுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

2048 ஆண்டை வெற்றி கொள்வோம் என்ற தொனிப்பொருளின் கீழ், கடனற்ற இலங்கையை கட்டியெழுப்பும் திட்டமிடலில் இனிவரும் பயணங்கள் அமையும்.

கோழி இறைச்சி விலையில்...

கோழி இறைச்சியின் விலைகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சமீபகாலமாக கோழி இறைச்சி விலை 1,500 முதல் 1,600 ரூபா வரை, விற்கப்படுகிறது. எவ்வாறாயினும் அதிகளவு கோழி இறைச்சி விநியோகம் செய்யப்படுவதால், ஒரு கிலோ உறைய வைக்கப்படாத கோழி இறைச்சியின் விலை 850 – 950 ரூபாவாக குறைந்துள்ளதாக கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நீர்த்தேக்கங்களின்...

மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால், விக்டோரியா நீர்த்தேக்கத்தில் விநாடிக்கு 3,750 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் மக்கள் மகாவலி ஆற்றைப் பயன்படுத்துகையில், அவதானத்துடன் செயற்படுமாறு பொல்கொல்ல மகாவலி அணையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் கேட்டுக்கொண்டுள்ளது. இதேவேளை, தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் 03 வான்கதவுகள் 2 அடிகளுக்கு திறக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் விநாடிக்கு 2,800 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

சட்டவிரோத சிகரெட்டுகள்...

வருகை முனையத்தில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் இவரைக் கைது செய்தனர்.

அடிக்கடி விமானங்கள் மூலம் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இந்நபர், நாத்தாண்டிய பிரதேசத்தில் வசிக்கும் 33 வயது நபர் என தெரியவந்துள்ளது. வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 72 அதி உயர் சிகரெட் கார்டுன்கள் அவரது சில பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பேச்சாளர் தெரிவித்தார். வர்த்தகர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்படவுள்ளதுடன், எதிர்வரும் (25) இந்த சட்டவிரோத சிகரெட் கையிருப்புடன் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார்.

நாட்டில் எலிக்காய்ச்சல்...

சுகாதார மேம்பாட்டு பிரிவு விடுத்துள்ளது. சுகாதார மேம்பாட்டுப் பிரிவு ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி இது தொடர்பில் அறிக்கை விடுத்துள்ளது..

நோயைத் தடுப்பது, தொற்றுக்குப் பிறகு நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பயன்பாடு போன்ற பல விபரங்கள் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளன.

செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட டாக்டர் துஷானி பெரேரா மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"ஒவ்வொரு ஆண்டும் 8,000 லெப்டோஸ்பிரோசிஸ் சம்பவங்கள் பதிவாகின்றன. 125 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.இந்த ஆண்டில் இதுவரை 70,00 நோயாளிகள் பதிவாகியுள்ளனர்.

குறிப்பாக விவசாயம் அதிகம் நடக்கும் மாவட்டங்களில் இந்த நோய் பதிவாகியுள்ளது. குறிப்பாக 20 வயது முதல் 60 வயது வரை உள்ளவர்களுக்கு எலிக்காய்ச்சல் அதிகமாக பரவுகிறது.

டெங்கு போன்ற தொற்று நோய்களின்போது எலிக்காய்ச்சல் அதிகமாகுவதை நினைவில் கொள்ள வேண்டும்.மேலும், இந்த காய்ச்சலால் 05 வீதமான நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான உயிரிழப்பைத் தடுக்க நோயெதிர்ப்பு மருந்துகளைப் பெறுவது அவசியம். கூடிய விரைவில் சிகிச்சை பெற வேண்டும்.விவசாயம் மற்றும் நெல் அறுவடை செய்பவர்களும் சுகாதார பரிந்துரைகளின்படி இந்த மருந்தை உட்கொள்ள வேண்டும்" என கலாநிதி துஷானி டபரேரா வலியுறுத்தினார்.

தேசிய மீலாத் விழா...

திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது மன்னார் மாவட்டத்தின் வரலாற்று நூல், மீலாத் நினைவு மலர் என்பனவும் வெளியிடப்படவுள்ளன.

இன்றைய பலன்கள்

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

மேஷம்: உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.தள்ளி வைத்த வேலையை செய்ய நேரலாம். சொந்த தொழிலி புதிய ஒப்பந்தங்கள் மூலம் வேலைப்பளு அதிகரிக்கும்.

ரிஷபம்: உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பாராத இட மாற்றமும் சம்பள உயர்வும் கிடைக்கலாம். அலுவலகம் பற்றி யாரிடமும் விமர்சிக்காமல் இருப்பது நல்லது.

மிதுனம்: உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புக்களில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோவப்பார்வைக்கு இலக்காக நேரிடும்.

கடகம்: சில விஷயங்களில் கூட்டு முயற்சி பயன் தரும். பயணங்களின்போது கவனமாக இருப்பது பயன் தரும். உத்தியோகத்தில் பதவி,சம்பள உயர்வுக்காக செய்த முயற்சி பயன் தரும்.

சிம்மம்: வெற்றியடையாத காரியங்களுக்காக தக்க நண்பர்களின் உதவியோடு மீண்டும் முயற்சிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விடுமுறையில் உள்ள சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்யும் நிலை ஏற்டலாம்.

கன்னி: சில செயல்களில் தளர்வு ஏற்பட்டு மனதில் கலக்கம் ஏற்படலாம்.நண்பர்களின் உதவியை பெற முற்படுவீர்கள்.உத்தியோகத்தில் வழக்கத்திற்கு மாறான வேலைப்பளுவால் அவதிப்படலாம்.

துலாம்: உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயரதிகாரிகளிடம் சுமுகமாக நடந்துகொள்ளாமல் பிரச்சினைகள் உருவாகலாம். சொந்த தொழிலில் புதிய நபர்களின் வருகையும் அவர்களால் பண வரவும் உண்டாகும்.

விருச்சிகம்: தர்ம காரியங்களிலும் புண்ணிய செயல்களிலும் நாட்டம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் விருப்பப்படி பணியை செய்துகொடுக்க நேரிடும்.

தனுசு: முக்கிய ஆண்மீக நிகழ்ச்சிக்கு பண உதவி செய்யும் சந்தர்ப்பம் ஏற்படும்.உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள பொருட்களா பாதுகாப்பாக வைத்துக்கொள்வது அவசியம்.

மகரம்: உத்தியோகத்தர்கள் தங்கள் பொறுப்புக்களில் கவனம் செலுத்தாவிட்டால் உயரதிகாரிகளின் பார்வையில் தென்படும் குறைகளுக்கு பதில் சொல்ல வேண்டியதிருக்கும்.

கும்பம்: சிலருக்கு அலுவலகத்தில் முக்கிய பொறுப்பு வந்து சேரும். சொந்த தொலில் முன்னேற்றமான போக்கு காணப்படும்.புதிய வாடிக்கையாளர்களால் தொழில் ரீதியான முன்னேற்றம் கிடைக்கும்.

மீனம்: பண விவகாரங்களில் ஒரு முறைக்கு இரு முறை நிதானமாக யோசித்து செய்வது நன்மை தரும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு அலுவலகத்தில் கிடைக்க வேண்டிய கடன் தொகை கிடைக்கும்.

ஊடகவியலாளர் சுபாஷினின்... (03ஆம் பக்கத் தொடர்)

அருகில்) இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1:00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாலை 03.00 மணிக்கு பொரளை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

பாலஸ்தீன தூதுவரை... (03ஆம் பக்கத் தொடர்)

குறித்து, தனது ஆழ்ந்த கவலையையும் இதன்போது அவர் தெரிவித்தார்.

மேலும், போர் விதிகளை மீறி இஸ்ரேல் கட்டவிழ்த்துள்ள வான் தாக்குதல்களை கண்டிப்பதுடன், முஸ்லிம் உலகம் ஒன்றுபட்டு ஸியோனிஸவாதிகளை எதிர்க்க ஆயத்தமாக வேண்டும் என்றும் பலஸ்தீனத் தூதுவரிடம் அவர் குறிப்பிட்டார். உயிரிழந்வர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் குற்றுயிராகக் கதறும் சகோதரர்களுக்காகப் பிரார்த்திப்பதாகவும் இதன்போது ரிஷாட் எம்பி, தெரிவித்தார்.

வரவு செலவு திட்டம்... (03ஆம் பக்கத் தொடர்)

விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாட்டின் பொருளாதாரத்தின் மீது நம்பிக்கை கொள்ளும் நிலை தற்போது உருவாகியுள்ளது. நிலையான மறுசீரமைப்புகளுக்காக பாராளுமன்றத்தின் ஊடாக ஒருசில சட்டத்திருத்தங்களை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறுகிய கால இலக்குகளுக்கு அப்பாற்பட்ட வகையில் நிலையான இலக்குகளை நாம் எதிர்பார்த்துள்ளோம்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் மாற்றுத்திட்டங்கள் இல்லாததாலும்,எதிர்த்தரப்பினர் முன்வைத்த மாற்றுத் திட்டங்கள் நடைமுறைக்கு சாத்தியமற்றதாலும் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டங்களை நடைமுறைத்த வேண்டியிருந்தது. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் கடுமையான மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் ஒரு தரப்பினர் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகளை பலவீனப்படுத்தவும், மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்கவும் முனைகின்றனர். குறுகிய நோக்கத்துடன் செயல்படுவோரின் நடவடிக்கைகள் வெற்றியடையுமானால் நாடு கடந்த ஆண்டு எதிர்கொண்ட நெருக்கடிக்கே மீண்டும் செல்ல நேரலாம். சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையுடன் இரண்டாம் கட்ட ஊழியர் மட்ட இணக்கப்பாட்டை எட்டுவதற்கான பேச்சுவார்த்தை கடந்த மாதம் இடம் பெற்றது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு,கடன் நிலைபேறான தன்மை,கடன் காப்புறுதி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

SJB MP மான்னப்பெருமவுக்கு...

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சர்ச்சையின் போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் அஜித் மான்னப்பெரும சபை நடுவே செங்கோல் வைக்கப்பட்டிருக்கும் இடத்துக்கு வந்து செங்கோலை கைப்பற்ற முற்பட்ட போது, சபாநாயகர் அந்த நடவடிக்கையை கடுமையாக கண்டித்து, சபை நடவடிக்கைகளை தற்காலிகமாக பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார். மீண்டும் 10 நிமிடயங்களுக்குப் பின்னர் பாராளுமன்றம் கூடியபோது, சபாநாயகர் மேற்படி அறிவிப்பை சபையில் விடுத்தார்.பாராளுமன்ற நடவடிக்கைக்காக செங்கோல் வைக்கப்பட்டுள்ள நிலையில் அதனை தொடுவது நிலையியற் கட்டளை 77 (3) ற் பிரகாரம் பாரிய குற்றமாகும். அதன்படி நேற்றைய சபை அமர்வின் போது வழமை போன்று செங்கோல் வைக்கப்பட்டிருந்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் அஜித் மான்னப்பெரும செங்கோலை தமது கைகளால் தட்டினார்.

காஸாவில் மரணித்தோருக்கு...

காட்டுமிராண்டித்தனமான தாக்குதலாலும் ஒட்டுமொத்தமாக 4000 க்கும் மேற்பட்டோர்ஷஹீதாக்கப்பட்டுள்ளதோடுபல்லாயிரக் கணக்கானோர் படுகாயமடைந்திருப்பதையும் நாம் அறிவோம். அதில் பெரும்பான்மையானவர்கள், குழந்தைகளும் பெண்களும் வயோதிபர்களும் ஆவர்.

இதுபோன்ற நிகழ்வுகளின் போது மரணிக்கும் எமது சகோதரர்களுக்காக பாவமன்னிப்புத் தேடுவதும் அவர்களுக்காக மறைவான ஜனாஸாத் தொழுகை நடாத்துவதும் இஸ்லாமிய வழிகாட்டலாகும். அந்த வகையில் இத்தாக்குதலில் மரணித்தவர்களுக்காக மறைவான (காஇப்) ஜனாஸா தொழுகை நடாத்தி, அதனைத் தொடர்ந்து பலஸ்தீனில் அமைதி நிலவவும் முஸ்லிம்களின் உயிர், உடைமைகள் பாதுகாக்கப்படவும் வல்ல அல்லாஹ்விடம் உதவி வேண்டி அனைவரும் ஒன்றுசேர்ந்து துஆ பிரார்த்தனையில் ஈடுபடுவதற்கான ஏற்பாட்டை செய்யுமாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை வேண்டிக் கொள்கிறது.

தமிழ், சிங்கள மொழி...

ளில் நிலவும் ஆசிரிய தேவைகளுக்கேற்பவே இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

பாடசாலைகளின் ஆசிரியர் தேவையை மையப்படுத்தி நியமனங்கள் வழங்கப்படவுள்ளதால், நியமனம் பெறும் ஆசிரியர்கள் 08 வருடங்கள் இப்பாடசாலைகளில் கட்டாயமாக சேவை செய்ய வேண்டிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிங்கள மொழி மூலமான விண்ணப்பதாரிகள் சபரகமுவ மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களாகவும் தமிழ் மொழி மூல நியமனங்களுக்கு நாட்டின் எப்பாகத்திலிருந்தும் விண்ணப்பிக்கலாமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சப் ரகமுவ மாகாணத்தில் தமிழ் மொழி மூலப்பட்டதாரிகளுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக, இத்தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மலைச்சாரல்

பிறப்பு, இறப்பு சான்றிதழில் இனத்தை குறிப்பிடல்

சுற்றுநிரூபத்துக்கு கிழக்கு ஆளுநர் செந்தில் கண்டனம்

பிறப்பு, இறப்புச் சான்றிதழில் இனத்தை குறிப்பிடுவது தொடர்பாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிரூபத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் கண்டனம் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆளுநர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "இலங்கையர் எனும் வகையில், இந்நாட்டு பிரஜை எனும் வகையில் தமது இனத்தை பிறப்பு, இறப்புச் சான்றிதழில் குறிப்பிட அனைவருக்கும் உரிமை உள்ளது.

பிரஜா உரிமை இல்லாத சமூகமாக நாம் இருந்த போது, இந்திய வம்சாவளித் தமிழர் எனும் அடையாளமே எமக்கான அங்கீகாரமாக இருந்தது. எமது இனத்தின் அடையாளத்தை தீர்மானிப்பதற்கு மூன்றாம் தரப்பினருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

1948ஆம் ஆண்டுகளில் பிரஜா உரிமையின்றி இருந்த எமது சமூகத்தினர், கிட்டத்தட்ட 40 வருட போராட்டங்களுக்கு பின்னர் இந்திய வம்சாவளியினர் எனும் அங்கீகாரத்துடன் பிரஜா உரிமை பெற்றனர்.

இந்திய வம்சாவளி தமிழ் மக்களை 'இலங்கைத் தமிழர்' என அடையாளப்படுத்த முற்படுவது அம்மக்களின் அடையாளத்தை மறைக்கும் ஒரு செயற்பாடாகும். இவ்வாறான சுற்றுநிரூபங்களை வெளியிடுவதை வன்மையாக கண்டிக்கிறேன்" எனத் தெரிவித்தார்.

சப்ரகமுவ ஆளுநருடன் இந்திய உதவி உயர்ஸ்தானிகர் சந்திப்பு

காவத்தை தினகரன் விசேட நிருபர்

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ். ஆதிராவுக்கும் இடையிலான சந்திப்பு சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை (19) நடைபெற்றது.

இதன்போது, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் வாழும் மக்களுக்காக நடைமுறைப்படுத்தக்கூடிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய புலமைப்பரிசில் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக, சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாகன விற்பனை

மூன்று சக்கர வாகனம்	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
YX-2852	பஜாஜ்	2012	ராகம
QP-2967	பஜாஜ்	2008	ராகம

ஓற்றை வண்டி	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
DAC-9823	டாடா	2015	ராகம

மோட்டார் லாரி	மேக்/மாடல்	ஆண்டு	முற்றம்
68-2231	நிசான்	1993	ராகம

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம்
அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம
0773 951 796

கம்பளை நகைக்கடையில் பாரிய கொள்ளை

அக்குறணை குறூப் நிருபர்

கம்பளை நகரிலுள்ள நகைக் கடையொன்றிலிருந்து பெருமளவானதங்கநகைகளும்மாணிக்கக் கற்களும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். கொள்ளையர்கள் கடந்த திங்களன்று மேற்படி நகைக் கடையின் கூரையை உடைத்துக்கொண்டு, நகைக் கடையினுள் நுழைந்து இந்த கொள்ளைச் சம்பவத்தை புரிந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். நகைக் கடையிலிருந்த பாதுகாப்புக் கமெராவில் இந்தக் கொள்ளைச் சம்பவம் பதிவாகியுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மோப்பநாய் மற்றும் கைரேகை நிபுணர்களின் உதவியுடன் மேலதிக விசாரணையை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மஹியங்கனை - தம்புள்ளை வீதியில் விபத்து; 10 பேர் காயம்

ஊவா சுழற்சி நிருபர்

மஹியங்கனை - தம்புள்ளை வீதியில் நேற்று (19) இடம் பெற்ற வாகன விபத்தில் 10 பேர் படுகாயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். மஹியங்கனையிலிருந்து தம்புள்ளைக்கு மரக் குற்றிகளை ஏற்றிச் சென்ற லொறியொன்றும் இ.போ.ச. மஹியங்கனை டிப்போவுக்குச் சொந்தமான பஸ் வண்டியும் நேருக்குநேர் மோதி இந்த விபத்துச் சம்பவித்தது.

லொறியின் முன்சில்லு கழன்ற போதே, இந்த விபத்து நேர்ந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது படுகாயமடைந்த இரண்டு வாகனங்களின் சாரதிகள் உட்பட 10 பேர் மஹியங்கனை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பாக மஹியங்கனை பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த மாணவிக்கு பாராட்டு

நாவலப்பிட்டி நகரிலிருந்து பொகவந்தலாவைவரை 54 கிலோமீற்றர் தூரத்துக்கு 8 மணி 30 நிமிடங்களில் கால்நடையாகச் சென்று, சோழன் உலக சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதிவு செய்த பொகவந்தலாவை சென். மேரிஸ் தேசிய கல்லூரியின் மாணவி வசந்தகுமார் நிதர்ஷனாவை பாராட்டும் நிகழ்வொன்று கல்வி அமைச்சில் அண்மையில் நடைபெற்றது. தரம் 10 இல் கல்வி பயிலும் இம்மாணவிக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் வாழ்த்து தெரிவித்ததுடன், சான்றிதழ் மற்றும் பணப்பரிசிலை வழங்கி வைத்தார். இதன்போது, இம்மாணவியின் தந்தை வசந்தகுமார், சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கைக்கான உபதலைவர் ஸ்ரீநாகவானிராஜா, சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் நுவரெலியா மாவட்டத் தலைவர் எஸ்.சதீஸ்குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மீரியபெத்தவிலிருந்து 16 குடும்பங்களை வெறியேற உத்தரவு

பதுளை தினகரன் விசேட நிருபர்

கொஸ்லாந்தை, மீரியபெத்த பிரதேசத்திலிருந்து 16 குடும்பங்களை உடனடியாக வெளியேறுமாறு, பண்டாரவளை நீதிமன்ற பதில் நீதவான் கென்னத் டி சில்வா நேற்று முன்தினம் புதன்கிழமை (17) உத்தரவிட்டார். மீரியபெத்த பழைய மண்சரிவு இடம்பெற்ற இடத்தில் இருபுறங்களிலும் அதிக ஆபத்துள்ள வலயத்திலுள்ள 16 குடும்பங்களையே வெளியேறுமாறு நீதவான் உத்தரவிட்டார். இது தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் உரியவர்களுக்கு அறிவிக்கப்படவுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். ஆபத்துள்ள இந்த இடத்திலிருந்து நீதிமன்ற உத்தரவை மீறி வெளியேறாதவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும், கொஸ்லாந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை முதலீட்டுச் சபை

பெறுகை அறிவித்தல்

SUPPLY OF UNIFORM. MATERIALS FOR ENTITLED EMPLOYEES OF BOARD OF INVESTMENT OF SRI LANKA FOR YEAR 2024 - (CONTRACT NUMBER: BOI/S&S/Q/76/2023) விலைக்கோரல் விளம்பரம் 2023 ஒக்டோபர் 20ஆம் திகதிய ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2543041/074-1531432 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
இலங்கை முதலீட்டுச் சபை.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

ஒப்பந்த பெயர்
களுவாஞ்சிக்குடி, எருவில் உள்ளக வீதியின் மேம்படுத்தல்கள் பொதி.01 (1200 M)
களுவாஞ்சிக்குடி, எருவில் உள்ளக வீதியின் மேம்படுத்தல்கள் பொதி.02 (1050 M)
களுவாஞ்சிக்குடி, எருவில் உள்ளக வீதியின் மேம்படுத்தல்கள் பொதி.03 (1100 M)
களுவாஞ்சிக்குடி, எருவில் உள்ளக வீதியின் மேம்படுத்தல்கள் பொதி.04 (1300 M)
களுவாஞ்சிக்குடி, எருவில் உள்ளக வீதியின் மேம்படுத்தல்கள் பொதி.05 (1200 M)
வாழைச்சேனை, சுங்கன்கேர்ணி, மைதான வீதியின் மேம்படுத்தல்கள், கட்டம் 01
வாழைச்சோனை, சுங்கன்கேர்ணி, மைதான வீதியின் மேம்படுத்தல்கள், கட்டம் - 02
மகிலூர் உள்ளக வீதியின் நிர்மாணம் (கட்டம் 01)
மகிலூர் உள்ளக வீதியின் நிர்மாணம் (கட்டம் 02)
நாவற்காடு,இரக்காற்று முனை பிரதான வீதியின் மேம்படுத்தல்கள்

தேசிய போட்டி விலைமனு முறைமையின் கீழ் மேற்படி வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023.10.20 முதல் 2023.10.26 வரை RDA மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk ஐப் பார்வையிடுமாறு கேட்கப்படுகின்றன.

இலங்கை வங்கி

விலை கூறலுக்கான அழைப்பு

இலங்கை வங்கியின் ஸ்விப்ட் (SWIFT) முறைமைக்கான 03 சேவையகங்களை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், ஆரம்பித்தல் மற்றும் பராமரித்தல்

ஏல விலைகூறல் இல. P/PROC/2023/228

1. கொழும்பு 1, இலங்கை வங்கி மாவத்தை, இல.1, "இலங்கை வங்கி சதுக்கம்", தலைமை அலுவலகம், இலங்கை வங்கியின், 14ஆம் தளத்தில் உள்ள சொத்துக்களும் சேகரிப்பும் பகுதியின் பிரதான முகாமையாளர், இலங்கை வங்கியின் ஸ்விப்ட் (SWIFT) முறைமைக்கான 03 சேவையகங்களை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், ஆரம்பித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்கான முத்திரையிடப்பட்ட விலைகூறல்களைக் கோருகின்றார்.

2. இவ்விலைகூறல்களுக்குத் தகைமை பெற, விலைகூறுவோர் பின்வரும் குறைந்தபட்ச முன் தகுதி அளவுகோல்களைப் பெற்றிருக்க வேண்டும்.
   i. விலைகூறுவோர், கடந்த மூன்று நிதியாண்டுகளுக்காக (2021/2022, 2020/2021 மற்றும் 2019/2020) சேவையகங்கள் உள்ளடங்கலாக, கணினி வன்பொருட்களை விற்பனை செய்வதன் ஊடாக ரூபா 100.0 மில்லியன் கொண்ட சராசரி குறைந்தபட்ச வருடாந்த புரள்வினைக் கொண்டிருக்க வேண்டும்.
   ii. முன்வைக்கப்படும் உற்பத்திகளுக்கு விலைகூறுவோர், அதிகாரமளிக்கப்பட்ட நேரடி விற்பனைப் பங்காளராக மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட சேவை வழங்குநராக இருக்க வேண்டும். உற்பத்தியாளரின் உறுதிப்படுத்தல் கட்டாயமாகும்.
   iii. விலைகூறுவோர், குறைந்தபட்சம் நிரந்தர/முழுநேர 05 தொழில்நுட்ப ஊழியர்களை பணிக்கு அமர்த்தியிருக்க வேண்டும் என்பதுடன், முதன்மையாளரிடமிருந்து தொடர்புடைய மூல உபகரண உற்பத்தி சான்றுபடுத்தல்களுடன் கூடிய குறைந்தபட்சம் நிரந்தர/முழுநேர 03 தொழில்நுட்ப ஊழியர்களைப் பணிக்கு அமர்த்தியிருக்க வேண்டும்.
   iv. விலைகூறுவோர், இலங்கையில் கடந்த 05 ஆண்டுகளுக்குள் (2018.09.30 தொடக்கம் இற்றை வரை) குறைந்தபட்சம் 25 சேவையகங்களை வழங்கி, பொருத்தி, ஆரம்பித்து மற்றும் பராமரித்திருக்க வேண்டும். கடந்த 05 வருட காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்ட அனைத்துக் கட்டளைகள் பற்றிய ஆவணரீதியான சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
   v. விலைகூறுவோர், இலங்கையிலுள்ள நிறுவனங்களுடன் சேவையகங்களுக்கான குறைந்த பட்சம் 05 செயற்பாட்டிலுள்ள பராமரிப்பு ஒப்பந்தங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. விலைகூறுவோர் மூலம் மேற்குறித்த தகைமைப் பிரமாணத்திற்கான தகைமையினை உறுதிப்படுத்துவதற்கு, விலைகூறலுடன் சேர்த்து சான்றுபடுத்தப்பட்ட ஆவண ரீதியான சான்றினைச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். அத்தகைய ஆவணரீதியான சான்று சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் விலைக்குறிப்பீடு நிராகரிக்கப்படும்.

4. ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணங்களின் முழுமையான தொகுதியை, BOC System 21 Trans கணக்கிற்கு வரிகள் உள்ளடங்கலாக ரூபா 12,000 கொண்ட மீளளிக்கப்படாத கொடுப்பனவைச் செலுத்துவதன் மூலம் (கொடுப்பனவு முறை - காசு) கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு எழுத்தினாலான விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் மீது ஆர்வமுடைய விலைகூறுவோர் கொள்வனவு செய்யப்படலாம். கிளையின் 11310422 மீளளிக்கப்படாத வைப்புக் கணக்கு: தனிப்பட்ட கிளை என கணக்கின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

   வங்கி வலையமைப்பு ஊடாக வைப்புச் செய்வதற்கு முன்னர் 011-2204266 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு, முன்கூட்டிய ஏற்பாட்டினைச் செய்துகொள்ளுமாறு விலைகூறுவோர் கோரப்படுகின்றனர்.

5. முக்கிய திகதிகளும் விலைக்குறிப்பீட்டு பிணையும் :

ஏல ஆவணங்களை வழங்குவதற்கான இறுதித் திகதியும் நேரமும்	:	2023.11.09 அன்று வேலை நாட்களில் 9:00 மணி முதல் 15:00 மணி வரை
ஏலங்கள் முடிவடையும் திகதியும் நேரமும்	:	2023.11.10 அன்று 10:00 மணி
ஏலங்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும்	:	ஏலவிலை கூறல் முடிவடைந்த அடுத்த கனம்
ஏலப் பிணை	:	ரூ. 400,000.00 (ரூபா நான்கு இலட்சம் மட்டும்) மற்றும் 2024.03.08 வரை செல்லுபடியாகும்.

6. விலைகூறல்கள், வங்கி ஏற்றுக்கொள்ளத்தக்க, இலங்கையிலுள்ள வர்த்தக வங்கி ஒன்றிடமிருந்து (இலங்கை வங்கி தவிர) விலைகூறலுடன் தொடர்புடைய பெறுமதிக்கு வங்கி உத்தரவாதத்துடன்/ விலைகூறல் முறியுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். காசு வைப்புகள் / கொடுப்பனவுக் கட்டளைகள் / வங்கி வரைபுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

7. ஏதேனும் அல்லது அனைத்து விலைக்குறிப்பீடுகளையும் நிராகரிப்பதற்கான உரிமையையும், எவ்வித காரணமும் குறிப்பிடாது விலைக்குறிப்பீட்டின் ஏதேனும் பாகத்தினை ஏற்றுக்கொள்ளும் உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

8. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவின் பிரதான முகாமையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பிரதான முகாமையாளர்
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி
"BOC சதுக்கம்" இல.01,
இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 094 112544310, 094 11 2434786
மின்னஞ்சல்: procurement@boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

"புனர்வாழ்வு புதுவாழ்வு" அமைப்பின் ஏற்பாட்டில்

அலிகம்பை தேவ கிராம மக்களுக்கு சுத்தமான குடி நீர் வழங்கி வைப்பு

'புனர்வாழ்வு புதுவாழ்வு' அமைப்பின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று அலிகம்பை தேவ கிராம மக்களுக்கு 60 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் இணைப்பினை வழங்கி வைக்கும் வைபவம் சவேரியா ஆலயத்தின் பங்குத் தந்தை அருட். திரு ஜெகநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் லண்டன் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் மற்றும் இலங்கைக்கான புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் தலைவர் பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு குறித்து தேவகிராம பிரான்சுஸ் சவேரியா ஆலயத்தின் பங்குத் தந்தை அருட் திரு ஜெகநாதன் கருத்து தெரிவிக்கையில்;

அலிகம்பே தேவ கிராம மக்கள் தண்ணீரின்றி துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலைமையப் பார்த்து நம்மோடு அவர்களும் இருக்கிறார்கள் என்று சொல்வதற்கும் இனிவரும் காலங்களில் எம்மோடு சேர்ந்து பயணிப்பதற்கு அவர்கள் ஆணித்தரமான சேவையை நமக்கு வழங்கியிருக்கிறார்கள். எங்கே இருந்தாலும் எங்கள் மக்களோடு இணைந்து இருக்கின்றீர்கள்.

புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் இங்கிலாந்து நாட்டின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் மற்றும் இலங்கைக்கான தலைவர் பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோருக்கும் தேவ கிராம மக்கள் சார்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



அக்கரைப்பற்று அலிகம்பை தேவ கிராம மக்களுக்கு தூய்மையான தண்ணீர் கிடையாது. பூவலில் தண்ணீரை எடுத்து வடி கட்டி உறைய விட்டுத்தான் இப்பிரதேச மக்கள் தண்ணீர் குடிக்க வேண்டும். பொதுக் கிணறுகள் பல இடங்களில் தோண்டியும் பலன் கிடைக்கவில்லை. ஆனாலும் ஒரு சில கிணறுகள் உள்ளன. அதில் மழித்தண்ணீர்கள் தான் வருகின்றன. அதனை ஒரு நாள் ஊற விட்டு அந்த தண்ணீரை எடுத்து ஒரு கிழமைக்கு வைத்துப் பார்த்தால் மடி இருக்கும். இது அவர்களுடைய உடலுக்கு உகந்தவை அல்ல. எனினும், பூவலில் உள்ள தண்ணீரை வடித்து எடுத்துக் குடிப்பார்கள். இத்தண்ணீரை கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள், சிறுவர்கள் குடித்தனர். ஆனாலும் இவை குடிப்பதற்கான சுத்தமான தண்ணீர் கிடையாது.

தண்ணீர் குடிப்பதற்கு இல்லை என்றால் அவர்களுடைய சுத்தம் எப்படி இருக்கும் என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், ஏனைய தாய்மார்கள் இந்த தண்ணீர் இல்லாப் பிரச்சினைகள் காரணமாக பல தரப்பட்ட அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர். மலசல கூடப் பிரச்சினை, உடைகளை கழுவுதல், முகம் கழுவுதல், பல் துலக்குதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிள்ளைகளிடம் ஏன் சப்பாத்து போட்டு வரவில்லை? கால் மேஸ் போட்டு வரவில்லை? என்று பாடசாலையில் சத்தம் போட்டுக் கேட்க முடியாது. அவர்கள் குளிக்க தண்ணீர் இல்லை, தலைக்கு எண்ணெய் வைக்க முடியாது. சீரான உடை அணிய முடியாது. அந்த தண்ணீரில் கழுவினாலும் மஞ்சள் நிறமாக பாடசாலை சீருடை காணப்படும். அதற்கான வசதி கிடையாது.

தண்ணீர் கிடைக்குமாயின் நிறைய நோய் நொடிகளில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும். நல்ல உடல் ஆரோக்கியத்துடன் வாழலாம். சுத்தமாக இருக்கின்ற போது பாடசாலை சென்றால் ஆசிரியர்மார்கள் சந்தோசத்துடன் படிப்பிப்பார்கள். தண்ணீர் இல்லா விட்டால் சமைக்க முடியாது. சாப்பிடாமல் பாடசாலை செல்லும் பிள்ளை எப்படிப் படிக்கும். குறைந்தது குளிர் பானம், தேநீர் அருந்துவதற்கு தண்ணீர் தேவை.

தண்ணீர் இந்தப் பிரதேசத்திற்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். சுமார் 70 வருடங்களுக்குப் பிறகு இப்பிரதேச மக்கள் சுத்தமான தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று கூறலாம். இப்பிரதேச மக்கள் தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக நிறைய முயற்சிகள் செய்துள்ளார்கள். ஆனால் கிடைக்கவில்லை. புனர்வாழ்வு புது வாழ்வு அமைப்பினால் இந்த மக்களுக்கு தண்ணீர் வழங்கப்பட்டமை இங்கு வரவேற்கத்தக்க விடயமாகவும் வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய அம்சமாகவும் இருக்கிறது.

குடிநீர் இணைப்பு இப்பிரதேச மக்களுக்கு வழங்கப்படுவதால் அவர்களுடைய ஒவ்வொரு வீடுகளும் சுத்தம் சுகம் தரும் வீடுகளாக மாறுகின்றன.

இந்தப் பிரதேச தேவ கிராம மக்களைப் பொறுத்தவரையிலும் ஆரம்பத்தில் இடம்விட்டு இடம்பெயர்ந்து வாழும் வாழ்க்கை முறையை கொண்ட மக்கள் ஆவர். இவர்கள் 1940 களில் அக்கரைப்பற்று அலிகம்பை தேவ கிராமத்தில் குடியேற்றப்பட்டு நிரந்தரக் குடியேற்றவாசிகளாக மாறினர். இவர்கள் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், சுயதொழில் போன்ற முயற்சிகளில் பாரிய முன்னேற்றத்தைக் கண்டு வருகின்றனர்.

இவர்கள் ஆரம்பத்தில் வேடவர் தொழில், பாம்பு ஆட்டுதல், குரங்கு வித்தைகள் காட்டுதல் போன்ற தொழில் துறையைக் கொண்டவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் வீட்டில் பேசும் மொழியாக தெலுங்கு மொழியைக் கொண்டுள்ளனர். இவர்களில் ஒரு சாரார் சிங்களப் பகுதிகளில் வாழுகின்றனர். வெளியே சிங்களம் பேசிக் கொண்டு வீட்டில் தெலுங்கு மொழியைப் பேசி வருகின்றனர். மற்றுமொரு சாரார் தமிழ் மொழி பேசிக் கொண்டு வீட்டில் தெலுங்கு மொழியைப் பேசி வருகின்றனர்.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த வண பிதா அருட்திரு குக் என்பவர் ஆரம்ப காலத்தில் இவர்களுடைய நடவடிக்கைகளை அவதானித்தார். அவர்களுடன் நேரடியாக கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டு அவர்களுடைய அடிப்படை வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட முனைந்தார். முதலில் இவர்கள் குறித்த விடயங்களை உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று நிரந்தரக் குடியேற்றம் தொடர்பில் முயற்சிகளை மேற்கொண்டு நிரந்தர குடியேற்றவாசிகளாக ஆக்கிய பெருமை அருட் திரு வணபிதா குக் அவர்களையே சாரும்.

இந்த மக்களுக்கு ஆரம்பத்தில் சிறிய வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்து ஆடு மேய்த்தல், விவசாயம் எவ்வாறு செய்வது தொடர்பில் கற்றுக் கொடுத்து அதன் பால் அவர்களை சுய

தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்களை மேற்கொண்டார்.

உழவு இயந்திரத்தை வாங்கிக்கொடுத்து அதற்குரிய சாரதிப் பயிற்சியினையும் வழங்கி பொதுவாக விவசாயம் செய்கை பண்ணுதல் தொடர்பில் ஊக்குவித்தல், சுய தொழிலை ஊக்குவித்தல் மற்றும் அவர்களுடைய கலாசாரத்தோடு சேர்த்து அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பல்வேறு வேலைத் திட்டங்களை வணபிதா அருட் திரு குக் முன்னெடுத்தார்.

இறப்பு ஏற்பட்டால் எவ்வாறு நடந்து கொள்வார்கள், ஒரு பிள்ளை பூப்பெய்தினால் எவ்வாறு நடந்து கொள்வார்கள் திருமண விழாக்கள், கொண்டாட்டங்களில் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்றதொரு தனித்துவமான கலாசாரங்களைக் கொண்டிருந்தார்கள். தற்போது அவை எல்லாம் இல்லாமல் குறைந்து விட்டன. மற்றைய இடங்களுக்குச் சென்று பார்த்து வருவதால் அவைகள் எல்லாம் இல்லாமற் போய் விட்டன.

அவர்கள் பருவ வயதை அடைந்தவுடன் திருமண பந்தத்தில் இணைந்து விடுவார்கள். அதை செய்யாவிட்டால் ஏதோ தங்களை மற்றவர்கள் வித்தியாசமாகப் பார்க்கின்றார்கள் என்ற ஒரு நினைப்பு அவர்களிடத்திலே இருக்கிறது. 11 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு மிகவும் சொற்பமானவர்கள் தான் பாடசாலைக்கு படிக்கச் செல்வார்கள். அவர் திருமணம் முடித்தாலும் தொழில் இருக்காது. அவர்களுக்கு வீடு இருக்காது. வேட்டைக்குப் போய் வருவார்கள். வேளாண்மை செய்தார்கள் என்றால் அதன் நெல்லை வைத்துக் கொண்டு சாப்பிடுவார்கள். இவையும் இல்லை எனில் அவர்கள் ஊர் சுற்றச் செல்வார்கள். இவ்வாறான பழக்க வழக்கங்களுடன் வாழ்ந்தவர்கள் இன்று புதிய மாற்றங்களுடன் எழுச்சி பெற்று நிற்கிறார்கள்.

அவர்களில் பெரும்பாலானவர்கள் வேட்டைக்குச் செல்வார்கள். எனினும் அவர்கள் பெரியளவில் சம்பாதிப்பதில்லை. அவர்கள் சம்பாதிக்கின்ற பணத்தை எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்று தெரியாது. கணவன் மனைவி இருவரும் அதிகம் வெற்றிலை சாப்பிடுவார்கள். இத்தகைய நிலையில் வாழ்ந்த மக்கள் இன்று புதிய மாற்றத்தை நோக்கிப் பயணிக்கத் தொடங்கி விட்டனர். அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழகப் பட்டதாரிகள், சமயப் பெரியவர்கள், தொழில் துறைகளில் முன்னேறியவர்கள் இருக்கிறர்கள். பிரதேச சபைத் தேர்தலுக்கு போட்டியிட்ட பிரதிநிதிகள் எனப் பலர் இன்று உருவாகியுள்ளார்கள். எனினும் இவர்கள் இப் பிரதேசத்தின் வணபிதா குக் அவர்களிடத்தில் வந்து ஆலோசனைகளைக் கேட்டுத்தான் எதையும் செய்வார்கள். இங்கு எட்டு வட்டாரங்கள் உள்ளன. எட்டு வட்டாரத்திற்கு தலைவர்கள் இருக்கிறார்கள். வட்டாரத்திற்குள் ஒரு தலைவர் இருப்பார். அவர்தான் ஊர் தலைவர்.

இங்கு இவர்களுக்கென பாடசாலை ஒன்று அமைந்துள்ளது. நிறையப் பிள்ளைகள் சிறந்த முறையில் கல்வி பயிலுகின்றார்கள். சாதாரண பிள்ளைகளை விட அலாதியான திறமைகள் இவர்களது பிள்ளைகளிடத்தில் இருக்கின்றன.

அவர்கள் படிப்பிலும் விளையாட்டிலும் அதிக திறமை காட்டி வருகிறார்கள். இப்பிரதேசத்தில் ஒன்பது பேர் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பையும் கல்வியற் கல்லூரியினை முடித்தவர்களும் உள்ளனர். அண்மையில் ஒருவர் சட்டத்தரணியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். 419 குடும்பங்கள் இங்கு வசிக்கின்றனர். சாதாரணமாக ஏழாம் ஆண்டு படிக்கின்ற பிள்ளைகள் 200 பேர் உள்ளார்கள். ஒவ்வொரு வீடுகளிலும் மூன்று நான்கு, ஐந்து என்ற எண்ணிக்கையில் உள்ளனர். அவர்களுக்கு இன்று மிக முக்கியமான தேவையாக இருப்பது கல்வியாகும். இக்கல்வியினை வழங்கினால் மற்றைய விடயங்கள் எல்லாம் தானாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

உணவு, உறையுள், உடை ஆகிய அடிப்படை வசதிகள் ரொம்பக் குறைவு. ஒவ்வொரு வீடுகளும் மிகச் சிறிய வீடுகள், அருகருகே வீடுகள் அமைந்துள்ளன. அவர்கள் வீட்டில் கல்வி கற்பதற்கான சூழல் இல்லை. ஆதலால் அவர்கள் கற்றலுக்கான சூழல் வசதிகளை தேவாலயத்தில் வைத்திருக்கின்றோம். அவர்கள் இங்கு வருகை தந்து படித்து விட்டுச் செல்லாம். அவை மட்டுமல்ல அவர்களுக்கான விழிப்புணர்வூட்டுதல் நிகழ்வுகளையும் அடிக்கடி நடத்தி வருகின்றோம்.

பிள்ளைகள் தெலுங்கில் சிந்திப்பதன் காரணமாக அதற்கான பிரத்தியேகமான வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு விசேட சம்பளமும் வழங்கப்படுகின்றன. முன்பள்ளிப் பாடசாலை நடாத்தப்படுகின்றன. இந்தியாவில் சென்று படித்தவர்களும் இங்கு இருக்கிறார்கள். கணினி கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களும் இங்கு இருக்கிறார்கள். இந்தப் பிரதேசத்திற்கு வரும் பாதை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. ஒரு கர்ப்பிணித் தாயை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. அலிகம்பைச் சந்தியில் இருந்து தேவ கிராமத்திற்குச் செல்லும் பாதை குன்றும் குழியுமாக காணப்பட்டு மிகவும் மோசமாகப் பழுதடைந்து காணப்படுகின்றது. 6 கிலோ மீட்டர் தூரத்தை நான்கு ஐந்து நிமிடத்தில் சென்று விடலாம். ஆனால் இந்தப் பாதை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமையினால் அரை மணித்தியாலயத்தில் மேல் தேவ கிராமத்தை அடைய நேரம் செலவாகின்றன.

★ இங்கிலாந்து நாட்டின் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி சர்வேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

இந்த தேவ கிராமத்திற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் நானும் எனது நண்பர் ஹென்றி அமல்ராஜ் அவர்களும் வந்திருக்கின்றோம். ஆனால் இந்த தண்ணீர் வசதியை உடன் பெற்றுக் கொடுக்க முடியாமைப் போனதையிட்டு நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன். நாட்டில் நிலவிய கொரோனா மற்றும் ஏனைய பிரச்சினைகள் காரணமாக சமுகமளிக்க முடியவில்லை. எனினும் இதற்கு உடன் தீர்வைப் பெற்றுக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் உடன் செய்யவில்லை. அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்.

நாங்கள் இதுவரை நாடளாவிய ரீதியில் 500 க்கும் மேற்பட்ட தண்ணீர் இணைப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். இந்தப் பிரதேச மக்களுக்கு தண்ணீரில்லாப் பிரச்சினை குறித்து மீண்டும் எம்மிடம் வைத்த கோரிக்கையினை அடுத்து 60 குடும்பங்களுக்கு தண்ணீர் இணைப்பை பெற்றுக் கொடுப்பதற்கான வழிகளைச் செய்துள்ளோம். இங்குள்ள அருட்திரு பங்குத் தந்தை இப்பிரதேசத்திற்கு இன்னும் தண்ணீர் உதவி தேவையெனக் கோரிக்கை விடுத்துள்ளார். அவற்றை மேற்கொள்வதற்காக அவரிடம் மேலதிக விபரங்களைக் கேட்டு இருக்கின்றோம். இப்பிரதேசத்திலுள்ள முன்பள்ளிப் பாடசாலையில் நிலவும் மலசல கூடம் இல்லாத நிலையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று, இங்குள்ள பாடசாலைக்கும் தண்ணீர் இணைப்பைப் பெற்றுக் கொடுக்கவும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கவும் உடன் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் இலங்கைக்கான தலைவர் பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் கருத்து தெரிவிக்கையில்;

நான் க. பொ. த உயர் தரம் படிக்கும் போது தனியார் வகுப்புக்குச் சென்று படிக்க காசு இல்லை. நான் கல்முனை கார்மெல் பற்றிமா கல்லூரியில் படித்தாலும் அங்கு படிப்பிப்பதற்கு ஆசிரியர் இல்லை. க. பொ. த உயர் தரம் எழுதிய ஓர் ஆசிரியர் ஒருவர் தான் கற்பித்தார். அவர் படிப்பித்து நான் எப்படி பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற பிரச்சினை இருந்தது. கல்முனை சாஹிராக் கல்லூரியில் பேருவளை நளீம் ஹாஜியார் என்ற ஒருவர் பணம் கொடுத்து மட்டக்களப்பில் இருந்து ஒரு ஆசிரியரை வரவழைத்து வகுப்பு நடத்தினார். அந்நேரத்தில் கல்முனை சாஹிராவுக்கு காலையில் சுமார் நான்கு ஐந்து கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்து இங்கு படித்து விட்டு மாலையில் நாங்கள் நடந்து செல்வோம். இப்படிக் கஷ்டப்பட்டுத்தான் நாங்கள் படித்தோம். நாங்கள் படித்து முன்னேற வேண்டும் என்ற வைராக்கியம் இருந்தமையால்தான் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு நுழைந்தோம். சவாலை எதிர் கொண்டு படித்தீர்கள் என்றால் உங்கள் வாழ்க்கைத் தரத்தை நீங்கள் உயர்த்திக் கொள்ளலாம். உங்கள் இலக்கை நீங்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஒரு வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ , சட்டத்தரணியாகவோ வர வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டு நீங்கள் படிக்கின்ற வேலையை மட்டும்தான் செய்ய வேண்டும். வேறு எந்தவொரு பக்கத்திலும் உங்களது சிந்தனை செல்லக் கூடாது.

இக்காலத்தில் கையடக்கத் தொலைபேசி வைத்துக் கொண்டு அவர்களுடைய சிந்தனைகள் சிதறிக்கப்படுவதால் வெற்றி இலக்கை அடைய முடியாது. நான் முன்னேற வேண்டும் என்ற இலட்சியக் கொள்கை வேண்டும். ஓர் இலக்கை நோக்கிப் படித்தல் வேண்டும். இங்குள்ள பிள்ளைகள் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்க போகின்றோம் என்று கூறினால் தேவையான உதவிகளைச் செய்யவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். க. பொ. த உயர் தரம் கற்கின்ற பிள்ளைகளுக்கு எங்களால் இயன்ற உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கின்றோம் புத்தகம் வாங்க பணம் இல்லையா நாங்கள் புத்தகம் வாங்கித் தருவோம். தனியார் வகுப்புகளுக்குச் செல்ல பணம் இல்லையா அதற்குத் தேவையான பணத்தைத் தருவோம். நீங்கள் முன்னேற வேண்டும் என்றால் அவை உங்கள் கைகளில்தான் இருக்கின்றன. உதவி செய்வதற்கு 1000 பேர் இருக்கிறார்கள். உதவிகளைப் பெற வேண்டும் என்றால் உங்கள் திறமைகளைக் காட்ட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக்பால் அலி

கிழக்கின் குரல்

கிழக்கு உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க பிரதமர் இணக்கம்

கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவிப்பு

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளதாக ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதே நியாயமானது எனவும் இவை மத்திய அரசின் ஊடாக வழங்கப்படவேண்டுமெனவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களின் கவனயீர்ப்பு போராட்டத்தின் ஊடாக நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இதனையடுத்து இதுகுறித்து ஆளுநர் அலுவலகம் கருத்து தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவது தொடர்பில் அண்மையில் பிரதமருடன் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றதாகவும் அதில் நிரந்தர நியமனம் பெற்றுத் தருவதாக பிரதமர் ஆளுநரிடம் உறுதியளித்திருந்ததாகவும் ஆளுநர் அலுவலகம் தெரிவிக்கின்றது,

இறக்காமம் பிரதேசத்தில் பாசிப்பயறு அறுவடை விழா

(அம்பாறை விசேட நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் விவசாயத் திணைக்களத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியுதவி திட்டத்தின் கீழ் (PSDG)இறக்காமம் விவசாய விரிவாக்கல் சேவை நிலையத்தின் பிரிவிலுள்ள 'முதலியார் வயல்' பகுதியில் 52 ஏக்கர் வயல் காணிகளில் மூன்றாம் போகத்துக்கான பாசிப்பயறு அறுவடை விழா இறக்காமம் விவசாய விரிவாக்கல் சேவை நிலையத்தின் விவசாயப் போதனாசிரியர் எஸ்.ஏ.எல் பஹ்மி அஹமட்டின் நெறிப்படுத்தலின் கீழ் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் டீ.எம்.எஸ்.பி. திஸாநாயக்கா கலந்து கொண்டார். பாசிப்பயறுச் செய்கையானது 2023 காலப் போகத்தில் நெற்செய்கை அறுவடை இடம்பெற்ற நெல் வயல்களில் மூன்றாம் போகமாக பாசிப்பயறு செய்கை மேற்கொள்ளப்பட்டது, அரசாங்கத்தின் 13 பயிர்கள் உற்பத்தி மற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாசிப்பயறு உற்பத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தல், அரசாங்கம் பாசிப்பயறு இறக்குமதிக்கு விதித்திருக்கும் கட்டுப்பாட்டுக்குள் நாட்டு உற்பத்தியை அதிகரித்தல், நாட்டின் புரதத் தேவையை ஈடு செய்தல்,மண்ணின் வளத்தை மீள் இளமைப்படுத்தல், அதே வயலுக்கு அடுத்த போகத்திற்கு தேவையான யூரியாவின் அளவை 10 கி.கி மினால் குறைத்தல், இடைக்கால வருமானத்தை பெற்றுக் கொடுத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் சம்மாந்துறை வலய உதவி விவசாய பணிப்பாளர் ஏ.எல். எம் சல்மான் விவசாயப் விவசாயப் போதனாசிரியர்களான எஸ்.எல்.எம் றசீம், கே.எல்.டி.ஆர் செனவிரத்ன எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கல்முனை பட்ஜெட்டுக்கு முன்மொழிவுகள் கோரல்

(கல்முனை விசேட நிருபர்)

கல்முனை மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கு பொது மக்களிடமிருந்து ஆக்கபூர்வமான முன்மொழிவுகள் எதிர்பார்க்கப் படுவதாக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார். பொதுமக்கள் எவராயினும் தமது முன்மொழிவுகளை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னதாக எழுத்து மூலம் சமர்ப்பிக்க முடியுமெனவும் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். கல்முனை மாநகர சபையின் அடுத்த ஆண்டுக்கான மக்களை நோக்கிய பட்ஜெட்டை தயாரிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மக்களினதும் பொது அமைப்புகளினதும் ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை உள்வாங்கி சிறந்ததொரு சாத்தியப் பாடான பட்ஜெட்டை தயாரித்து, மாநகர சபையை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கத்திலேயே இவ்வாறு முன்மொழிவுகள் கோரப்படுவதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில்

இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பாடசாலைகளுக்கு கையளிப்பு

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட திருக்கோவில் 03 மற்றும் தாண்டியடி கிராம சேவகப் பிரிவுகளில் இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளிலிருந்த பாடசாலை விளையாட்டு மைதானங்கள் மக்கள் பயன்பாட்டுக்காக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர்களின் ஏற்பாட்டில் திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயகுமார் தலைமையில் திருக்கோவில் பிரதேசத்தில் நடைபெற்றது.

யுத்தகாலத்தில் திருக்கோவில் பிரதேசத்தில் இராணுவ முகாம்களாக பயன்படுத்தப்பட்டு வந்த அரச மற்றும் பாடசாலை காணிகள் 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வந்தன.

இவ்வாறு அரச படைகளினால் விடுவிக்கப்பட்டிருந்த காணிகள் இலங்கை மின்சார சபை, சகலகலை அம்மன் முன்பள்ளி பாடசாலை மற்றும் திருக்கோவில் விஸ்வதுளசி வித்தியாலயம், தாண்டியடி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் விளையாட்டு மைதானப் பயன்பாட்டுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து காணிகள் புனரமைக்கப்பட்டு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேயவிக்கிரமவினால் உத்தியோகபூர்வமாக காணி உறுதிப்பத்திரங்கள் கையளிக்கப்பட்டு விளையாட்டு மைதானத்துக்கான பெயர்ப் பலகைகளும் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேயவிக்கிரம, திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு காணி உறுதிப்பத்திரங்களை கையளித்தனர்.

இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியில் மாணவர் பாராளுமன்றம்

(இறக்காமம் தினகரன் நிருபர்)

மாணவர்களுக்கிடையே ஜனநாயக எண்ணக்கரு, ஐக்கியம் சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுப்பு, எதிர்காலத்தில் சிறந்த நற்பிரஜைகளை உருவாக்கும் நோக்குடன் கல்வி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக பாடசாலை மட்டத்திலான மாணவர் பாராளுமன்ற தேர்தல் முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரிக்கான 95 மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல், கல்லூரியின் அதிபரும் தேர்தல் ஆணையாளருமான எம். ஐ.எம்.மாஹிர் தலைமையில் நடைபெற்றது. குறித்த தேர்தலுக்காக 933 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்ற நிலையில் 6 தொடக்கம் 13 ஆண்டு மாணவர்களுக்குகிடையே 145 பேர் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்ற தேர்தலில் 95 மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் கடமைக்கு பொறுப்பாக தேர்தல் அத்தாட்சி அலுவலர்களாக சம்மாந்துறை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் H. நைறோஸ்கான், பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தர் S.L.நிஸார் கடமையாற்றியதுடன் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு படைகள் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

கிழக்கு மாகாண பாடசாலை ஆசிரிய வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் நியமனம்

(ஒலுவில் விசேட நிருபர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை 3ற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் பதில் செயலாளர் ஏ. மன்சூர் தெரிவித்தார்.

விண்ணப்பதாரி கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட பட்டதாரியாகவும் அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் மூன்று வருடங்களோ அல்லது அதற்கு அதிக காலமோ தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிங்களமொழி அல்லது தமிழ் மொழி பாடத்தில் கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டும். மற்றும் பட்டத்தை பெறுவதற்காக பயின்ற பிரதான பாடங்களுக்கு அமைவாக மாத்திரம் வெற்றிடம் நிலவும் பாடத்திற்காக விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டம் சார்ந்த பாடங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் பாடம் தொடர்பிலான பிரச்சினைகள் சம்பந்தமான இறுதி முடிவு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவினால் எடுக்கப்படுமென தெரிவித்தார்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 06ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம், 198, உட்துறைமுக வீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவித்துள்ளார்.

கந்தளாய் பிரதேசத்தில் யானை தொல்லை

விசேட குழு ஆராய்வு

(கந்தளாய் தினகரன் நிருபர்)

கந்தளாய் பிரதேசத்தில் யானை தொல்லைகளால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு நிறுவப்பட்ட குழுவின் முன்னேற்றம் குறித்து ஆராயும் மூன்றாவது கூட்டம் நேற்று (19) நடைபெற்றது. கந்தளாய் பிரதேச செயலாளர் திருமதி உபேஷா குமாரி தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரச நிறு வனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்த ர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் மீலாத் விழா

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் மீலாத்தின நிகழ்வுகள் கல்லூரி கலாசாரக் குழுவின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் திருமதி நஜீமா ஹாறுதீன் தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேற்படிநிகழ்வில் முஹம்மத் நபி அவர்களின் சிறப்புகள் பற்றிய கல்லூரி மாணவிகளின் நிகழ்ச்சிகள் பல அரங்கேற்றப்பட்டதுடன், அதிதிகளின் சிறப்பு சொற்பொழிவுகளும் இடம் பெற்றன. வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேக். ஏ.எம். றஹ்மத்துல்லாஹ், சிறப்புச் சொற்பொழிவாளர் கலாநிதி. யூ.எல்.எம். அஸ்லம், பிரதிக் கல்விப் பணிப்பாளரும், பாடசாலை மேம்பாட்டுத் திட்ட இணைப்பாளருமான ஏ.எஸ். அஹமட் கியாஸ், இஸ்லாம் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேக். ஏ.ஆர்.ஏ. மனாப், இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகர் அஷ்ஷேக் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

மட்டக்களப்பில் சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்

(திராய்க்கேணி தினகரன், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)

சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் ஒக்டோபர் 17ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகத்தினால் சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வு கடந்த 17ஆம் திகதி இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஜெயவிமன வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு வீடுகள் வழங்கப்பட்டன.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் சீ.புவனேந்திரன் மற்றும் பிரதேச செயலாளர் எஸ்.எச்.முசம்மில், மாவட்ட பதில் கணக்காளர் எஸ்.எம் .பசீர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு வீடுகளை பயனாளிகளிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட சிரேஷ்ட முகாமையாளர் மனோகிதராஜ், மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையாளர் ரீ.புவிதரன், கோறளைப்பற்று மத்தி தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் எஸ்.ஏ.எம்.பசீர், முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எல்.ஏ. மஜீத், கல்குடா சக்காத் நிதியப் பணிப்பாளர் சபை உறுப்பினர் எம். ரீ.எம். அஷ்ரப், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். ஐயூப்கான் எனப்பலரும் பங்கேற்றனர்.

விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

(மூதூர் தினகரன் நிருபர்)

போதைப்பொருள் பாவனையால் மக்கள் தேடிக்கொள்ளும் நோய் ஆபத்துகள் மற்றும் இதற்கு அடிமையாகி சமூகத்தில் ஏற்படும் சமூக சீர்கேடுகளிலிருந்தும் மக்களை பாதுகாக்கும் முகமான விழிப்பூட்டல்கள் மூதூர் பிரதேச பள்ளிவாசல்கள் மூலமாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் போதையால் ஏற்படும் சமூக சீர்கேடுகளினால் மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்படுகின்றன. இந்நிலையில் போதைப்பொருள் விற்பனை மற்றும் போதைப்பொருள் பாவனையாளர்கள் போன்றோர்களுக்கும் இதனை தடுப்பதற்கான வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான

திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

01.

மேலேயுள்ள படத்தில் உள்ளவற்றில் இயற்கையான தொகுதிகளின் கூட்டம்
i. BCD ii. BCF iii. BEF

02.



i. 1 ii. 2 iii. 3

03. 24 ஆவது இரட்டை எண்ணானது?
i. 48 ii. 28 iii. 36

04.

இச்சதுரத்தின் ஒரு பக்க நீளம் 5m எனில் இதுபோல இரண்டு சதுரங்களின் சுற்றளவுகள் மொத்தம் எத்தனை மீற்றர் ஆகும்?
i. 25 m ii. 30m iv. 40m



எனில்

05.

இன் கூட்டுத்தொகை யாது?
i. 25 ii. 20 iii. 10

06.

இன் கூட்டுத்தொகை யாது?
i. 20 ii. 30 iii. 25

07.

i. 10 ii. 15 iii. 20

08. பாதை ஒன்றை அமைப்பதற்கு 4 மனிதர்கள் 6 நாட்கள் வேலை செய்தனர் எனில் அதே வேலையை 3 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
i. 7 ii. 8 iii. 10

09. மிதுர்சனியின் வயது அவளது தந்தையின் வயதின் நான்கில் ஒரு பங்காகும். தந்தையின் வயது 40 எனில் மிதுர்சனியின் வயது என்ன?
i. 8 ii. 10 iii. 12

10. ஜனவரி மாதம் 30ஆம் திகதி புதன்கிழமை எனில் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி என்ன கிழமை?
i. வெள்ளிக்கிழமை ii. புதன்கிழமை iii. சனிக்கிழமை

11. கூடு ஒன்றில் இருக்கும் அணில்களின் கால்களினதும், கண்களினதும் மொத்த எண்ணிக்கை 48 ஆகும். எனவே அக்கூட்டிலுள்ள அணில்களின் எண்ணிக்கை யாது?
i. 6 ii. 8 iii. 9

12.



காகிதத்துண்டு ஒன்று இவ்வாறு நான்கு சம பகுதிகளாக மடிக்கப்பட்டு படத்தில் காட்டியவாறு வெட்டப்பட்ட பின் அதனை விரித்துப் பார்த்தால் தெரியும் விதமானது?

i.  ii.  iii. 

13. TATA - முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது இவ்வுரு தோன்றும் விதமானது?
i. TATA ii. ATAT iii. ∀TA⊥

14.

இக்கடிகார முகத்தில் இரண்டு முட்களும் ஒன்றன் மீது ஒன்று சேர்ந்து காட்சித்தர இன்னும் எத்தனை மணித்தியாலங்கள் தேவை?
i. 5 மணித்தியாலங்கள்
ii. 7 மணித்தியாலங்கள்
iii. 9 மணித்தியாலங்கள்

15. ஒரு வருடத்திலுள்ள வாரங்களின் எண்ணிக்கை
i. 51 ii. 52 iii. 53

16.



இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?
i. 9
ii. 10
iii. 12

17. இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 12
ii. 10
iii. 8



18. நூறின் இடத்திலக்கம் 3 ஆக அமையக் கூடிய எண்ணாக அமைவது
i. 3047 ii. 2362 iii. 4032

19.



இங்கு நிழற்றப்பட்ட பகுதியை தசமமாக எழுதினால்?
i. 0.3
ii. 0.6
iii. 0.8

20.



இவ்விலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணுக்கும் மிகச் சிறிய எண்ணுக்குமிடையேயான வித்தியாசம்?
i. 2473 ii. 2583 iii. 2173

21. 2000 + 200 + 20 + 2 = ?
i. 2020 ii. 2202 iii. 2222

22. 600 தேங்காய்களில் 2/10 பங்கு விற்கப்பட்டது. எஞ்சியவை?
i. 480 ii. 460 iii. 420

23. அதிகாலை 4 மணி 25 நிமிடத்தை நியம நேரமாக எழுதினால்?
i. 04 : 25 ii. 16 : 25 iii. 04.25

24. சபரி காலை 9.00 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு பி.ப. 2.15க்கு வீடு திரும்பினான். அவன் வீட்டுக்கு வெளியே இருந்த கால அளவு யாது?
i. 2 மணி 15 நிமிடங்கள் ii. 5 மணி 15 நிமிடங்கள்
iii. 4 மணி 30 நிமிடங்கள்

25. சத்தம், அரவம், ஒலி, ஆரவாரம், இசை இதில் வேறுபட்ட சொல்
i. அரவம் ii. ஆரவாரம் iii. இசை

26. நாளை இடியுடன் கூடிய மழை பெய்யும் என சுதன் கூறினான். இக்கூற்று
i. நடக்கும் ii. நடக்காது iii. கூறமுடியாது

27.



இவ்வுருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கையானது?
i. 9
ii. 10
iii. 12

28. இரண்டு வளைந்த விளிம்புகளைக் கொண்ட திண்மவுருவானது?
i. கோளம் ii. உருளை iii. கூம்பு

29. 2750g இல் எத்தனை 250g கள் உள்ளன?
i. 11 ii. 10 iii. 9

30. 7m 4cm இதனை cm இல் எழுதினால்?
i. 740cm ii. 704cm iii. 7400cm

31. மேலிருந்து பார்க்கும் போது இவ்வாறான ஒரு தோற்றம் தெரியுமாயின் அத் தோற்றத்தை உருவாக்கிய எது?

i. ii. iii.

32. A, C, F, J, ..., ... அடுத்து வர வேண்டிய எழுத்துக்கள்?
i. O, U ii. K, M iii. M, P

33.



i. 16 ii. 64 iii. 72

34. 1969 இது எத்தனையாம் நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தம்?
i. இருபதாம் நூற்றாண்டு ஒன்பதாம் தசாப்தம்
ii. பத்தொன்பதாம் நூற்றாண்டு ஏழாம் தசாப்தம்
iii. இருபதாம் நூற்றாண்டு ஏழாம் தசாப்தம்

35. 750g கடலை ரூபாய் 990.00 எனில் 2kg கடலையின் விலையானது?
i. ரூபாய் 2640.00 ii. ரூபாய் 2400.00 iii. 2800.00

36. 1 தொடக்கம் 25 வரையுள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது?
i. 150 ii. 156 iii. 162

37. ஒரு சட்டையின் விலை ரூபாய் 867.00 எனில் இது போல ஆறு சட்டைகளின் விலையானது?
i. ரூ. 5202.00 ii. ரூ. 5240.00 iii. ரூ. 5300.00

38. சஸ்வின் ஒரு புகைப்படத்தினைக் காட்டி இது எனது தந்தையல்ல என்று கூறினான். ஆனால் புகைப்படத்தில் இருப்பவருக்கு சஸ்வின் மகன் ஆவான். எனவே புகைப்படத்தில் இருந்தது?
i. அம்மா ii. அத்தை iii. அக்கா

39. பின்வருவனவற்றுள் தனிப்பட்ட ஒருவரின் விருப்பமானது?
i. பழங்கள் சத்துள்ளவை ii. பழங்கள் வெவ்வேறு சுவைமிக்கவை
iii. சுவை அதிகமான பழம் மாம்பழமே

40. ஒரு வரிசையில் 8 கதிரைகள் வீதம் 400 கதிரைகளை எத்தனை வரிசையில் அடுக்கலாம்?
i. 20 வரிசைகளில் ii. 35 வரிசைகளில் iii. 50 வரிசைகளில்

மாங்குளத்தில் நாளை முதல் கடுகதி ரயில்கள் தரித்து செல்லும்

ரயில்வே திணைக்களம் அறிவிப்பு

மாங்குளம் குறூப், ஓமந்தை விசேட நிருபர்கள்

மாங்குளம் ரயில் நிலையத்தில் நாளை சனிக்கிழமை (21) முதல் கடுகதி ரயில்கள் தரித்துச் செல்லுமென, ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, பிரதி சனிக்கிழமை தோறும் அதிகாலை 5.10 மணிக்கு கொழும்பு, கோட்டையிலிருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில், முற்பகல் 10.42 மணிக்கு மாங்குளத்தை அடைந்து, அங்கிருந்து காங்கேசன்துறைக்கு புறப்படும்.

பிரதி வெள்ளி தோறும் கொழும்பு, கோட்டையிலிருந்து 'யாழ் நிலா' ரயில் இரவு 10.00 மணிக்கு புறப்பட்டு, மாங்குளத்தை அதிகாலை 4.20 மணிக்கு அடைந்து, அங்கிருந்து காங்கேசன்துறைக்கு புறப்படும்.

இதேவேளை, பிரதி ஞாயிறு தோறும் காங்கேசன்துறையிலிருந்து மதியம் 1.15 மணிக்கு புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில், மாங்குளத்தை பிற்பகல் 2.54 மணிக்கு அடைந்து, அங்கிருந்து கொழும்புக்கு புறப்படும்.

பிரதி ஞாயிறு தோறும் காங்கேசன்துறையிலிருந்து 'யாழ் நிலா' ரயில் இரவு 9.30 மணிக்கு புறப்பட்டு, மாங்குளத்தை இரவு 11.20 மணிக்கு அடைந்து, அங்கிருந்து கொழும்புக்கு புறப்படும்.

இதைத்தவிர, ஏற்கெனவே தரித்து பயணித்த ஏனைய ரயில்கள் வழமை போன்று தரித்துச் செல்லுமெனவும், ரயில்வே திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் ரயில் சேவையை பெற்றுக்கொள்ளும் வகையில் முறிகண்டி, மாங்குளம் ரயில் நிலையங்கள் உள்ள போதிலும், பிரதான ரயில் நிலையமாக மாங்குளம் ரயில் நிலையம் உள்ளது.

இவ்விரு ரயில் நிலையங்களிலும் ஆசன முற்பதிவு மேற்கொள்ளப்படாமை, கடுகதி ரயில்கள் தரித்துச் செல்லாமையினால் பயணிகள் சிரமத்தை எதிர்நோக்கியதை தொடர்ந்து, இவ்விரு வசதிகளையும் செய்து தருமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரியதுடன், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் கவனம் செலுத்தப்பட்டது.

இது தொடர்பாக கொழும்பு ரயில் நிலைய தலைமை அலுவலகம், ஜனாதிபதி செயலகத்திடம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினூடாக கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்நிலையில், முதற்கட்ட நடவடிக்கையாக மாங்குளத்தில் கடுகதி ரயில்கள் தரித்துச் செல்வதற்கான அனுமதி ரயில்வே திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கின் உதயம்

வதந்தியினால் தாமதமாக பயணித்த காங்கேசன்துறை – நாகபட்டினம் கப்பல்

யாழ். விசேட நிருபர்

காங்கேசன்துறை நாகபட்டினம் பயணிகள் கப்பலில் இரண்டு கிலோகிராம் தங்கம் கடத்தப்படுவதாக கிடைத்த போலித் தகவலைத் தொடர்ந்து நேற்று முன்தினம் புதன்கிழமை (18) இரண்டு மணித்தியாலம் தாமதமடைந்து காங்கேசன்துறையிலிருந்து நாகபட்டினத்துக்கு கப்பல் புறப்பட்டுச் சென்றது.

பயணிகளை ஏற்றிக்கொண்டு கப்பல் புறப்படத் தயாராகிய போது, கப்பலில் தங்கம் கடத்தப்படுவதாக கடற்படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்ததை தொடர்ந்து, கப்பலில் கடற்படையினரும் சுங்கப் பிரிவினரும் தீவிரமாக சோதனை நடத்தினர்.

இதன்போது, கப்பலில் ஏற்றப்பட்ட பயணிகள் இறக்கப்பட்டு, கடும் சோதனை நடத்தப்பட்டதுடன், கப்பலும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்நிலையில், கப்பலில் சந்தேகத்துக்கிடமான முறையில் எந்தவித பொருட்களோ, தங்கமோ கிடைக்காததை தொடர்ந்து, மீண்டும் பயணிகளை ஏற்றிக்கொண்டு அக்கப்பல் பயணத்தை தொடர அனுமதிக்கப்பட்டதாக, நம்பத்தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இன்று வெள்ளிக்கிழமை (20) முதல் இந்த கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டு, மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாத்திலிருந்து கப்பல் சேவையை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'யாழ் முஸ்லிம் சமூகஜோதி' விருதுக்கு மூவர் தெரிவு

யாழ் முஸ்லிம் சமூக ஊடகம் 2023ஆம் ஆண்டுக்கான 'யாழ் முஸ்லிம் சமூகஜோதி' விருது முதன்முறையாக இம்முறை மூன்று பேருக்கு வழங்கப்படவுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஆர்.எம்.இமாம், சமூகப்பற்றுள்ள கல்வியியலாளர் எம்.எஸ்.ஏ.எம். முஹ்தார், இலக்கியவாதி ஏ.சி. நஜுமுதீன் ஆகியோரே இவ்விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக, யாழ். முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் தெரிவித்தார்.

இந்த விருது வழங்கலுக்கு வை.எம்.எம்.ஏ. பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.றஹீம் அனுசரணை வழங்கவுள்ளார்.

சர்வதேச வறுமை ஒழிப்பு வாரம்

ஒட்டுசுட்டானில் பயனாளிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கிவைப்பு

ஓமந்தை விசேட, மாங்குளம் குறூப் நிருபர்கள்

சர்வதேச வறுமை ஒழிப்பு வாரத்தையிட்டு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பயனாளிகளுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை (18) வழங்கி வைக்கப்பட்டன.

ஒட்டுசுட்டானில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் தெரிவுசெய்யப்பட்ட 3 பயனாளிகளுக்கு புதிய வீடமைப்புக்காக தலா 750,000 ரூபாவும் 3 வீட்டு லொத்தர் பயனாளிகளுக்கு தலா 250,000 ரூபாவும் 4 மாணவர்களுக்கு சிறுவர் சேமிப்பு வேலைத்திட்டத்துக்கான பரிசில்களும் 3 பயனாளிகளுக்கு கடன் திட்டமும் 4 மாணவர்களுக்கு சிசுபல அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை, நன்கொடையாளர் சிலரால் வழங்கப்பட்ட அரிசி 10 பயனாளிகளுக்கு தலா 10 கிலோகிராம் படி வழங்கப்பட்டன.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஜெயராணி பரமோதயன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட பணிப்பாளர் முபாரக் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

சர்வதேச வறுமை ஒழிப்பு வாரம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 17ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படுகின்றது.

முதியவரின் சடலம் வவுனியாவில் மீட்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அடையாளம் காணப்படாத முதியவர் ஒருவரின் சடலம் நேற்று வியாழக்கிழமை (19) அதிகாலை மீட்கப்பட்டது.

பேருந்து நிலைய பயணிகள் இருக்கையில் மேற்படி சடலம் கிடந்தமையை அவதானித்த பொதுமக்கள், பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார், சடலத்தை மீட்டனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கோப்பாய் கலாசாலையில்

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை பாடசாலை மாணவர் கௌரவிப்பு

யாழ். விசேட நிருபர்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னோடிகளான 18 பெருந்தகைகளின் வேடங்களை தாங்கிக் கலந்து சிறப்பித்த நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்களை பாராட்டும் நிகழ்வு அக்கலாசாலையில் நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று வியாழக்கிழமை (19) நடைபெற்ற நூற்றாண்டு நிறைவு விழாவின் போதே, இம்மாணவர்கள் பாராட்டப்பட்டனர்.

சேர் பொன்னம்பலம் இராமநாதன், கரைநகர் அருணாச்சலம் உபாத்தியாயர், கோப்பாய் சுவாமிநாதன், அதிபர் பொன்னையா உள்ளிட்ட 18 பெருந்தகைகளின் வேடங்களை இம்மாணவர்கள்

தாங்கிச் சிறப்பித்தனர். பாடசாலை அதிபர் சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவபாலன் குணபாலன் கலந்துகொண்டார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச.லலீசன், பிரதி அதிபர் க.செந்தில்குமரன், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா மற்றும் கலாசாலை சமூகத்தினர் இந்த மாணவர்களை பாராட்டினர்.

தமிழக கடற்றொழிலாளர் தாக்கப்பட்டமை கவலைக்குரியது

யாழ். விசேட நிருபர்

தமிழக கடற்றொழிலாளர்கள் கடலில் வைத்து தாக்கப்பட்டமை கவலைக்குரிய விடயமென, வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் க.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று வியாழக்கிழமை (19) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"தமிழக கடற்றொழிலாளர்கள் மீது கடலில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக நாம் அறிந்துள்ளோம்.

இதற்காக நாம் மனவருத்தத்தை தெரிவிக்கின்றோம்" என்றார்.

இளவாலையில் சைவப்புலவர் செல்லத்துரையின் நினைவுதினம்

சாவகச்சேரி விசேட நிருபர்

சைவப்புலவர் சு.செல்லத்துரையின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (22) காலை 9.00 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது, பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் நிதியத் தலைவரும் கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய அதிபருமான த. தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின் போது, ஆசியுரையை அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவரும் ஸ்ரீபாத தேசிய கல்வியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளருமான சி.கா. கமலநாதன் மற்றும் அருட்தந்தை எட்வினாதன் அடிகளார் நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துநாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி சுகந்தினி சிறிமுரளி

தரனும், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராஜாவும், கௌரவ விருந்தினராக முன்னாள் ஆசிரிய ஆலோசகர் நா.அரியபுத்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய நிறுவுநரான சைவப்புலவர் சு.செல்லத்துரை, வள்ளல் ஏழூர் இராசரத்தினத்தின் 'எல்லோருக்கும் கல்வி' என்ற சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து, 24 ஆண்டுகள் அதிபராக பணியாற்றியிருந்தார்.

பூவரசங்குளம் பாடசாலையில் மாணவர் பாராளுமன்ற தேர்தல்

வ/பூவரசங்குளம் மகா வித்தியாலயத்தில் இந்த வருடத்துக்கான மாணவர் பாராளுமன்றத் தேர்தல் அவ்வித்தியாலய அதிபர் அ.முரளிதரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, இலங்கை சோசலிசக் குடியரசின் ஜனநாயக தேர்தல் விதிமுறைகளைக் கடைப்பிடித்து தேர்தல் வேட்பாளர்கள் போட்டியிட்டதுடன், அன்றையதினம் முற்பகல் 11.30 மணியளவில் இரண்டு

வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் நவராத்திரி நிகழ்வு

நவராத்திரி விழாவையிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (22) காலை 9.00 மணி முதல் 11.00 மணிவரை யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் சுகதாமம் மண்டபத்தில் நவராத்திரி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறவுள்ளன. இதன்போது ஆன்மிக உரை, வீடியோ காட்சி மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

யாழ். கொட்டடி முத்தமிழ் பிரதேசத்தில் வாழும் முதியோர்கள், கர்ப்பிணிகள், கைம்பெண்களாகிய 50 பேருக்கு யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரும் சமூக சேவையாளருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த திட்டங்களை முன்னெடுக்க ஏற்பாடு

கோப்பாய் குறூப் நிருபர்

மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சிறந்த திட்டங்களை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்த செவ்வாய் (17) நடைபெற்றதுடன், மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கொள்கைவரையும் கையளிக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடமே சமூகசேவைகள் திணைக்களத்தினர் இந்த கொள்கைவரையை கையளித்தனர்.

இந்த கொள்கைவரையில் தொழில் வழிகாட்டல், வேலைவாய்ப்பு, அணுகுவசதிகள், சுகாதாரத் தேவைகள், போக்குவரத்து உள்ளிட்ட விடயங்கள் மாற்றுத்திறனாளிகளுக்காக முன்வைக்கப்பட்டுள்ளன.

கேள்வி அறிவித்தல்

கொழும்பு-03, மகாநாம வித்தியாலயத்தில் 2023-2024ஆம் வருடங்களில் பின்வரும் சேவைகளை நடாத்திக் கொண்டு செல்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

பாடசாலையின் சிற்றுண்டிச்சாலை

2023-10-23ஆம் திகதி முதல் 2023-11-06ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இதன் பொருட்டு மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 1.30 மணி வரையில் பாடசாலையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் 2023-11-06ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு பாடசாலை அலுவலகத்தில் திறக்கப்படும்.

பாடசாலையின் பாதுகாப்புச் சேவையை நடாத்திச் செல்லல்

2023-10-23ஆம் திகதி முதல் 2023-11-08ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இதன் பொருட்டு மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 1.30 மணி வரையில் பாடசாலையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் 2023-11-08ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு பாடசாலை அலுவலகத்தில் திறக்கப்படும்.

கௌரவ தலைவர் / அதிபர்,
பாடசாலை அபிவிருத்திக் குழு,
மகாநாம கல்லூரி,
கொழும்பு-03.

பெயர் மாற்றம்

கோயில் குளம் ஆரையம் பதியைச் சேர்ந்த கந்தசாமி சந்திரகலா (தே.அ.அ. இல. 855991993V) ஆகிய நான் எனது சுய விருப்பத்தின் பேரில் புனித இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொண்டு எனது பெயரை கந்தசாமி பாத்திமா சம்ஹா என மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கு அறிவிக்கின்றேன்.

பெயர் மாற்றம்

ஏறாவூர் பற்று ஆறுமுகத்தான் குடியிருப்பு பாரதியார் வீதி வயிரமுத்து ரேகா (தே.அ.அ. 198859702837)ஆகிய நான் சுயவிருப்பில் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவி எனது பெயரை ஆயிஷா என மாற்றியுள்ளதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு அறிவிக்கின்றேன்.

- **வயிரமுத்து ஆயிஷா**

Repeat Your ad For Better Offers

இலங்கை வங்கி

ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

விலை கூறல் இல.: P/PROC/2023/256	விலை கூறல் இல.: P/PROC/2023/257
அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட 250,000 மாஸ்டர்கார்ட் இரட்டை இடைமுக (Dual Interface) கொடுப்பனவு அட்டைகளை வழங்குதல்	அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட 250,000 வீசா இரட்டை இடைமுக (Dual Interface) கொடுப்பனவு அட்டைகளை வழங்குதல்

1. அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட 250,000 மாஸ்டர் கார்ட்களுக்கு 250,000 இரட்டை இடைமுக (Dual Interface) இலங்கை வங்கிக்கு வழங்குவதற்கென ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களைக் கீழ்க் காணும் நிபந்தனைகளுக்கு இணங்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குனர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

தகுதி அளவுகோல்கள்

முதன்மை/உண்மை உபகரண உற்பத்தியாளர் (OEM)

i. **250,000 மாஸ்டர் கார்ட்களுக்கு** BID No.P/PROC/2023/256
2023.10.20 தினத்தன்று முடியும் கடந்த இரண்டு வருடங்களினுள் உற்பத்தியாளர் ஏதேனுமொரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வங்கிக்குக் குறைந்தபட்சம் 250,000 மாஸ்டர்கார்ட் இரட்டை இடைமுக ஏனைய அட்டைகளை ஒற்றை ஒப்பந்தத்தில் விநியோகித்திருக்க வேண்டும்.

ii. **250,000 வீசா அட்டைகளுக்கு** BID No.P/PROC/2023/257
2023.10.20 தினத்தன்று முடியும் கடந்த இரண்டு வருடங்களினுள் உற்பத்தியாளர் ஏதேனுமொரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வங்கிக்குக் குறைந்தபட்சம் 250,000 வீசா கார்ட் இரட்டை இடைமுக ஏனைய அட்டைகளை ஒற்றை ஒப்பந்தத்தில் விநியோகித்திருக்க வேண்டும்.

உற்பத்தியாளர், வழங்கப்பட்ட உற்பத்திகள் (சிப் வன்பொருள் மற்றும் 250,000 மாஸ்டர் கார்ட், 250,000 வீசா காட் என்பவற்றுக்கு (BID No.P/PROC/2023/256 and 257 இயக்கு தளம் OS) எந்தவொரு சர்வதேச புலமைசார் சொத்துக்களினதும் (Intellectual Property) விதிகளை மீறவில்லை எனும் சத்தியக் கடதாசி ஒன்றை வழங்க வேண்டும்.

ஏலவிலை கூறுபவர்

i. ஏலவிலை கூறுபவர் உண்மையான உபகரண உற்பத்தியாளராக (OEM) அல்லது உற்பத்திப் பொருளின் உரிமையாளராக அல்லது அவர்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட முகவராகக் காணப்பட வேண்டும்.

ii. ஏலவிலை கூறுபவர் உண்மையான உபகரண உற்பத்தியாளரல்லாதவிடத்து, ஏலவிலை கூறுபவர் குறைந்தபட்சம் ஒரு ஆண்டாவது EMV அட்டைகள் தொடர்பில் உற்பத்தியாளரின் அனுமதி பெற்ற முகவராக இருந்திருக்க வேண்டும். (முகவராகச் செயற்பட உற்பத்தியாளரிடமிருந்து பெற்ற அனுமதிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iii. ஏலவிலை கூற ஆர்வமுடையவரின் அல்லது அவரது நிறுவனத்தின் வருடாந்தப் பணப் புரள்வு கடந்த மூன்று தொடர் நிதி ஆண்டுகளில் ((2019/20, 2020/21 மற்றும் 2021/22) அல்லது (2020, 2021 மற்றும் 2022) ஆகக் குறைந்தது ரூ.200 மில்லியனாகக் (அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயமாக) காணப்பட வேண்டியதுடன் நிறுவனமானது தேறிய மதிப்புடைய இலாபமீட்டும் நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

iv. ஏலவிலை கூறுபவர் தவறான ஒப்பந்தக்காரராக இலங்கை அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் ஒரு அரசாங்க நிறுவனத்தின் அல்லது இலங்கை வங்கியின் பட்டியலில் காணப்படாதவராக இருக்க வேண்டும்.

v. ஏலவிலை கூறுபவர் இலங்கைக்குள் வங்கியின் வர்த்தகக் களம் தொடர்பில் நலன்சார் முரண்பாடுடையவராக இருத்தலாகாது. (ஏலவிலை கூறுபவர் மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிபந்தனைக்குமான உரிய ஆதார ஆவணங்களை ஏலவிலை கூறல்களுடன் இணைக்க வேண்டும்.)

2. ஏலவிலை கூறலுக்கான ஆவணங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு, 14ஆம் மாடி, தலைமை அலுவலகம், இல. 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரியிலுள்ள பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வேலை நாட்களில் 09.00 மணி முதல் பார்வையிடமுடியும். 15.00 மணி வரை 2023.10.05ஆம் திகதி வரை இலவசமாகப் பார்வையிட முடியும்.

3. ஏலவிலை கூற ஆர்வமுடையோர் ஆங்கில மொழியிலான விலை கூறல் ஆவணத் தொகுதியை திருப்பிச்செலுத்தாக் கட்டணம் ரூபா:18,000/- (வரி உள்ளடங்கலாக) (கட்டணம் செலுத்தும் முறை-பணம்) அல்லது USD.55/- (கட்டணம் செலுத்தும் முறை-SWIFT) செலுத்தி மேற்குறித்த அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம்.

Swift code : BCEYLKLX

கணக்கின் பெயர் மற்றும் இலக்கம் - Properties Dept. Non-Refundable Tender Deposit, A/C-52401015

குறிப்பு:

i. SWIFT கட்டணம் மற்றும் அனைத்து வங்கித் தொடர்புக் கட்டணங்களும் ஏலவிலை கூறுபவரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். வங்கியானது மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக USD 55 என்ற தேறிய தொகையைப் பெற வேண்டும்.

ii. SWIFT செய்தியின் விபரத்தில் "Non-Refundable Tender Deposit fee - P/PROC/2023/256/257" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

4. பூரணப்படுத்தப்பட்ட ஏலவிலை கூறல்களை (இலங்கை வங்கி தவிர்ந்த வேறொரு) அனுமதி பெற்ற வர்த்தக வங்கியிடமிருந்து பெற்ற 2024.03.08 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வங்கி உத்தரவாதம் விலை கூறல் பிணையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். ஐக்கிய அமெரிக்க டொலரிலான விலைகூறல் பிணைமுறியெனின் அது இலங்கை வங்கியின் முகவர் வங்கி ஒன்றிடமிருந்து பெறப்பட்டு இலங்கையில் உள்ள அனுமதி பெற்ற வணிக வங்கி ஒன்றினால் ஒப்பமிடப்பட்டதாக இருத்தல் வேண்டும். விலைகூறல் பிணை முறிக்குப் பதிலாக பண வைப்புகள்/கொடுப்பனவுக் கட்டளைகள்/வங்கி உண்டியல்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் இறுதித் திகதியும் நேரமும்	2023.11.09 15.00 மணி வரை
ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் நேரம்	09.00 மணி முதல் 15.00 மணி
முன்கூட்டிய விலைகூறல் கூட்டம்	2023.10.31 ஆம் திகதி 11.00 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகத்தின் 14 ஆம் தளத்தில்
ஒவ்வொரு விலை கூறலுக்குமான பிணைமுறி	1.65 மில்லியன் ரூபாய் அல்லது 5,000/- ஐ.அ.டொலர்
ஏல விலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும்	2023.11.10 10.00 மணி
ஏல விலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும்	ஏலவிலை கூறல்கள் மூடப்பட்டவுடன்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமை அலுவலகம்
இலங்கை வங்கிச் சதுக்கம்
இல. 01. இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.
தொலைபேசி: 0112 204260, 0112 544310
தொலைநகல்: 011 2449629 மின் அஞ்சல்: procofficer1@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

பெறுகை அறிவித்தல்

மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

பயிர் வளர்ப்பு பாதுகாப்பு மனைகள் 4ஐ நிர்மாணிப்பதற்கு தேவையான பொருட்களை வழங்குதல். (விவசாய தொழில்நுட்ப பூங்கா - கபடாவத்த, ஹோமாகம)
கேள்வி இலக்கம்: PRDA/WP/PRO/2023/87

இவ் அதிகாரசபையின் கீழ்க்காணும் கொள்வனவை மேற்கொள்வதற்கு இவ்வாறான வழங்கல்கள் நிறைவேற்றப்படும், அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள் இடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகினறன.

தொடர் இல	விபரம்	கேள்விப் பிணை (காசாக) அல்லது	கேள்விப்பிணை (வங்கி/ காப்புறுதி கம்பனி)
01	பயிர் வளர்ப்பு பாதுகாப்பு மனைகள் 4ஐ நிர்மாணித்தல் தேவையான பொருட்களை வழங்குதல் (தொழில்நுட்ப பூங்கா கபடாவத்த, ஹோமாகம - 1ம் பகுதி Steel Works & Protected Network - (Section 01)	30,000.00	60,000.00
	பயிர் வளர்ப்பு பாதுகாப்பு மனைகள் 4ஐ நிர்மாணித்தல் தேவையான பொருட்களை வழங்குதல் (தொழில்நுட்ப பூங்கா - கபடாவத்த ஹோமாகம - 2ம் பகுதி Electrical Works, Plumbing & Irrigation Works (Section 02)	11,500.00	23,000.00

02. மேற்படி உருப்படியுடன் சம்பந்தப்பட்ட விவரமான தகவல்கள் கேள்விப் பத்திரத்தில் தரப்பட்டுள்ளது.

03. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.10.20 முதல் 2023.11.03ம் திகதிகளில் மு.ப 9.00 முதல் பி.ப 2.30 வரை கேள்விப் படிவக் கட்டணத்தை ரூ. 1178.75 இற்கு (அதிகாரசபையில் பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு, இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணைமுறியை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மேற்படி பெறுகைகளுக்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்களால் 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது திறத்தல் 2023.11.06 பி.ப 2.30 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், இவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு,
மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)
இல. 59, சென் செபஸ்தியன் மேடு,
கொழும்பு - 12.
தொ.பே.இலக்கம் : 011-4849825

தேசிய கல்வி நிறுவகம்

விசேட கல்வி டிப்ளோமா கற்கைநெறி – 2023

விண்ணப்பம் கோரல்

தேசிய கல்வி நிறுவகத்தின், உட்படுத்தற் கல்வித்துறையினால் நடத்தப்படும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

கற்கைநெறியின் இயல்பு :

இது, பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, உடல்சார்ந்த குறைபாடு, மந்தநிலை, ஒட்டிசம் நிலை, வேறு கற்றல் குறைபாடுகளால் ஏற்படுகின்ற கற்றல் பிரச்சினைகள் மற்றும் விசேட கல்வித் தேவைகளை எதிர்நோக்கும் மாணவர்களை இனங்கண்டு, அவர்களை விருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தும் பகுதிநேரக் கற்கைநெறியாகும். விரிவுரைகள் நிகழ்நிலையிலும், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட விசேட பாடசாலைகளில் செய்முறை அமர்வுகள் நேரடியாக நடைபெறும். உயர்கல்வி அமைச்சினால் பாடநெறி தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தராதர நியமங்களின் அடிப்படையில் (Sri Lanka Qualifications Framework) இக்கற்கைநெறி தயாரிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

2023.11.15 அன்று 55 வயதிற்கு குறைந்தவராக இருத்தல்.

க.பொ.த (உ/த) சித்தியடைந்து இருத்தல்.

அத்துடன்

அரசாங்க அல்லது அரசாங்க அனுமதி பெற்ற பாடசாலையொன்றில் அல்லது பிரிவெனா ஒன்றில் ஆசிரியராக இருத்தல்.

அல்லது

தேசிய கல்வியியற் கல்லூரியொன்றில் அல்லது ஆசிரியர் கலாசாலையொன்றில் கல்வியியலாளராக இருத்தல்.

அல்லது

இலங்கை அதிபர் சேவையில் அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சேவையாற்றும் அதிகாரியாக இருத்தல்.

அல்லது

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அதிகாரி அல்லது விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகளுக்கான ஓர் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையில் அல்லது நிறுவனத்தில் கடமையாற்றுபவராக இருத்தல்.

கற்கைநெறிக்குப் பயிலுனர்கள் தெரிவு செய்யப்படும் விதம் :

எழுத்துப் பரீடசை மற்றும் நேர்முகப் பரீட்சையினூடாக அல்லது இரண்டில் ஏதேனும் ஒரு முறையின் கீழ் கற்கைநெறிக்கான பயிலுனர்கள் தெரிவு செய்யப்படுவர்.

கட்டண விபரம்:

விபரம்	கட்டணம்
விண்ணப்பப்படிவக் கட்டணம்	ரூபா 200.00
பதிவுக் கட்டணம்	ரூபா 1000.00
கற்கைநெறிக் கட்டணம்	ரூபா 40000.00 இரு சம தவணைகளாகச் செலுத்த முடியும்

✓ அனைத்து கொடுப்பனவுகளையும் வங்கி அட்டைகள் ஊடாக (Credit அல்லது Debit) செலுத்த முடியும்

விண்ணப்பிக்கும் முறை :

மேற்படி தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள், தேசிய கல்வி நிறுவக, பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதள முகவரி https://www.exams.nie.lk/intakes/new ஊடாக நிகழ்நிலையில் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை (https://www.exams.nie.lk/info/applying-for-new-enrollments) எனும் இணைய முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவம் முன்வைப்பதற்குரிய இறுதி திகதி: 2023.11.15

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.
2023.10.18

The Housewives' companion
Classifieds on
Daily News

Daily News Classifieds, the Housewives' companion

பிழை திருத்தம்

கேள்விக்கான அழைப்பு

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

சூரிய ஒளி மின்னழுத்த (PV) அமைப்பின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல்

2023.10.19ம் திகதி தினகரன் பத்திரிகையில் பக்கம் இல. 13இல் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அழைப்பில் கேள்வி முடிவுறுத்தப்படும் தினம் மற்றும் திறக்கப்படும் தினம் மற்றும் நேரம் கீழ்க்காணுமாறு திருத்தப்படுகிறது.

கேள்வி முடிவுறுத்தப்படும் திகதி மற்றும் நேரம் - 2023.11.08 பி.ப. 2.00
கேள்வி திறக்கப்படும் தினம் மற்றும் நேரம் - 2023.11.08 பி.ப. 2.00

முன்பு பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்படும் ஏனைய சகல விபரங்களும் மாற்றமின்றி காணப்படும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
இல. 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்த,
கொழும்பு-10.

Marriage Proposals

Decades of Trusted Service

Sunday Observer **For 15 Words - Rs. 1,500/-**
For each additional word Rs. 25/-

For 15 Words - Rs. 1,200/-
For each additional word Rs. 25/-

வீரமஞ்சரி **For 15 Words - Rs. 600/-**
For each additional word Rs. 25/-

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Boniriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

KESBEWA 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

KIRULAPONE 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

KOTTAWA 011 2842569, 071 2510950
Srisara Groceries, No. 101/2,

MAHARAGAMA 077 7686683, 011 2896373
Supermarket Complex, 88, High Level Rd,

MALABE 011 2791782
Kumudu Stores,

MEEGODA 011 2858290, 011 2831120
Nandana Stores, No. 635/3, Padukka Rd,

MORATUWA 011 2647410, 077 5486719
Wijesekara Stores,

MORATUWA 0112 657326, 0114 212989
S.J.M. Fareed, 222, Egoda Uyana, Modera

MT. LAVINIA 011 2724820
Dayal Stores, Galle Rd,

NUGEGODA 077 3458785, 011 2811833
Ekwaththa Rd, Minhana,

NUGEGODA 011 2846100, 077 1652800
No. 4, High Level Plaza, Delkanda,

PADUKKA 011 2859186, 011 5638677
No. 03, Hanwella Road,

PILIYANDALA 011 2619967, 072 8069487
No. 05, Seeko Gardens, Gedabuwana,

PITAKOTTE 011 2823960, 077 0858585
No. 435, Pothgula,

RAJAGIRIYA 011 2861338
No. 51/2A, Rajahewavitharana Road,

RATHMALANA 011 2626106, 011 2632006
Thusitha Newspaper Agency, Galle Rd,

RAWATHAWATTE 011 2655153, 071 4274689
No. 3, Soysa Road, Galle Road

UDAHAMULLA 077 6859780, 011 2810042
No 138, Station Rd,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

பகிரங்க அறிவித்தல்

ஒருங்கிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்
சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. (கம்பனி இல. PQ 160) மற்றும்
சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டட்
(கம்பனி இல. PV 105194) மற்றும்
டொமஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
(கம்பனி இல. PV 128617)

சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. (கம்பனி இல. PQ 160), சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV 105194), டொமஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV 128617) ஆகியன 2007இன் 07ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் ("சட்டம்") 242ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட இருக்கின்றன என்பது மேற்படிச் சட்டத்தின் 244 (3) பிரிவுக்கு அமைவாக **இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் **சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி.** என்பதாக இருக்கும். கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒருங்கிணைப்புச் சான்றிதல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து இந்த ஒருங்கிணைப்பு நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகிய **சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி.யின்** பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 112, ஹவ்லொக் வீதி, கொழும்பு 05 என்னும் முகவரியில் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களின் எந்தவொரு பங்குதாரரும் அல்லது கடன் வழங்குநரும், அல்லது ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களில் ஒன்று கடப்பாடு கொண்டுள்ள எவரேனுமொருவரும் ஒருங்கிணைப்புப் பிரேரணையின் பிரதிகளை வழமையான வியாபார நேரங்களில் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்ற முகவரியில் பார்வையிடலாம்.

சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி.
சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டட்
டொமஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
சபைகளின் கட்டளைப்படி,
ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்

400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
2023 ஒக்டோபர் 20

2024ஆம் வருடத்தில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

அளவ்வ பிரதேச சபை

1. 2024ஆம் வருடத்தில் இந்த சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக பதிவு செய்ய விரும்பும் தகைமைப் பெற்ற வழங்குநர்களிடமிருந்து மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. அந்த விண்ணப்பப் படிவங்களை 2023.11.30ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், அளவ்வ பிரதேச சபை, இலக்கம் 275, கிரிஉல்ல வீதி, அளவ்வ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்" எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
3. வழங்குநர்கள் மற்றும் கொள்வனவாளர்களால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களுடனும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பதிவுக் கட்டணம் செலுத்துதல் வேண்டும். ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் பதிவுக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். காசோலை அல்லது காசுக்கட்டளை மூலம் செலுத்துவதாயின் ''செயலாளர், அளவ்வ பிரதேச சபை" எனும் பெயரில் எழுதி அனுப்புதல் வேண்டும்
4. **வழங்கல் உபகரணங்கள்:**
   01. அலுவலக உபகரணங்கள்/ மரத் தளபாடங்கள்/ உருக்கு வீட்டுப் பண்டங்கள். (அலுமாரி, மேசை, கதிரைகள், கடிதக்கோவை கெபினட்டுகள், புத்தக ராக்கைகள் மற்றும் பிளாஸ்டிக் கதிரைகள்)
   02. அலுவலகக் காகிதாதிகள் (அச்சிட்ட படிவங்கள், அச்சடிக்கப்பட்ட ஆவணங்கள், கடதாசி/ அப்பியாசக் கொப்பிகள், பாடசாலைப் பைகள், நீர் போத்தல்கள், உட்பட அனைத்து காகிதாதிகள்)
   03. நூலக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள்.
   04. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் முன்பள்ளி உபகரணங்கள்.
   05. சீருடைக்கான துணிகள், பாதுகாப்பு காலணிகள், திரைச்சீலை, விளையாட்டு உடைகள், கெனபி ஹட்
   06. கணனி இயந்திரங்கள், கணனி துணைப்பாகங்கள், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், டுப்ளோ இயந்திரம், கணனி அச்சுப்பொறி, மல்டிமீடியா இயந்திரம், பணம் எண்ணும் இயந்திரம், தேவையான மைகள், டோனர்கள், கார்ட்ரிச்கள் மற்றும் ரிபன்கள்
   07. வீதி விளக்குகளுக்காக மின்சார உபகரணங்கள் (வயர், பல்ப், சுவிட்ச் மற்றும் ஏனைய மின்சார உபகரணங்கள்)
   08. கட்டிடம் மற்றும் வீதி நிர்மாணப் பொருட்கள் வழங்கல் (சீமெந்து, மணல், கருங்கல், கொங்கிரீட் கல், செங்கல், பொறியியல் செங்கல், ABC, பிரிமிக்ஸ், இன்டர்லொக் கற்கள், மண், கிரவல், தார் மற்றும் கொலாஸ்)
   09. கொங்கிறீட் உற்பத்திகள் (ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் கம்பித் தூண்கள், சீமெந்து புளொக் கற்கள், கிணறு வளையங்கள், பூச்சாடிகள்)
   10. இரும்பு, கம்பி, ஜீ.ஐ. குழாய்கள், பொக்ஸ் பார், கூரைத் தகடுகள், ஆணி வகைகள், கொமட், மலசலகூட பேசின், கார்பட் வகைகள்.
   11. வாகனங்கள், இயந்திராதிகள், உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப்பாகங்கள் (டயர், ரியுப் மற்றும் பெட்றி)
   12. அறிவித்தல் பலகை, கட்அவுட், பெனர், ஸ்டிகர், டின்டட் செய்தல், ஞாபகச் சின்னங்கள்
   13. சுகாதார உபகரணங்கள் (விளக்குமாறு, தும்புத்தடி, தூரிகை, சிறிய கால்துடைப்பான், கிருமி நாசினிப் பொருட்கள், கம்பூட்ஸ், குப்பைத்தொட்டிகள், கையுறை, முகக் கவசம், பிரம்புக் கூடை, மற்றும் மழை அங்கி, ஹார்பிக், லை.ஃபோய் சவர்க்காரம், புல் வெட்டும் இயந்திரம், மரம் வெட்டும் இயந்திரம், தோட்ட அலங்கரிப்புக்குத் தேவையான பொருட்கள் மற்றும் பசளை வகைகள்)
   14. கன்று வகைகள்.
   15. அனைத்து வகையான நிறப்பூச்சுகள்
   16. நாய் கழுத்துப் பட்டி.
   17. எரிபொருள்.
   18. நீர்க்குழாய் வேலைக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்.
   19. ஆயுர்வேத மருத்துவ உபகரணங்கள்.
5. **சேவைகள் வழங்கல்.**
   01. அச்சிடல் சேவைகள் வழங்கல், இறப்பர் முத்திரை வெட்டுதல், அறிவித்தல் மற்றும் பதாகை அச்சிடல்.
   02. மொழிபெயர்ப்பு சேவைகள் வழங்குதல்.
   03. வாகனங்கள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல். (மோட்டார் கிரேடர் இயந்திரம், ஜே.ஸி.பி. இயந்திரம், உட்பட அனைத்து கனரக வாகனங்கள், இலகு வாகனங்கள்)
   04. டயர்களை மீள நிரப்புதல்.
   05. அனைத்து உருக்கியொட்டும் வேலைகள் மற்றும் திருத்தவேலைகள்
   06. புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், ரோனியோ இயந்திரம், டுப்ளோ இயந்திரம், கணனி இயந்திரம், அச்சுப்பொறி திருத்த வேலைகள் , உள்ளக தொலைபேசி சேவை, பாதுகாப்புக் கமரா வழங்கும் சேவை
   07. வீச்சுக் கத்தி, கத்தி, மண்வெட்டி, சவல், வீல் பெரோ உட்பட விவசாய மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் என்பவற்றின் திருத்தவேலைகள்
   08. அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல்.
   09. கிரவல் போக்குவரத்து செய்பவர்கள் (சபை அதிகார எல்லைக்குள் கிளை பாதைகள் மற்றும் ஏனைய தேவைப்பாடுகளுக்காக) / வீதி அழுத்தும் பெகோ இயந்திரம், மோட்டார் கிரேடர், மற்றும் ஏனைய இயந்திராதிகள் வழங்கல் மற்றும் விநியோக வான் டிரேலர் கொண்ட டிராக்டர், கை டிராக்டர், லொறி டிப்பர் வாகனம் வாடகைக்கு வழங்குதல்.
   10. உற்சவ வேளைகளுக்கான மேடை, ஒலிபெருக்கி இயந்திரம், மின்சார வெளிச்சம், பிளாஸ்திக் கதிரைகள், ஹட் உட்பட ஏனைய உற்சவப் பொருட்கள் வழங்குதல்.
   11. உற்சவ வேளைகளுக்கான உணவு பானங்கள் வழங்குதல்.
   12. தச்சு வேலை, மேசன் வேலை, வெல்டிங் வேலை, நீர்க்குழாய் வேலைக்கான சேவைகள் வழங்குதல்
6. **ஒப்பந்தக்காரர்கள்**
   01. வடமேல் மாகாணத்தினுள் சிடா நிறுவனத்தில் ICTAD (CIDA) பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொடர் இலக்கம்	வேலை, சேவை மற்றும் நிர்மாண ஒப்பந்தம் மற்றும் வழங்கல் விபரம்.	பதிவுக் கட்டணம்.
01	500000.00 ரூபா வரையான வேலைகள்	ரூபா 1000.00
02	500000.00 ரூபா தொடக்கம் 1000000.00 ரூபா வரையான வேலைகள்	ரூபா 2000.00
03	1000000.00 ரூபாவிற்கு மேற்பட்ட வேலைகள்	ரூபா 3000.00

   I. CIDA நிறுனத்தில் பதிவு செய்த செல்லுபடியாகும் சான்றிதழின் பிரதி மற்றும்
   II. வெட் (VAT) வரி பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெட் வரி தீர்வை செய்யும் சான்றிதழின் பிரதி (பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான பிரகடனம்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. **கொள்வனவாளர்கள்**
   01. பழைய பத்திரிகைகளைக் கொள்வனவு செய்தல்
   02. அப்புறப்படுத்தப்பட்ட கார்ட்போர்ட்களை கொள்வனவு செய்தல்
   03. அப்புறப்படுத்தப்பட்ட பெட் போத்தல்களைக் கொள்வனவு செய்தல்
   04. அப்புறப்படுத்தப்பட்ட போத்தல் துண்டுகளைக் கொள்வனவு செய்தல்
   05. அப்புறப்படுத்தப்பட்ட திண்ம பிளாஸ்டிக்களைக் கொள்வனவு செய்தல்
   06. அப்புறப்படுத்தப்பட்ட டின்களைக் கொள்வனவு செய்தல்
   07. அப்புறப்படுத்தப்பட்ட E-Waste கொள்வனவு செய்தல்
   08. அப்புறப்படுத்தப்பட்ட பொலித்தீன்களைக் கொள்வனவு செய்தல்
   09. அப்புறப்படுத்தப்பட்ட ரெஜிபோர்ம் கொள்வனவு செய்தல்
8. **நிபந்தனைகள் :**
   01. பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பதிவு செய்துள்ள வழங்குநர்களுக்குப் புறம்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்ளும் உரிமையை அளவ்வ பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
   02. வழங்குநர்கள் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்களைத் தாங்களே தயாரித்துக் கொள்ளல்வேண்டும் என்பதுடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
   03. மேற்கூறப்பட்ட ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு வெவ்வேறான வகையில் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.
   04. பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கிய பின்னரே கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.
   05. பல்வகை பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக உரிய முறையில் வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
   06. கோரப்படும் போது விலைகளைச் சமர்ப்பிக்காத மற்றும் கட்டளையிடப்பட்டபோது 14 நாட்களுக்குள் பொருட்களை வழங்க முடியாத வழங்குநர்களும் உரிய தரத்திற்கு உயர் தரப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க முடியாத வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டு அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படும்.

ஜே.எம்.பீ. ஜயசேக்கர,
அளவ்வ பிரதேச சபை,
அளவ்வ.
விசாரணைகள்: **தொலைபேசி: 037-2278175/037-2278747**
தொலைநகல்: 037-2278747
மின்னஞ்சல்: alawwa_ps@yahoo.com

ஹொரண நகர சபை

2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் ஹொரண நகர சபைக்கு பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் தகைமைவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2023-11-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சகல விண்ணப்பப் படிவங்களும் பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் ஒவ்வொரு உருப்படிக்குமான பதிவுக் கட்டணத்துடன் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024' என்று குறிப்பிட்டு 'தலைவர், ஹொரண நகர சபை, ஹொரண' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

01. வியாபாரத்தின் / நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி:
02. தொலைபேசி இலக்கம்: .....
03. தொலைநகல் இலக்கம்: .....
04. மின்னஞ்சல் முகவரி:.....
05. வியாபாரத்தின் தன்மை:.....
06. அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தரின் பெயர் (விசாரிப்பதற்கு):.....
07. அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தரின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:.....
08. வியாபார பதிவிலக்கம்: .....
09. தேசிய அடையாள அட்டை இலக்கம்:.....
10. வெட் பதிவிலக்கம் (பெறுமதி சேர் வரி இலக்கம்).....
11. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் ஒப்பந்தத்தின் தன்மை: .....
12. செலுத்திய பற்றுச்சீட்டிலக்கம்: .....

மேற்படி தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் எனவும் இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குவதாகவும் சான்று பகர்கின்றேன்.

திகதி: ....
விண்ணப்பதாரரின் ஒப்பம்

அலுவலக பயன்பாட்டிற்கு

1. பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி: .....
2. பதிவேட்டின் பக்க இலக்கம்: .....

....
விடயப்பொறுப்பு அலுவலர் செயலாளர்

வழங்கல்கள்

1. அலுவலக காகிதாதிகள்
2. அச்சு இயந்திரங்களுக்கான டோனர்கள்
3. அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் (இரும்பு/உருக்கு/மரப்பலகை/பிளாஸ்டிக்)
4. அச்சிடப்பட்ட ஆவணங்கள்
5. கட்டிடப் பொருட்கள் (கல், மணல், ஓடுகள், செங்கற்கள், கருங்கல், ABC மற்றும் ஏனையவை)
6. தார், கோலாஸ், முன்கலவை
7. ஹியூம் குழாய்கள், வடிகான் மூடிகள், இன்டர்லொக் கற்கள், சீமெந்து உற்பத்திகள்
8. டயர் மற்றும் டியுப்கள்
9. வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்
10. வாகனங்களுக்கான பெற்றரிகள்
11. வாகன இருக்கைகள், குஷன்கள் மற்றும் காபட் விரிப்புகள்
12. வீதிவிளக்குத் தொகுதிகள் மற்றும் மின் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
13. நீர்க்குழாய்கள், வடிகான் குழாய்கள், சுகாதாரப் பாதுகாப்பு உபரகணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
14. கருவிகள் மற்றும் உபகரணங்கள்
15. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (சவர்க்காரம், கழிவறை சுத்திகரிப்புப் பதார்த்தங்கள், தொற்று நீக்கிகள், தும்புத்தடிகள், கூட்டுமாறுகள், வாளிகள், தூரிகைகள், பொலித்தின் உறைகள், பொலிசெக் உறைகள், குளோரின் தூள்)
16. சீருடைத் துணிகள், ஏனைய துணிவகைகள்
17. மழை அங்கிகள், பாதணிகள் மற்றும் ஓவரோல், பூட்ஸ்
18. கணனி இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள் புகைப்படப்பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், தட்டச்சுக்கள் கணனிப் பாதுகாப்பு மென்பொருட்கள் (வைரஸ்காட்) மற்றும் உதிரிப்பாகங்கள்
19. முன்பள்ளி உபகரணங்கள்
20. விளையாட்டுப் பொருட்கள்
21. பாலர் பாடசாலை உபகரணங்கள்
22. பெயர்ப்பலகைகள், அறிவித்தல் பலகைகள் மற்றும் பதாகைகள் மற்றும் ஸ்டிக்கர்கள்
23. LP எரிவாயு
24. கொம்பொஸ்ட் பீப்பாய்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் உபகரணங்கள்
25. கழிவறைகள் மற்றும் குளியலறை உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருத்தும் உபகரணங்கள்
26. பூச்சுக்கள் மற்றும் வார்ணிஷ் மற்றும் அவை சார்ந்த பொருட்கள்
27. டைல் வகைகள்
28. கிருமிநாசினிகள், துப்புரவேற்பாட்டு உருப்படிகள் மற்றும் உபகரணங்கள்
29. தீயணைப்பு உபகரணங்களை வழங்குதல்
30. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மர வகைகள்

சேவைகள்

1. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
2. வாகனங்களின் திருத்தவேலைகள் (இயந்திரவியல், மின்னியல்/ உருக்கி ஒட்டுதல் மற்றும் பூச்சு வேலைகள், வாகன வளிச்சீராக்கிகள்)
3. தட்டச்சுக்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், ரோணியோ கணனிகள், தொலைநகல், இயந்திரங்களின் திருத்தவேலைகள்
4. வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கல் (வேன், கெப், ட்ரக்டர், லொறி, கெண்டர், டிப்பர், பெக்கோ லோடர் மற்றும் ஏனையவை)
5. அச்சு வேலைகள்
6. காணி அளத்தல் மற்றும் மட்டப்படுத்துதல்
7. சட்ட சேவைகள் மற்றும் நகர சபை சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கான சட்ட சேவை வழங்குதல்
8. கட்டிடக்கலை மற்றும் வடிவமைத்தல் சேவைகள்
9. புல்வெட்டும் இயந்திர திருத்தவேலைகள், தகனச்சாலை திருத்தவேலைகள், புகையடிக்கும் இயந்திர திருத்தவேலைகள்
10. விழாக்களுக்கான பொருட்கள்/ புகைப்படமெடுத்தல்/ வீடியோ / ஒலிபெருக்கி இயந்திரங்கள்
11. இயந்திராதிகளை வாடகைக்கு வழங்கல்
12. தளபாடங்களின் திருத்தவேலைகள், கதிரைகளைப் பிண்ணுதல்
13. மரங்களை வெட்டுதல்
14. தகடு வெட்டுதல், வளைத்தல் போன்ற சேவைகள், பட்டறை வேலைகள்
15. டயர் வேலைகள் (பெச் போடுதல்)
16. வளிச்சீராக்கி திருத்தவேலைகள், கட்டிட வளிச்சீராக்கி முறைமை திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்
17. கணனி வலையமைப்பு முறைமை திருத்தவேலைகள்
18. தகனச்சாலை திருத்தவேலைகள்
19. CCTV கமரா திருத்தவேலைகள்
20. தீயணைப்பு உபகரண திருத்தவேலைகள் / கேஸ் நிரப்புதல்
21. நாரிழை பாகங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களின் திருத்தவேலைகள்

ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல் (நிர்மாணங்கள் மற்றும் பராமரித்தல்கள்)

I.	ரூபா 100,000/- வரை கைத்தொழில் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்புகள்	ரூபா	1,000.00
II.	ரூபா 100,001/- முதல் ரூபா 250,000/- வரை கைத்தொழில் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு	ரூபா	1,500.00
III.	ரூபா 250,001/- முதல் ரூபா 500,000/- வரை கைத்தொழில் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்புக்கள்	ரூபா	2,000.00
IV.	ரூபா 500,001/- முதல் ரூபா 1,000,000/- வரை கைத்தொழில் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்புக்கள்	ரூபா	2,500.00
V.	ரூபா 1000,001/- இற்கு மேற்பட்ட கைத்தொழில் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்புக்கள்	ரூபா	5,000.00

நிபந்தனைகள்

1. பதிவு செய்து கொள்ளும் ஒவ்வொரு உருப்படிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் வியாபாரப்பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபா கட்டணமும் ஒப்பந்தக்காரர்களினால் அந்தந்த பெறுமதியை அவற்றுக்கு முன்னால் கட்டப்பட்டுள்ள கட்டணங்களும் செலுத்தப்படல் வேண்டும்.
2. தபால் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதாயின் 'தலைவர், ஹொரண நகர சபை' என்ற பெயரில் காசோலையொன்றின் மூலம் மாத்திரம் செலுத்தப்படலாம். காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. தேவையான வேளைகளில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைகளைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் மற்றும் வேறு பெறுகை முறைகளைக் கையாளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
4. வழங்குநராக பதிவு செய்து கொண்டுள்ள சகல உருப்படியின் பொருட்டும் விற்பனை செய்வதற்கு அல்லது விநியோகிப்பதற்கு இயைபான வியாபாரப் பதிவு அல்லது அதிகாரம் வாய்ந்த முகவர் என்பதை காட்டும் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. சபையினால் அங்கீகரிக்கப்படும் வழங்கல்களை உரிய தினத்தில் உரிய நேரத்திற்கு முன்னர் அந்த பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தவறுதல், கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளின் பிரகாரம் சிறந்த நிலைமையில் பொருட்களை மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தவறுதல் மற்றும் ஏனைய நியாயமான காரணங்களுக்காக அவ்வழங்குநர்களின் பெயர்களை வழங்குநர் பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
6. கட்டளையில் குறிப்பிடப்படும் அனைத்துப் பொருட்களையும் நகர சபையின் களஞ்சியப் பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.

ஹொரண நகர சபை அலுவலகம்
2023-10-20
தொலைபேசி இல.: **034-2261275 (பொது)**
034-2266477 (கணக்காளர்)

நெலு நிஷாந்தி இத்தகொட,
செயலாளர் மற்றும் ஹொரண நகர சபையின் அதிகார வாய்ந்த வேலைகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,
ஹொரண நகர சபை.

கேள்விக்கான அழைப்பு

மாவட்டச் செயலகம் - அநுராதபுரம்

நீர்ப்பம்பி வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை பாடசாலை போசணை நிகழ்ச்சித் திட்டத்திற்காக மற்றும் சௌபாக்கியா உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்திற்காக கீழ்க்காணும் நீர்ப்பம்பிகளை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்காக தகைமையுள்ள மற்றும் தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன. கேள்விதாரரால் விநியோகித்தல் வேலைத் திட்டத்தின் பிரகாரம் அநுராதபுர மாவட்டத்தில் பெயர் குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களுக்கு நீர்ப்பம்பியை விநியோகித்தல் வேண்டும்.

கேள்வி இலக்கம்	நீர்ப்பம்பிகளின் விபரம்	அளவு	கேள்விப் பிணை (ரூ)
ANU/DIST/15/1/B/24	1" ELECTRIC WATER PUMPS	108	200,000.00
	2" ELECTRIC WATER PUMPS	56	
	3 HP DIESEL ENGINE OPERATED NSP WATER PMPS	23	
	3 HP KEROSENE WATER PUMP	02	

கீழ்க்காணும் முகவரிக்கு வேண்டுதலை சமர்ப்பித்து மற்றும் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூ. 3000 கட்டணத்தைச் செலுத்திய பின்னர் ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு 2023 ஒக்டோபர் 20 மு.ப. 9.00 முதல் 2023 நவம்பர் 09 பி.ப. 3.00 வரை ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 2023 நவம்பர் 10 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு பதிவுத் தபாலில் அல்லது மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

2023 நவம்பர் 10 பி.ப. 2.00 இற்கு கீழ்க்காணும் முகவரியில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு கேள்விதாரருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படும். இது பற்றிய திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

இணையதளம்: www.anuradhapura.dist.gov.lk
தொ.பே. 025-2227018 / 071-8345952

கே.எம்.கே.கே. ஜயசுந்தர
தலைவர், திணைக்கள பெறுகைக்குழு
மாவட்ட செயலாளர்/ அரச அதிபர்,
மாவட்ட செயலகம், அநுராதபுரம்.
2023.10.18

விலைமனுக்களுக்கான அழைப்பு

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கிழக்கு மாகாணம்

PSDG திட்டம் - 2023

1. அட்டவணை 01 - கீழுள்ள அட்டவணையிலுள்ள பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

வ. இல.	அடையாள இல.	விபரம்	தேவையான விலைமனு தாரர் தரம்	விலைமனு பிணை (ரூபா)	பொறியியலாளர் மதிப்பீடு மில் (ரூபா)	பூர்த்தி செய்யும் காலம் நாட்காட்டி தினங்கள்	பிராந்தியம்
01	EP/PDHS(21)/ PSDG/ENG/ TR/2023-01	மனையவெளி மார்பு சிகிச்சை நிலையத்திற்கான தரைத்தளத்தை பூர்த்தி செய்தல் (கட்டம் - ii)	C6 மற்றும் C5	230,000.00	22.73	120	திருகோணமலை

அட்டவணை - 1

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். இந்த பெறுகையில் கீழ் செயற்படும் பணியின் பெறுமதி (வேட் மற்றும் ஏனைய வரிகள் தவிர்த்து) 50 மில்லியன் ரூபாவுக்கு கீழ் இருக்கும் வரை 04/2016 (iv) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.

3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கட்டிட நிர்மாணத்தில் ICTAD (தற்போது CIDA) இன் அட்டவணை-01 இல் குறிப்பிடப்பட்ட தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகைமைக்கு தேவையான தகுதியில் பின்வரும் அளவுகோல்கள் உள்ளடங்கும்,

a) கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணியின் சராசரி ஆண்டுப் பெறுமதி குறைந்தது கேள்விமனு தொகையில் 70% இருத்தல் வேண்டும் (அத்தாட்சி ஆவணம் ஒன்றாக குறைந்தது 03 ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிலுவை அறிக்கையை இணைத்தல் வேண்டும்)

b) இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு முற்கொடுப்பனவுகளையும் தவிர்த்து மற்ற ஒப்பந்த கடப்பாடுகளில் நிகர திரவ சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை கேள்விமனு தொகையில் 70% இற்கு குறையாதிருத்தல் வேண்டும். விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து குறைந்தது 03 மாத காலத்தில் வங்கி ஒன்றில் இருந்து அத்தாட்சி ஆவணம் இருத்தல் வேண்டும் என்பதோடு தொழில் வழங்குநருக்கு நேரடியாக அனுப்பி இருத்தல் வேண்டும்.

c) பணியாளர்களில் 5 ஆண்டுகள் அனுவத்துடன் NDT (சிவில்) அல்லது இணையானது அல்லது 10 ஆண்டுகள் அனுபவத்துடன் NCT தொழில்நுட்ப அதிகாரி ஒருவரை கொண்டிருத்தல் வேண்டும்.

d) விலைமனுதாரர் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் குறைந்தபட்சம் கேள்விமனு தொகைக்கு ஒத்த மாதிரியான கட்டிடத்தை கட்டிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் CIDA பதிவு புத்தகத்தில் சான்றிதழுடன் கூடிய வேலை வழங்குநரிடமிருந்து/ ஒப்புதல் அறிக்கையை அத்தாட்சி ஆவணமாக இணைத்தல் வேண்டும்.

5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் திருகோணமலை, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வேலை நாட்களில் 15.00 மணி வரை அலுவலக நேரத்தில் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு கட்டணம் இன்றி விலைமனு ஆவணத்தை பரீட்சிக்க முடியும்.

6. மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500.00 ரூபாவை செலுத்தி 2.30 வரை அலுவலக நேரத்தில் 2023.10.20 ஆம் திகதி தொடக்கம் 2023.11.09 ஆம் திகதி வரை திருகோணமலை, நீதிமன்ற வீதி, இல. 120, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை (கி.மா.), சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

7. 2024.02.08 ஆம் திகதி விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 91 நாட்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

8. அனைத்து விலைமனுக்களும் 2024.02.22 ஆம் திகதி வரை செல்லுபடியான இலங்கையின் மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்ட அட்டவணை - 01 இல் குறிப்பிடப்பட்ட இலங்கை ரூபா தொகைக்காக கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பெயரில் வெளியிடப்பட்ட விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது கோரும்போது பெறத்தக்க மற்றும் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்ட வடிவத்தில் இருத்தல் வேண்டும்.

9. முத்திரை பொறிக்கப்பட்ட விமைனுக்களை தலைவர், பெறுகைக் குழுவின் பெயருக்கு சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர் - கிழக்கு மாகாணம், இல. 120, நீதிமன்ற வீதி, திருகோணமலை என்ற அலுவலகத்திற்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2023.11.09 அன்று 3.00 மணி ஆக அமைவதோடு இறுதி திகதி முடிவுற்ற பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

11. விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கோரப்படுகின்றனர்.

12. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு திருகோணமலை, கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் 2023.11.01 ஆம் திகதி மு.ப. 10.30க்கு இடம்பெறும்.

13. விலைமனு ஆவணத்தில் தகைமை விபரத்தில் வடிவம்-2 இல் உள்ள தமது தற்போதைய பணிச் சுமையை அனைத்து விலைமனுதாரர்களும் அறிவிப்பது கட்டாயமாகும்.

14. தொழில்நுட்ப மதிப்பீட்டு நடைமுறையில் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் (EP) திருப்தியற்ற பணிகளை மேற்கொண்டவர்கள் அல்லது தவறான தகவல்களை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர்கள் நிராகரிக்கப்படுவர்.

15. திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும். தமது சொந்த முடிவாக எந்த ஒன்றையும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் அதிகாரம் திணைக்கள பெறுகைக் குழுவுக்கு உள்ளது.

மருத்துவர் டி.ஜி.எம். கொஸ்தா,
சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
2023.10.18

விடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை

பகிரங்க ஏல விற்பனை

2023 நவம்பர் 04ம் திகதி சனிக்கிழமை
கொழும்பு - 02, சேர்சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை
தேசிய வீடமைப்புத் திணைக்கள கட்டிடத்தில் அமைந்துள்ள
வாகன நிறுத்துமிடத்தில் மு.ப 10.00 இற்கு நடைபெறும்

01. நிர்மாண துணைப்பாகங்கள்
02. அலுவலக பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
03. மின் விசிறி
04. கணனி துணைப்பாகங்கள்/ போட்டோப்பிரதி இயந்திரங்கள்/ரோனியோ இயந்திரம்/அச்சு இயந்திரம்
05. ஜன்னல் திரைச்சீலை
06. வாகனங்களில் அகற்றப்படும் உதிரிப்பாகங்கள், டயர்

ஏலவிற்பனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருட்களின் புகைப்படங்களை **www.condominium.lk** இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் ஏலவிற்பனை நடைபெறும் தினம் மு.ப 8.00 முதல் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை ஏலவிற்பனை வளாகத்தில் நேரடியாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஏலவிற்பனை வளாகத்திற்கு பிரவேசிப்பதற்காக ஒரு நபரும் மீளளிக்கப்படாத ரூ.500.00 கொண்ட பிரவேச பத்திரமொன்றை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் பிரவேச பத்திரமொன்றை பெற்றுக் கொள்ளாத நபர்களுக்கு கேள்விகளை சமர்ப்பிக்கும் வாய்ப்பு கிடைக்காமல் போகும்.

ஏல விற்பனை மூலம் பெற்றுக் கொள்ளும் பொருட்களுக்காக அவ்வேளையிலேயே காசு செலுத்தி அகற்றிக் கொள்ளல் வேண்டும்

எந்தப் பொருளையும் ஏலவிற்பனையிலிருந்து அகற்றிக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உரியது.

பொருட்கள் அகற்றுதல் மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்,
கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை,
01ம் மாடி, வீடமைப்புத் திணைக்கள கட்டிடம்
சேர்.சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை
கொழும்பு - 02

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

நிவித்திகல பிரதேச சபை

பொருட்கள், பணிகள் மற்றும் சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல் - 2024

கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், பணிகள் மற்றும் விநியோகங்களுக்கான 2024ம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்ய விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், வணிகப் பதிவு இலக்கம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, வணிகப் பதிவுச் சான்றிதழின் நகல் மற்றும் பதிவுக் கட்டணத்தின் நகலை உள்ளடக்கிய, சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பதிவு தபால் மூலம் அனுப்பப்படலாம், அல்லது கொண்டுவந்து கையளிக்கலாம். விண்ணப்பம் அடங்கிய கடிதவுறையின் இடதுபுற மேல் மூலையில் "பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்களின் பதிவு - 2024" என்ற தலைப்பு குறிப்பிடப்பட வேண்டும்.

ஏற்கனவே பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களாக பதிவு செய்துள்ளவர்கள் பதிவை புதுப்பிக்க விண்ணப்பிக்க வேண்டும் மேலும் விண்ணப்பதாரரும் பதிவு வரம்பை அதிகரிக்க விரும்பினால் விண்ணப்பிக்க வேண்டும்.

சேவை வழங்குநர்களுக்கான நிபந்தனைகள்

01. வழங்குநர்கள் சம்பந்தப்பட்ட ஆண்டிற்கான வணிகப் பதிவுச் சான்றிதழை வைத்திருக்க வேண்டும்.
02. நிறுவனத்தால் வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விவரங்கள் இணைக்கப்பட வேண்டும்.
03. முன்னர் விநியோகம் செய்யப்பட்ட நிறுவனங்களின் விவரங்களை இணைக்க வேண்டும்.

ஒப்பந்தக்காரர்களுக்கான நிபந்தனைகள்

01. ICTAD/CIDA, மாகாண சபை அல்லது பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தால், அதற்கான சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும், இல்லையெனில், சொத்துகள் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
02. நிறுவனம் வேலையைச் செய்வதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் போதுமான திறமையான பணியாளர்களைக் கொண்டுள்ளது என்பதற்கான தகுதிச் சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்தும் சான்றினை சமர்ப்பிக்க வேண்டும்.
03. கட்டுமானத் திறன் பற்றிய விவரங்கள் (கட்டிடம் கட்டுமானம், சாலை கட்டுமானம் போன்றவை) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

காசோலைகள் மற்றும் காசு கட்டளைகள் "செயலாளர், நிவித்திகல பிரதேச சபை, நிவித்திகல" என்ற பெயரில் வரையப்பட வேண்டும்

பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 30.12.2023 வரை ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இல	பொருட்கள்/பண்டங்கள் வழங்கல் 01	பதிவுக் கட்டணம் (ரூ.)
01	அலுவலக உபகரணங்கள் மற்றும் எழுதுபொருள்	750.00
02	தளபாடங்கள்	750.00
03	உலோக தளபாடங்கள் மற்றும் அலுவலக பொருட்கள்	750.00
04	மின் உபகரணங்கள் மற்றும் தெரு விளக்குகள், பல்புகள்	750.00
05	சுகாதார உபகரணங்கள் (குப்பை வண்டிகள், குப்பை வாளிகள், விளக்குமாறு, ஈக்கிள் விளக்குமாறு, தூரிகைகள், கையுறைகள், பூட்ஸ், மழை கோட்டுகள்)	750.00
06	கொன்கிரீட் பொருட்கள் (ஹம் பைப்புகள் போன்றவை)	750.00
07	சீருடைகள், திரைச்சீலைகள், மேசை விரப்புகள்	750.00
08	வன்பொருள் பொருட்கள் (சிமெண்ட், இரும்பு, சுண்ணாம்புக் கற்கள், வயர் கம்பிகள், கட்டுமானப் பொருட்கள் போன்றவை)	750.00
09	விளையாட்டு பொருட்கள், விளையாட்டு உபகரணங்கள்	750.00
10	தேங்காய் ரா.்ப்டர்கள், மூங்கில்கள், ஷட்டரிங் பலகைகள் உட்பட மர வகைகள்	750.00
11	ஆற்று மணல், கொன்கிரீட் உலோகம்	750.00
12	செங்கற்கள், சிமெண்ட் புலொக் போன்றவை.	750.00
13	உலோகம்	750.00
14	பீவீசீ உபகரணங்கள் மற்றும் பாகங்கள்	750.00
15	அனைத்து வாகன உதிரி பாகங்கள் (டயர், குழாய்கள், பேட்டரிகள்)	750.00
16	சைக்கிள், வண்டி உரிமம் போன்றவற்றை வழங்குவதற்கான தட்டுகள்.	750.00
17	தார் வகைகளைப் பெறுதல்	750.00
18	அலுவலக நாட்குறிப்புகள் / நூலகப் புத்தகங்கள்	750.00
19	கம்ப்யூட்டர் துணைக்கருவிகள் (டோனர்கள், அச்சுப்பொறிகளுக்குத் தேவையான கார்ட்ரிட்ஜ்கள், போட்டோகாப்பியர் போன்றவை)	750.00
	சேவைகள் வழங்கல் 02	
01	வாகனங்களை பழுது பார்த்தல்	750.00
02	டிராக்டர்கள், கேட்டர்பில்லர் மற்றும் ரோட் ரோலர்கள் போன்ற இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்	750.00
03	வாடகை அடிப்படையில் ஒலிபெருக்கிகள் வழங்கல்	750.00
04	பதாகைகள் மற்றும் பெயர் பலகைகளை உருவாக்குதல்	750.00
05	ரோனியோ இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், ஒளிநகல் இயந்திரங்கள், வாயு சீராக்கிகள், கணினிகள் போன்றவற்றை பழுதுபார்த்தல்.	750.00
06	சரக்குகளை கொண்டு செல்வதற்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குதல்	750.00
07	அச்சிடும் பணிகள்	750.00
08	மரம் வெட்டும் சேவைகள்	750.00
09	தெரு விளக்குகளை நிறுவுவதற்கான மின் தொழில்நுட்ப சேவைகளைப் பெறுதல்	750.00
10	வாகனங்களின் சேவை	750.00
	கட்டுமானம் / அகழ்வாராய்ச்சி வேலை 03	
01	ரூ. 500,000.00 வரை	2000.00
02	ரூ. 500,000.00 முதல் ரூ. 1,000,000.00 வரை	3000.00
03	ரூ. 1,000,000.00 முதல் ரூ. 2,000,000.00 வரை	5000.00
04	பதிவை புதுப்பிப்பதற்கு	1500.00

மேலும் விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் தொலைபேசி இல. **045-2279275** மூலம் தொடர்பு கொள்ளலாம்.

04.10.2023
நிவித்திகல பிரதேச சபை

ஜீ.ஏ.பி.ஜீ பிரேமரத்ன
செயலாளர் (பதில்)
நிவித்திகல பிரதேச சபை
நிவிதிகல

Daily News Classifieds, the Housewives' companion

அஞ்சல் திணைக்களம்

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

IT உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல்

2023 ஒக்டோபர் 03ம் திகதிய விளம்பரத்துடன் இது சம்பந்தப்பட்டது.

01. இல. 01 மற்றும் 08 கீழ்க்காணுமாறு திருத்தப்படல் வேண்டும்.

Lot no 04 - Dot Matrix Printers

Lot no 05 - Dot Matrix Printers

02. இல. 04,05,06 மற்றும் 08 திகதிகள் கீழ்க்காணுமாறு திருத்தப்படல் வேண்டும்.

- ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை 2023 நவம்பர் 02, 14.00 மணி வரை கொள்வனவு செய்ய முடியும்.
- எல்லா விலைமனுக்களும் 2023 நவம்பர் 03ம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கீழே தரப்படும் முகவரிக்கு விநியோகிக்கப்படல் வேண்டும்.

கணக்காளர், (பெறுகை)
அஞ்சல் தலைமையகம்
தரை மாடி, இல. 310,
D.R. விஜேவர்தன மாவத்தை
கொழும்பு - 10

- இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட விலைமனுவிற்கு முன்னரான கூட்டம், கொழும்பு - 10, D.R. விஜேவர்தன மாவத்தை, இல. 310, அஞ்சல் திணைக்கள தலைமையகம் - அஞ்சல் அதிபரின் மாநாட்டு பண்டபத்தில் 2023 ஒக்டோபர் 27ம் திகதி நடைபெறும்.
- விலைமனுப்பிணை 2024 மார்ச் 03ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
அஞ்சல் திணைக்களம்,
இல. 310, D.R. விஜேவர்தன மாவத்தை கொழும்பு - 10
2023.10.20

கேள்விகளுக்கான அழைப்பு

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பல்நோக்குக் கட்டிடத்திற்கான உத்தேச ELV முறைமை

IFB No. CW/PRO/FHSS/02/2021

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் (வெட் வரியின்றி) 64,537,527.00 ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பீடத்தின் பல்நோக்குக் கட்டிடத்திற்கான உத்தேச ELV முறைமைக்காக தகுதி மற்றும் தகைமை கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

   இந்த வேலைகளில் தொலைபேசி மற்றும் தரவு முறைமையை வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளடங்குகின்றன.

   நிர்மாணக் காலம் 180 நாட்கள்
2. கேள்வி கோரல் தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் செயற்பாட்டிற்கமைய மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்கான தகுதியைப் பெற்றுக்கொள்வதற்காக வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் EM1 - Extra Low Voltage நிறுவல்கள் (தரவு, தொலைத்தொடர்பாடல் மற்றும் பாதுகாப்பு முறைமைகள், பொதுமக்கள் தொடர்பு முறைமை, பைப் மியூசிக் முறைமை) (ELV) CIDA நிறுவனத்தின் பதிவுத் தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதி தகைமைத் தேவைப்பாடுகள்:
   i. கடந்த ஐந்து வருடங்களில் 50 மில்லியன் ரூபா பெறுமதிக்குக் குறையாத இதனையொத்த ஆகக் குறைந்தது 1 ஒப்பந்தத்தில் அனுபவம் (ஆவணச் சாட்சிகளை இணைத்தல் வேண்டும்)
   ii. ஏனைய நிர்மாணக் கடப்பாடுகள் மற்றும் பிரத்தியேகமாக எந்தவொரு முன்பணம் தவிர்ந்ததாக ஆகக் குறைந்த திரவ சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதி தொகையானது 20 மில்லியன் ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். (ஆவணச் சாட்சிகளை இணைத்தல் வேண்டும்)
   iii. விலைமனுதாரர்கள் முக்கியமான நிரந்தர ஊழியர்களின் சகல விபரங்களையும் மற்றும் அவர்களின் EPF இலக்கங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் முக்கியமான ஊழியர்களை வாடகைக்கு அமர்த்தியிருந்தால் தற்போதைய வேலை வழங்குநரிடமிருந்தான சம்மதக் கடிதத்தை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை நுகேகொட, கங்கொடவில, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவு சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2803195, தொலைநகல்: 011-2803185 மற்றும் பின்வரும் முகவரியில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 2023-10-20ஆம் திகதி முதல் 2023-11-09ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் மீளளிக்கப்படாத பதினைந்தாயிரம் ரூபா (15,000.00 ரூபா) கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் ஆங்கில மொழியிலிலான முழுமையான கேள்வி கோரல் படிவத் தொகுதியொன்றை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
7. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான கேள்விகளை 2023-11-10ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவுற்ற உடனடுத்து சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் கிளையில் கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்விகள் 2024-02-09ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
9. சகல கேள்விகளுடனும் 700,000.00 பெறுமதியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையற்ற கோரிக்கை வங்கி உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்தப் பிணை முறி 2024-03-08ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். பிணை முறியானது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணை வேந்தருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-11-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிர்வாகக் கட்டிடத்தின் சபை அறையில் இடம்பெறும்.

கேள்விப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்த்தல், கொள்வனவு செய்தல் மற்றும் ஒப்படைப்பதற்கான முகவரி:

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்,
மூலதனம் மற்றும் திட்டமிடல் கிளை,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,
கங்கொடவில, நுகேகொடை.
தொலைபேசி: 011-2803195

தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.
2023-10-20

கேள்வி அறிவித்தல்

கெஸ்பேவ நகரசபை

கெஸ்பேவ நகர சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வாகன நிறுத்துமிடம், ஆடு, கோழியிறைச்சிக்கடை, மாட்டிறைச்சிக் கடை, பன்றியிறைச்சிக்கடை, பொது மலசல கூடங்களை 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலஎல்லைக்கு குத்தகைக்கு விடுவதற்காக இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

	குத்தகைக்கு விடும் விபரம்	வருடாந்த குறைந்த பட்ச கேள்வி	மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை	மீளளிகக்ப்படாத கேள்விப் படிவக் கட்டணம்
01	● சோமவீர சந்தரசிரி மைதானத்திற்கு அருகில் வாகன நிறுத்துமிடம் ● இரண்டாம் குறுக்கு வீதி ● மணிக்கூட்டுக் கோபுரம் முன்னால் வாகன நிறுத்துமிடம்	ரூ. 2,406,075/-	காசாக ரூபா 45,000 அல்லது வங்கிப் பிணை முறி மூலம் ரூ. 45,000/-	ரூ. 1000/-
02	மாட்டிறைச்சிக்கடை	ரூ. 1,348,000/-	ரூ. 25,000/-	ரூ. 1000/-
03	ஆடு, கோழியிறைச்சிக் கடை	ரூ. 495,495/-	ரூ. 9000/-	ரூ. 1000/-
04	பன்றியிறைச்சிக்கடை	ரூ. 635,250/-	ரூ. 1200/-	ரூ. 1000/-
05	பிலியந்தலை நகர மத்தியில் அமைந்துள்ள பொது மலசல கூடத்தை நடத்திச் செல்லல்	ரூ. 252,000/-	ரூ. 5000/-	ரூ. 1000/-

கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் 2023.10.20 மு.ப. 9.00 முதல் 2023.11.10 பி.ப. 3.00 வரை
கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் 2023.10.20 மு.ப. 9.30 முதல் 2023.11.10 பி.ப. 3.00 வரை
கேள்விகள் திறத்தல் 2023.11.10 கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன்

கேள்வி நிபந்தனைகள்:

- குறித்த நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்
- கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகைக்கு விடும் விபரத்தை தெளிவாக அட்டவணையில் உள்ளவாறு குறிப்பிடுதல் வேண்டும்.
- கேள்விப் பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறாகத் தயாரிக்கப்பட்ட உறைகளில் இட்டு அவ் உறைகளை மீண்டும் ஒரே உறையில் இட்டு பொறியிட்டு செயலாளர், கெஸ்பேவ நகர சபை, பிலியந்தலை என்ற பெயருக்கு பதிவுத் தபாலில் அல்லது தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும்.
- கேள்வித் தொகையின் 25% தொகையை பாதுகாப்பு வைப்பாக நகர சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
- கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதி நிதியொருவருக்கு சமுகமளிக்காலம்.
- சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை கெஸ்பேவ நகர சபைக்கு உரியது.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 011 2618197 கணக்காளரின் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்து அல்லது நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

கெஸ்பேவ நகர சபை அலுவலகத்தில்
2023.10.12

செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்
செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,
கெஸ்பேவ நகர சபை.

விலைமனுக் கோரல்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

திறைசேரியின் புதிய கட்டடத்தில் HVAC தொகுதியை (சில்லர் இன்றி) பராமரித்தல்

ஒப்பந்த இலக்கம்: MF/06/07/Central AC/New Bul./2023

1. கொழும்பு 01, லோட்டஸ் வீதி, நிதி அமைச்சின் புதிய கட்டடத்தில், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பொருட்டு அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவர் "HVAC தொகுதியை (சில்லர் இன்றி) பராமரித்தல்" இற்கு தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. எதிர்பார்க்கப்படும் சேவை காலம் 2023.12.01ஆம் திகதியிலிருந்து இரண்டு (02) வருடங்கள் ஆகும். 2 ஆம் வருடத்திற்கான சேவை ஒப்பந்தத்தை புதுப்பித்தலானது 1 ஆம் வருடத்தில் திருப்திகரமான செயலாற்றுகைக்கு உட்பட்டதாகும்.
3. விலைமனுக் கோரலானது தேசிய போட்டிக்குரிய விலைமனுக் கோரல் நடவடிக்கைமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகைமைபெறுவதற்கான தேவைப்பாடு பின்வருமாறு.
   I. இலங்கையில் செல்லுபடியாகும் வியாபார பதிவு ஒன்று இருத்தல் வேண்டும்
   II. EM5 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தின் கீழ் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும். பதிவானது குறைந்தபட்சம் 2024.01.01 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
   III. பராமரிப்பு பதவினரின் பிரதான பதவினருக்கு குறைந்தபட்சம் 05 வருட அனுபவம் அவசியமானதாகும்.
   IV. அரசாங்கத் திணைக்களங்களில்/ நிறுவனங்களில் அல்லது தனியார் துறையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கம்பெனிகளில் HVAC தொகுதியை (Water Cool Chill Water System) பராமரிப்பதில் குறைந்தபட்சம் 05 வருட அனுபவம்.
   V. விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்திலும் ஒப்பந்தத்தை வழங்குகின்ற சந்தர்ப்பத்திலும் கருப்பு பட்டியல்செய்யப்பட்ட ஒப்பந்ததாரராக இருக்கக்கூடாது.
   VI. ஊழியர் சேமலாப நிதியம்(EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) ஆகியவற்றின் பங்களிப்புக்காக முறையே 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் (EPF) சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பதிவு செய்வது அவசியமானதாகும். (1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க EPF சட்டத்தின் கீழ் படிவம் மற்றும் உத்தேச பராமரிப்பு பதவியினரின் விபரங்கள் அடங்கிய அட்டவணை ஒன்றே விலைமனுதாரர்களின் ஊழியர்களுக்காக இலங்கை மத்திய வங்கியில் EPF மற்றும் (ETF) பங்களிப்புத் தொகைக்கான சாட்சி ஆவணமாக விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்)
5. ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற தகமையுள்ள விலைமனுதாரர்களுக்கு 2023.10.20 ஆம் திகதி முதல் 2023.11.08 ஆம் திகதி வரை மு.ப. 0900 மணியிலிருந்து பி.ப. 1500 மணி வரை கொழும்பு 01, லோட்டஸ் வீதி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, புதிய கட்டடம், கணக்குப் பிரிவு, பிரதான கணக்காளர் (தொலைபேசி இல. 0112484535) எனும் முகவரியில் மேலதிக தகவல்களைப் பெற்று விலைமனு ஆவணங்களைப் பரிசீலனை செய்ய முடியும்.
6. இதற்காக ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றவிலைமனுதாரர்களுக்கு 2023.10.20 ஆம் திகதி மு.ப.0900 மணியிலிருந்து 2023.11.08ஆம் திகதி பி.ப.1500 மணி வரை கொழும்பு 01, லோட்டஸ் வீதி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு எனும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து திருப்பி செலுத்தப்படாத மூவாயிரத்து அறுநூறு ரூபாய் (ரூபா 3,600/-) கட்டணத்தை செலுத்தியதன் பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்ய முடியும்.
7. தலைவர், நிதி அமைச்சின் பெறுகைக் குழு, கணக்குப் பிரிவு, புதிய கட்டடம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, லோட்டஸ் வீதி, கொழும்பு 01 எனும் முகவரிக்கு 2023.11.08 ஆம் திகதியன்று பி.ப. 1400 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் விலை மனுக்களை ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலை மனுக்களை ஒப்படைக்கும் நேரம் முடிவடைந்ததன் பின்னர் விலைமனுதாரரின் பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. விலை மனுக்கள் 2024.02.07 ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் விலைமனுவின் பெறுமதியில் 1% சதவீதம் மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட விலைமனு பிணையமொன்று இருத்தல் வேண்டும் அதனை விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட படிவத்திற்கு அமைவாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பெயரில் வங்கிப் பிணையத்தின் வடிவில் சமர்ப்பித்தல் வேண்டும். விலை மனுக்களின் பிணயம் 2024.02.24ஆம் திகதிவரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
10. ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற சகல விலைமனுதாரர்களும் 2023.10.20ஆம் திகதி முதல் 2023.11.08 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 0900 மணியிலிருந்து பி.ப. 1500 மணி வரையான காலப்பகுதியில் இடத்தை பரிசீலனை செய்தல் வேண்டும்.

தலைவர்,
நிதி அமைச்சின் பெறுகைக் குழு,
கணக்குப் பிரிவு, புதிய கட்டடம்,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
லோட்டஸ் வீதி, கொழும்பு 01.
திகதி: 2023.10.20

கண்டி மாநகர சபை

2024 ஆண்டிற்கான வரவு செலவு திட்டம்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 212 (ஆ) ஆம் பிரிவின்படி 2024 ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் 2023 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் (07) ஏழு நாட்களுக்கு பொது மக்களின் பரிசீலனைக்காக கீழ்க்காணும் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

1. மாநகர சபை கௌரவ உறுப்பினர்களின் அலுவலகம் - மாநகர சபை கண்டி
2. கண்டி மாநகர சபை ஆணையாளர் காரியாலயம் - மாநகர சபை கண்டி
3. மாநகர பிரதான கணக்காளர் அலுவலகம் - மாநகர சபை கண்டி
4. டீ.எஸ் சேனாநாயக்க ஞாபகார்த்த பொது நூலகம் -கண்டி

கே.கே.ஜி.ஐ.டி.பி. விஜெதிலக
மாநகர சபை ஆணையாளர்
கண்டி மாநகர சபை

2023 ஒக்டோபர் மாதம் 04ம் திகதி
கண்டி மாநகர சபை அலுவலகத்தில்

மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளின்

ஏல விற்பனை

வ/ப யட்டியாந்தொட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் யட்டியாந்தொட்ட, கிதுல்கல, பெரன்னாவ, புனுகல, தெலிகம, கல்பாத்த, மத்தமகொட ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.03.31 வரை அடகு வைக்கப்பட்டு ஏலவிற்பனைத் திகதி வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2023 ஒக்டோபர் 28 மற்றும் 29ம் திகதிகளில் மு.ப 9.30 முதல் சங்க அலுவலக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யலாம்.

பொது முகாமையாளர்,
வ/ப யட்டியாந்தொட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
யட்டியாந்தொட்ட

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

அவுஸ்திரேலியா, க்ளெரின்டா வீஜசி 3169, டுல்லி வீதி, 4/31-33 மற்றும் இலங்கை, கொழும்பு -07 பார்ன்ஸ் பிளேஸ், இல. 30/2 எனும் இடத்தில் குடியிருந்து காலஞ்சென்ற ராஜிந்தர மிஷான் லியனகே என்பவருடைய இறுதி விருப்பாவணம் தொடர்பாக

(காலஞ்சென்றவர்)

வழக்கு இல : DTS 303/23

"குடியியல் வழக்குச் சட்டக்கோவையின் பிரிவு 554U (XXXVIIIB)எனும் அத்தியாயத்தின் கீழ் வெளிநாட்டு ப்ரொபேட் ஆவணத்தினை மீள் முத்திரையிடுவதற்காக விண்ணப்பம் தொடர்பான விடயம் தொடர்பாக.

ரொச்செல் தியானா லியனகே

28, ரொஸ் வீதி, தன்டெனொங், விக்டோரியா 3175 அவுஸ்திரேலியா

பின்வரும் அவரது அற்றோணி தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்.

கொழும்பு - 07, பார்ன்ஸ் பிளேஸ், இல. 30/2 எனும் முகவரியில் வசிக்கும் சுரங்க தனுஷ்க லியனகே

(மனுதாரர்)

அவுஸ்திரேலியா, க்ளெரின்டா வீஜசி 3169, டுல்லி வீதி, 4/31-33 மற்றும் இலங்கை, கொழும்பு - 07, பார்ன்ஸ் பிளேஸ், இல. 30/2 எனும் இடத்தில் குடியிருந்து காலஞ்சென்ற ராஜிந்தர மிஷான் லியனகே என்பவருடைய ஆதனம் தொடர்பாக 2023.05.19 ஆம் திகதி மெல்பர்ன், விக்டோரியா உயர் நீதிமன்றத்தினால் 28, ரொஸ் வீதி, தன்டெனொங், விக்டோரியா 3175, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ரொச்செல் தியானா லியனகே என்பவரிடம் வழங்கப்பட்ட ப்ரொபேட் ஆவணத்தினை குடியியல் வழக்குச் சட்டக்கோவையின் பிரிவு 554U (XXXVIIIB) எனும் அத்தியாயத்தின் கீழ் வெளிநாட்டு ப்ரொபேட் ஆவணத்தினை மீள் முத்திரையிடுவதற்காக மேற்கொள்ளப்படும் விண்ணப்பத்தினை பிரசுரத்திலிருந்த 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பு
2023 ஆம் ஆண்டு 10ம் மாதம் 02ஆம் திகதி

தமித்ரி ஆனந்திகா வர்ணகுலசூரிய
சட்டத்தரணி
இல. 361/7,தலங்கம வடக்கு,
கொஸ்வத்த, பத்தரமுல்லை

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

சமீர, மத்தியூஸ் மேலதிக வீரர்களாக இலங்கை அணியுடன் இன்று இணைவு

உலகக் கிண்ணத் தொடருக்கான மேலதிக வீரர்களாக இலங்கை குழாத்துடன் இணைவதற்கு அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் துஷ்மன்த சமீர அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக பிரமோத் மதுஷானை மேலதிக வீரராக இணைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும் சமீர "முழு உடல் தகுதியை" பெற்றிருப்பதால் அணியில் பந்துவீச்சை பலப்படுத்தும் எதிர்பார்ப்புடன் அனுபவ வேகப்பந்து வீச்சாளரான அவரை மேலதிக வீரராக இணைப்பதற்கு தேர்வுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

மதீஷ பதிரணவின் பந்துவீசும் கையில் ஏற்பட்டிருக்கும் வீக்கம் காரணமாக அவர் குறைந்தது பத்து நாட்கள் ஓய்வு எடுக்க வேண்டிய சூழலில், சமீரவை மேலதிக வீரராக இணைத்திருப்பது அவர் 15 பேர் கொண்ட குழாத்தில் சேர்ப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி மதீஷ அல்லது வேறு வீரர் ஒருவர் காயத்தால் நீக்கப்பட்டால் அந்த இடத்திற்கு சமீரவை இணைக்க முடியும்.

சமீர கடைசியாக கடந்த ஜூன் மாதம் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஆடி இருந்தார். லங்கா பிரீமியர் லீக் போட்டியில் காயத்துக்கு உள்ளான அவர் அண்மையில் நடந்த ஆசிய கிண்ணத் தொடரிலும் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் உலகக் கிண்ணத்திற்கான இலங்கை குழாத்திற்கு சேர்க்கப்படாத நிலையில் 36 வயதான மத்தியூஸ் எதிர்பாராத வகையிலேயே மேலதிக வீரராக அழைக்கப்பட்டுள்ளார். குறிப்பாக இலங்கை மத்திய வரிசை துடுப்பாட்டம் தடுமாற்றம் கண்டுள்ள நிலையிலேயே அவர் மீது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தேர்வாளர்கள் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கையை பின்பற்றியதாலேயே 2021 தொடக்கம் மத்தியூஸுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் இடம் அளிக்கப்படவில்லை.

எனினும் கடந்த மார்ச் மாதம் நியூசிலாந்து சுற்றுப்பயணத்தில் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. அந்தத் தொடரில் அவர் சோபிக்கத் தவறினார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கடைசியாக நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி 157 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டை இழந்திருந்த நிலையில் 209 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. அணித் தலைவர் தசுன் ஷானக்க காயத்தால் விலகிய நிலையில் அணியில் அனுபவ சகலதுறை வீரர் ஒருவரின் தேவை அதிகரித்துள்ளது. எனினும் 15 பேர் கொண்ட குழாத்தில் உள்ள வீரர் ஒருவர் உபாதைக்கு உள்ளானாலேயே மாற்று வீரர் ஒருவரை இணைக்க முடியும்.

இந்நிலையில் சமீர மற்றும் மத்தியூஸ் இருவரும் இன்று (20) இலங்கை அணியுடன் இணையவுள்ளனர்.

இம்முறை உலகக் கிண்ணத்தின் முதல் மூன்று போட்டிகளிலும் தோல்வியை சந்தித்து புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்தில் இருக்கும் இலங்கை அணி நாளை (21) நெதர்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இலங்கை வளர்ந்துவரும் அணியினருக்கு தோல்வி

இலங்கை வளர்ந்துவரும் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியை 21 ஓட்டங்களால் டக்வர்த் லுவிஸ் முறையில் வெற்றியீட்டிய பங்களாதேஷ் வளர்ந்துவரும் அணி 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 1–1 என சமநிலைக்கு கொண்டுவந்தது.

தம்புள்ளையில் நேற்று (19) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை வளர்ந்துவரும் அணி 50 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 297 ஓட்டங்களை பெற்றது. அணித் தலைவர் அஹன் விக்ரமசிங்க 77 ஓட்டங்களை பெற்றதோடு சொனால் தினுஷ 62 ஓட்டங்களை குவித்தார்.

பதிலெடுத்தாடிய பங்களாதேஷ் 36 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 200 ஓட்டங்களை பெற்றிருந்தபோதும் மழையால் ஆட்டம் தடைப்பட்டது. இதனால் டக்வர்த் லுவிஸ் முறையில் முடிவு தீர்மானிக்கப்பட்டது.

இரு அணிகளுக்கும் இடையிலான தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை (22) தம்புள்ளையில் நடைபெறவுள்ளது.

சாஹிரா சுப்பர் 16 கால்பந்து நாளை

ருஸைக் பாரூக்

கொழும்பு, சாஹிரா கல்லூரி மாணவர் தலைவர்களின் சங்கம் ஒழுங்கு செய்துள்ள நோலிமிட் 17ஆவது சாஹிரா சுப்பர் 16 கால்பந்துப் போட்டி நாளை (21) கொழும்பு, குதிரைப்பந்தயத் திடல் மைதானத்தில் நடைபெறவுள்ளது. காலை 8.30க்கு ஆரம்பமாக போட்டிகளின் இறுதி ஆட்டம் பிற்பகல் 3.30க்கு நடைபெறும்.

இந்த போட்டி கடந்த செப்டம்பர் 9 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டிருந்தபோதும் நாட்டில் நிலவும் காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச செய்திகள்

காசாவில் தொடரும் வான் தாக்குதலுக்கு மத்தியில் பைடனை அடுத்து ரிஷி சுனக்கும் இஸ்ரேல் பயணம்

உதவிப் பொருட்களை அனுப்ப எகிப்து இணக்கம்

காசா பகுதி மீது இஸ்ரேல் தொடர்ந்து சரமாரி வான் தாக்குதல்களை மேற்கொண்டு உயிர்ச்சேதங்கள் அதிகரித்து வரும் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை அடுத்து பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கும், இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவித்து அங்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

முழு முற்றுகையில் இருக்கும் காசாவுக்கு எகிப்து டனான ரபா எல்லை வழியாக உதவிப் பொருட்கள் செல்ல உடன்பாடு ஒன்று எட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் எட்டு மணி நேரத்திற்கும் குறைவான காலம் தங்கியிருந்த பைடன் புதன்கிழமை (18) இரவு நாடு திரும்பினார். இஸ்ரேலுக்கு தனது ஆதரவை உறுதி செய்த அவர் கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலில் உயிர் தப்பியவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

அவரது சுற்றுப்பயணத்தில் ஒரே ஒரு இராஜதந்திர முயற்சியாக 2.3 மில்லியன் மக்கள் வாழும் காசா மீதான இஸ்ரேலின் முழு முற்றுகையை தளர்த்துவதற்கு இஸ்ரேலை வற்புறுத்தினார்.

எதிர்வரும் நாட்களில் 20 உதவி லொறிகள் காசாவுக்குச் செல்வதற்கான உடன்பாட்டை எகிப்துடன் செய்துகொண்டிருப்பதாக பைடன் தெரிவித்தார். எனினும் ஒரு நாளைக்கு 100 உதவி வாகனங்கள் தேவைப்படுவதாக ஐ.நா உதவித் தலைவர் மார்டின் கிரிபித் பாதுகாப்பு சபையிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் ஆயிரக்கணக்கான தொன் உதவிப் பொருட்களுடனான வாகனங்கள் காசா செல்லும் எதிர்பார்ப்புடன் நேற்றைய தினத்திலும் எகிப்து பக்கமாக காத்திருந்தன.

உதவிப் பொருட்களை விநியோகிப்பதற்கு பைடனுடன் உடன்பாடு எட்டப்பட்டதாக எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசியின் பேச்சாளர் தெரிவித்தார். காசா உடனான எல்லையை எகிப்து மூடவில்லை என்றும் பலஸ்தீன பக்கமான நான்கு சுற்று இஸ்ரேலிய வான் தாக்குதல்களால் ரபா எல்லையை வலுக்கட்டாயமாக மூட வேண்டி ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். காசாவுக்கான இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரே வழியான ரபா எல்லை பகுதியில் 150 லொறிகள் காத்திருப்பதாக அங்கிருப்பவர்கள் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

அழிவடையக் கூடிய பொருட்கள் ஏற்கனவே கேட்டுப்போக ஆரம்பித்திருக்கும் நிலையில் கூடிய விரைவில் இந்த உதவிப் பொருட்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று மனிதாபிமான பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் காசாவுக்கான மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் உணவு விநியோகத்தை முற்றாக துண்டித்து முழு முற்றுகையை கடைப்பிடித்து வரும் நிலையில் அங்கு பாரிய மனிதாபிமான நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்புக்கு பயன்தராத மட்டுப்படுத்தப்பட்ட உதவிகள் எகிப்தில் இருந்து காசாவை அடைய அனுமதிப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. எனினும் ஆயுததாரிகளால் பிடிக்கப்பட்டிருக்கும் 200க்கும் அதிகமான பணயக்கைதிகளை விடுவித்தால் மாத்திரமே சோதனைச் சாவடியை திறந்து உதவிகள் அனுமதிக்கப்படும் என்று இஸ்ரேல் தொடர்ந்து கூறி வருகிறது.

பைடன் இஸ்ரேலை விட்டு வெளியேறி சில மணி நேரத்திற்குப் பின்னர், இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவது மற்றும் இஸ்ரேலியர்களுக்கு அனுதாபத்தை தெரிவிக்கும் அதே செய்தியுடன் பிரிட்டன் பிரதமர் இஸ்ரேலை சென்றடைந்தார்.

"எல்லாவற்றுக்கும் மேலாக, இஸ்ரேலிய மக்களுடனான எனது ஒருமைப்பாட்டை வெளியிடுவதற்காக நான் இங்கு வந்துள்ளேன். நீங்கள் கூற முடியாத, பயங்கரமான பயங்கரவாதச் செயலைச் சந்தித்திருக்கிறீர்கள் என்பதோடு ஜக்கிய இராச்சியம் உங்களுடன் இருக்கிறது என்று இங்கு நான் கூற விரும்புகிறேன்" என்று இஸ்ரேலை அடைந்த சுனக் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இடைவிடாத தாக்குதல்

மறுபுறம் காசாவில் 12 ஆவது நாளாகவும் நேற்று இடைவிடாது குண்டு மழை இடம்பெற்றதோடு அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை 3800 ஐ தாண்டி விரைவாக அதிகரித்து வருகிறது. மேலும் 12,000க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தெற்கு காசாவில் உள்ள கான் யூனிஸில் கடைத் தொகுதிகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. சின்னஞ்சிறு குழந்தையின் இளஞ்சிவப்பு கட்டில் தரையில் கவிழ்ந்து, ஒரு துணிக்கடையின் ஜன்னல்கள் நொறுக்கப்பட்டிருந்ததோடு வாகனங்களும் சேதமடைந்திருந்தன.

இஸ்ரேலின் உத்தரவை கேட்டு காசாவின் வடக்கில் இருந்து அந்தப் பகுதிக்கு இடம்பெயர்ந்த ரபாத் அல் நகால் என்பவர், "எங்குமே பாதுகாப்பில்லை" என்றார்.

"எனக்கு 70 வயதாகிறது. பல போர்களையும் தாண்டி வந்திருக்கிறேன். ஆனால் இதுபோன்ற கொடூரத்தை இதற்கு முன் சந்திக்கவில்லை. எந்த மதமும், மனசாட்சியும் இல்லை. இறைவனுக்கே நன்றி கூற வேண்டும். இறைவனிடம் மாத்திரமே நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். எந்த ஒரு அரபு அல்லது முஸ்லிம் நாடுகளையோ அல்லது இறைவனைத் தவிர உலகின் எவர் மீதும் நாம் நம்பிக்கை வைக்கவில்லை" என்று அவர் குறிப்பிட்டார்.

வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமில் இஸ்ரேலிய வான் தாக்குதலில் இடிந்த கட்டடத்தில் இடிபாடுகளை மக்கள் வெறுங் கைகளால் அகற்றி சிறிய ஆண் மற்றும் பெண் குழந்தைகளை மீட்டனர். கைபேசி விளக்கின் ஒளிக்கு மத்தியில் இடிபாடுகளில் இருந்து ஆடவரின் சடலம் ஒன்றும் மீட்கப்பட்டது.

உலகின் அதிக சனநெரிசல் மிக்க பகுதிகளில் ஒன்றான காசாவில் பாதி அளவானவர்கள் வீடுகளை இழந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

தெற்கு காசாவில் ரபாவுக்கு அருகில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதல்களில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலிய வான் தாக்குதலில் ஹமாஸ் அரசியல் பணியகத்தின் முதலாவது மற்றும் ஒரே பெண்ணான ஜமீலா அல் ஷன்டி கொல்லப்பட்டதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஹமாஸ் அரசியல் பணியகம் பிரதான முடிவுகளை எடுக்கும் குழுவாகும். கொல்லப்பட்ட ஜமிலா, ஹமாஸ் இணை நிறுவனர் அப்தல் அஸிஸ் அல் ரன்டிசியின் விதவை மனைவி என்பதோடு ஹமாஸ் பெண்கள் பிரிவின் நிறுவனருமாவார்.

காசா மருத்துவமனை மீதான தாக்குதலைத் தொடர்ந்து மேற்குக் கரையில் பலஸ்தீனர்களின் ஆர்ப்பட்டங்கள் நேற்றைய தினத்திலும் நீடித்ததோடு ரமல்லா நகருக்கு அருகில் இஸ்ரேலிய படையின் துப்பாக்கிச் சூட்டில் மேலும் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

இதன்படி காசா போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்துள்ளது. இஸ்ரேலிய இராணுவம் மற்றும் இஸ்ரேலிய குடியேற்றவாசிகளுடனான மோதல்கள் அங்கு அதிகரித்துள்ளது.

இதில் ரமல்லாவின் மேற்காக உள்ள சுக்பா கிராமத்தைச் சேர்ந்த 15 மற்றும் 17 வயதானவர்களே கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன அதிகாரசபையின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இஸ்ரேலிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இவர்கள் டயர் வண்டி ஒன்றை கொளுத்த முயன்றபோதே சுடப்பட்டதாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கின் கோபம்

காசா மீதான தாக்குதல்கள் தொடரும் சூழலில் மத்திய கிழக்கு பிராந்தியம் எங்கும் அதற்கு எதிரான கோபம் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் மத்திய கிழக்கின் அரபு நாடுகளுக்கான பைடனின் பயணமும் ரத்துச் செய்யப்பட்டதோடு மேற்குலக தலைவர்கள் தமது அரபு நட்பு நாடுகளின் தலைவர்களை அணி திரட்டுவதில் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

காசா மருத்துவமனை மீதான தாக்குதலில் 500 பேர் வரை கொல்லப்பட்டதாகக் கூறப்படும் நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்திய கிழக்கெங்கும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்துள்ளன.

பைடனுக்கு நேரடி சந்திப்பை ஏற்படுத்த முடியாத நிலையில் இஸ்ரேலில் இருந்து நாடு திரும்பும் வழியில் அவர் தொலைபேசி வழியாகவே எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசி உடன் உரையாடியுள்ளார்.

பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக உலகின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. பிலிப்பைன்ஸில் ஆயிரக்கணக்கானோர் ஒன்று திரண்டதோடு லெபனானில் அமெரிக்க தூதரகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

அமைதிக்கான யூதர்கள் குரல் என்ற மனித உரிமை அமைப்பின் சுமார் 300 ஆர்ப்பட்டக்காரர்கள் போர் நிறுத்தம் ஒன்றை கோரி அமெரிக்காவின் கபிடோல் வளாகத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்ததை அடுத்து கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்காவில் வொஷிங்டன், நியூயோர்க், சிக்காகோ உள்ளிட்ட பெரிய நகரங்களில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஐரோப்பாவிலும் பல இடங்களில் அதே போன்ற ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இதேவேளை லெபனானில் இருந்து வடக்கு இஸ்ரேலை குறிவைத்த பகுதிகளில் டாங்கி எதிர்ப்பு ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து பீரங்கி தாக்குதல் மூலம் பதிலடி கொடுத்து வருவதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

கிட்டத்தட்ட கடந்த இரண்டு வாரங்களாக காசா மோதல் வெடித்தது தொடக்கம் இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லைப் பகுதியில் பதற்றம் நீடித்து வந்தபோதும் இன்னும் பொதுமக்கள் வாழும் பகுதிகளுக்கு அது பரவவில்லை.

பாதுகாப்புச் சபை தீர்மானம்:

'வீட்டோ' அதிகாரத்தை பயன்படுத்தியது அமெ.

காசாவுக்கு மனிதாபிமான உதவிகள் செல்லும் வகையில் மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானத்தை அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி நிராகரித்துள்ளது.

பிரேசில் முன்மொழிந்த இந்த தீர்மானம் கடந்த சில நாட்கள் தாமதித்த நிலையில் நேற்று முன்தினம் (18) வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கு 12 உறுப்பு நாடுகள் ஆதரவாக வாக்களித்ததோடு ரஷ்யா மற்றும் பிரிட்டன் வாக்களிப்பதை தவிர்த்துக்கொண்டன.

எனினும் அமெரிக்கா மாத்திரம் இதற்கு எதிராக வாக்களித்தது. இந்தத் தீர்மானத்தில் இஸ்ரேலின் தற்பாதுகாப்பு உரிமையை குறிப்பிடத் தவறியதாக ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் தோமஸ் கிரீன்பீல்ட் விமர்சித்தார். இந்தக் கூற்றை பிரிட்டன் தூதுவர் பார்பரா வூட்வேட்டும் பிரதிபலித்தார்.

பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா இஸ்ரேலை தொடர்ந்து பாதுகாத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

"எமது அமெரிக்க சகாவின் பாசாங்குத்தனமான மற்றும் இரட்டை நிலைப்பாட்டை எம்மால் மீண்டும் ஒருமுறை காண முடிந்துள்ளது" என்று ஐ.நாவுக்கான ரஷ்ய தூதுவர் வசிலி நபன்சியா தெரிவித்துள்ளார். காசாவின் மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் ரஷ்யா கொண்டுவந்த தீர்மானமும் கடந்த திங்கட்கிழமை தோல்வி கண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன் கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

கேள்வி அறிவித்தல்

கம்புறுப்பிட்டிய பிரதேச சபை

கம்புறுபிட்டிய பிரதேச சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் உள்ள ஆதனங்களை 2024-01-01ஆம் திகதியிலிருந்து 2024-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன.

02. கேள்வி மாதிரிப் படிவம் வழங்குதல் 2023.10.25ஆம் திகதி முதல் 2023-11-15ஆம் திகதி பி.ப. 1.00 வரை.

03. நிர்ணயிக்கப்பட்டுள்ள கேள்விப் பிணை மற்றும் கேள்விப் படிவக் கட்டணத்தை இந்த அலுவலகத்திற்குச் செலுத்தி தேசிய அடையாள அட்டை அல்லது கிராம சேவகரினால் வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மூலம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் அந்த விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் கேள்வி நிபந்தனைகளுக்கு நீங்கள் இணங்குதல் வேண்டும்.

04. அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளவர்கள் எவருக்கும் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட மாட்டாது.

05. கேள்வி தொடர்பான இறுதித் தீர்மானம் கேள்விச் சபைத் தலைவரைச் சார்ந்ததாகும்.

மேலதிக விபரங்களை 041-2292275 / 041-2293936 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

திகதி: 2023-10-11

செயலாளர்,
கம்புறுப்பிட்டிய பிரதேச சபை

2024ஆம் வருடத்தில் கேள்வி மூலம் வழங்கப்படவுள்ள ஆதனங்கள்

தொ. இல.	ஆதன விபரம்	கேள்விப் படிவக் கட்டணம் (ரூ)	கேள்வி வைப்பு (ரூ)	குறைந்தபட்ச கேள்வி (ரூ)
01	கம்புறுப்பிட்டிய ஞாயிறு பொதுச் சந்தையில் வரி அறவிடல்	1000.00 (ஆயிரம்)	5000.00 (ஐந்தாயிரம்)	20000000.00 (இருபது இலட்சம்)
02	கம்புறுப்பிட்டிய நகர எல்லைக்குள் வர்த்தக வாகனங்களில் வரியை அறவிடல்	300.00 ((முன்னூறு)	1000.00 (ஆயிரம்)	130000.00 (ஒரு இலட்சத்து முப்பதாயிரம்)

மில்லனிய பிரதேச சபை

2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்ளல்

மில்லனிய பிரதேச சபைக்கு 2023ஆம் ஆண்டில் பின்வரும் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்துகொள்வதற்காக 2023.11.30 வரை என்னால் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், வியாபாரப் பெயர்ப்புதிவுச் சான்றிதழின் பிரதியொன்று மற்றும் பதிவுக் கட்டணத்துடன் "தலைவர், மில்லனிய பிரதேச சபை, மில்லனிய" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் சேர்த்தல் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் மேற்கொள்ளல் வேண்டும். கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில், **"வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2024"** என்று குறிப்பிடவும். மேலும், தேவை ஏற்படின் மாதிரிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும், பதிவுக்கட்டணமானது, ஒவ்வொரு உருப்படிக்குமாக தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள், "தலைவர் மில்லனிய பிரதேச சபை" என்ற பெயரில் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், நேரில் அலுவலகத்தில் சமுகமளித்தும் செலுத்தப்படலாம்.

தொடர் இலக்கம்	பண்டங்கள் மற்றும் சேவை வழங்கல்களிற்கான கட்டணம், ஒவ்வொரு உருப்படிக்கும் ரூபா 1,000/- ஆகும்
1	அனைத்து வகையான எழுதுகருவிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள்
2	அனைத்து வகையான அச்சு வேலைகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட எழுது கருவிகள்
3	சுகாதாரம்/ சுகாதாரப் பாதுகாப்புப் பதார்த்தங்கள் மற்றும் உபகரணங்கள்
4	கட்டிடப் பொருட்கள் (இரும்புக் குழாய்கள், வர்ணப்பூச்சுக்கள் மற்றும் வரைதல் பொருட்கள், கொங்கிறீட் சார்ந்த கல்வகைகள், மணல், சீமெந்து, நீர்க்குழாய் துணை உறுப்புக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள், போன்றவை.
5	வாகனங்களிற்கான டயர். டியுப், பெற்றரிகள்
6	தகனசாலைகளிற்கு காஸ் (GAS) வழங்கல்
7	பதாகைகள், போஸ்டர் கட்டவுட்டுகள், டிஜிட்டல் அச்சு வேலைகள், ஸ்டிக்கர்
8	கணனி அச்சு இயந்திரங்கள் மற்றும் நிழற்படப் பிரதி இயந்திரங்களிற்கான டோனர், ரிபன், காட்ரிஜ் போன்றவை.
9	குப்பைத் தொட்டிகள் மற்றும் கொம்பொஸ்ட் தொட்டிகள்
10	முன்பள்ளி உபகரணங்கள், விளையாட்டு பண்டங்கள் சிறுவர் பூங்காக்களிற்கான துணை உறுப்புக்கள், உபகரணங்கள்.
11	கருவிகள் மற்றும் உபகரணங்கள் (வீட்டுத் தோட்டம் மற்றும் வீதிப் பராமரிப்புகளிற்கானவை)
12	வீதி விளக்கு தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்/ மின்குமிழ்கள்
13	சீருடைகள்/ சீருடைத்துணிகள்/ பாதுகாப்பு அங்கிகள்
14	கணனிகள்/ நிழற்படப் பிரதி பொறிகள், அச்சுப் பொறிகள்
15	வளிச் சீராக்கி இயந்திரங்களை வழங்கல்
16	தார், கோலாஸ், முன் கலவை
17	வாகனங்கள்/ இயந்திராதிகளை சர்விசு பண்ணுதல்
18	கணனி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் புதுப்பித்தல் மற்றும் சர்விசு செய்தல்
19	வாகனங்கள்/ இயந்திராதிகள்/ புதுப்பித்தல் வாகனங்கள் தகடு வேலைகள் மற்றும் வர்ணம் பூசுதல்
20	நில அளவையாளர் சேவைகள்
21	சட்டத்தரணிகளின் சேவைகள்
22	விழாக்களுக்கான கூடாரங்கள், கதிரைகளை வழங்கல் உருக்கி ஒட்டுதல் மற்றும் இணைப்பு வேலைகள்
23	உராய்வு நீக்கிகள், கிரீஸ் வழங்கல்
24	சமைத்த உணவு, சிற்றுண்டி வகைகள், குடிநீர் போத்தல்கள் வழங்கல்
25	அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல்
26	வள்ளங்கள் மற்றும் வள்ளங்களின் இயந்திரங்களைப் புதுப்பித்தல்
27	அலுவலக உபகரணங்கள் (மேசைகள், கதிரைகள், கபட்கள் போன்றவற்றை) வழங்கல்.
28	இலகுரக வாகனங்கள்/ கனரக வாகனங்கள்/ இயந்திராதிகளை வாடகை அடிப்படையில் வழங்கல் (முச்சக்கர வண்டிகள், வேன்கள், JCB, D4D, கல் உருளைகள் D2D ஸ்கெட்டர், டிப்பர், நீர்ப்பம்புகள், கொங்கிறீட் கலவை இயந்திரங்கள்)
29	விழாக்களிற்கான கூடாரங்கள், கதிரைகள், ஒலி பெருக்கி இயந்திரங்கள், மேடைகளை வாடகை அடிப்படையில் வழங்கல்.
30	நூலகங்களிற்கு நாளிதழ்கள் மற்றும் சஞ்சிகைகளை வழங்கல்
31	சேதனப்பசளை பொதியிடல் உறைகள்
32	செடிவகைகள் மற்றும் பூங்கா அலங்கரிப்புப் பதார்த்தங்கள் மற்றும் உபகரணங்கள்
33	தீயணைப்புக் கருவிகள் மற்றும் அதுசார்ந்த துணை உறுப்புகள்

ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

தொடர் இலக்கம்	கட்டண எல்லை	பதிவுசெய்தற் கட்டணம் ரூபா சதம்
1	ரூபா 100,000.00 வரை	1,000.00
2	ரூபா 100,000.00 - 250,000 வரை	1,500.00
3	ரூபா 250,000.00 முதல் 500,000 வரை	2,000.00
4	ரூபா 500,000.00 முதல் 1,000,000.00 வரை	2,500.00
5	ரூபா 1,000,000.00 முதல் ரூபா 10 மில்லியன் வரை அரசாங்க ICTAD நிறுவனத்தின் C7 அல்லது அதற்கு மேல் பதிவுடன்	3,000.00

பொது நிபந்தனைகள்

1. பதிவு செய்யப்பெற்றுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கோரப்படுவதுடன், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அதற்குப் புறம்பாக பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை சபைக்கு உரித்தாகும்.
2. முன்னறிவித்தலின்றி உரித்தான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கத்தவறும் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைகளிற்கு மற்றும் தேவையான தரத்திற்கு அமைவாக பண்டங்களை வழங்கத் தவறும் அனைத்து வழங்குநர்களினதும் பதிவுகள் இரத்துச் செய்யப்படும். (பதிவுக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.)
3. அனைத்து வழங்கல்களிற்காகவும் குறைந்தபட்சம் 60 நாட்களிற்கு, சபைக்கு கடன் வசதிகளை வழங்குதல் வேண்டும்.
4. இங்கு குறிப்பிடப்படாத நிபந்தனைகளை விடுப்பதற்கு மற்றும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு முழுமையான உரிமை சபைக்கு உரித்தாவதுடன், மில்லனிய பிரதேச சபையின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக அமையும்.
5. மேலதிக விசாரணைகள், செயலாளர், மில்லனிய பிரதேச சபை, மில்லனிய, தொலைபேசி இல:- 034-2252170.

2023 ஒக்டோபர்
17ஆம் திகதி

செயலாளர்,
அதிகாரம் மற்றும் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,
மில்லனிய பிரதேச சபை

இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2023-09-12 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ் வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு R.A.I.P. விஜயவிக்ரம அத்தாட்சிப்படுத்திய 2015.06.01ஆம் திகதிய 240ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெறப்பட்ட வீட்டுக் கடன் மீது 2023.07.25ஆம் திகதி வரையான வட்டியும் முதலுமாக 18,455,803.93 ரூபாயும் (பதினெட்டு மில்லியன் நானூற்று ஐம்பத்தைந்தாயிரத்து எண்ணூற்று மூன்று ரூபாய் தொண்ணூற்று மூன்று சதம்) அத்துடன் 2023.07.26ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதப்படி (12.5%) 15,068,741.37 ரூபாய் (பதினைந்து மில்லியன் அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்று நாற்பத்தொரு ரூபாய் முப்பத்தேழு சதம்) மீதான மேலதிக வட்டியும் தவணைச் சலுகைக் கடன் மீது 2023.07.25ஆம் திகதி வரையான வட்டியும் முதலுமாக 4,422,677.60 ரூபாயும் (நான்கு மில்லியன் நானூற்றி இருபத்திரண்டாயிரத்து அறுநூற்று எழுபத்தேழு ரூபாய் அறுபது சதம்) அத்துடன் 2023.07.26ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு எட்டு வீதப்படி. (8%) 3,934,224.69 ரூபாய் (மூன்று மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்து நான்காயிரத்து இருநூற்று இருபத்து நான்கு ரூபாய் அறுபத்தொன்பது சதம்) மீதான மேலதிக வட்டியும் இல. 191, பிரதான வீதி, கிரியுல்ல என்ற முகவரியைச் சேர்ந்த ஜயசிங்க ஆரச்சிகே பிரசன்ன சம்பத் ஜயசிங்க என அறியப்படும் திரு. ஜயசிங்க ஆரச்சிகே பிரசன்ன சம்பத் என்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறித்த 2015.06.01ஆம் திகதிய 240ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெறப்பட்ட வீட்டுக் கடன் மீதான மேற்குறித்த 18,455,803.93 ரூபாயையும் (எட்டு மில்லியன் நானூற்று அறுபதாயிரத்து அறுநூற்று எழுபத்து மூன்று ரூபாய் தொண்ணூற்றேழு சதம்) தவணைச் சலுகைக் கடன் மீதான 4,422,677.60 ரூபாயையும் அத்துடன் 2023.07.26ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனங்களை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தம்பதெனியாக் கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

"மல்வான" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் L.W.I ஜயசேகர தயாரித்த 2012.08.28ஆம் திகதிய 912/2012 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று, உடுகஹ மேற்கு கோரளை, நாரம்மல பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகட்குட்பட்ட 1034 - மரங்தகொல்ல கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள தலகஸ்முனுவ கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடகிழக்கில் V.G குமாரசிறி என்பவரால் உரிமை கோரப்படும் காணி, நீர்கொழும்பு வீதியிலிருந்து தல்கஸ்முனுவ வரையான பிரதேச சபை வீதி என்பவற்றையும் தென்கிழக்கில் V.G குமாரசிறி, அலவ்வ, ரணவீர, P.V. ஆரியதாஸ, தினபால ஆகியோரால் உரிமை கோரப்படும் காணி, தேவத்த வீதி என்பவற்றையும் தென்மேற்கில் V.G குமாரசிறி என்பவரால் உரிமை கோரப்படும் காணி, மஹா ஓயா என்பவற்றையும் மேற்கில் 303/2010 என்ற வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 01, இக்காணியின் மீதிப் பாகம், சம்பத் ஜயசிங்க என்பவரால் உரிமை கோரப்படும் காணி, தியஹொந்த எல என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ஏக்கர் மூன்று பேர்ச்சுகள் (ஏ1.ரூ3.பே.05) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி நாரம்மல காணிப் பதிவகத்தில் T 66/41 என்ற இலக்கத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

இலங்கை வங்கி
தம்பதெனியாக் கிளை

திரு. K.N.M.D.P. தர்மகீர்த்தி
முகாமையாளர்.

1975 BOC www.boc.lk A (lkr) Fitch மற்றும் AAA Brand Finance மற்றும் இலங்கை வங்கி இலங்கை தமிழீழ வங்கியினால் வங்கியளிக்கப்படும் உரிமை மற்று வணிக வங்கியாகும் நுகரவை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை.

மக்கள் வங்கி

(கூட்டிணைந்த வங்கிப்பிரிவு)

பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல கோரளே தெற்கு, ஓதர பலாத்த, வென்னப்புவவில், ஹேனபொலவத்த அல்லது தங்காலே என அழைக்கப்படும், ஹல்தண்டுவன மற்றும் புஜ்ஜம்பொல கிராமங்களில், இலக்கம் 468B கிராம உத்தியோகத்தர் பிரிவில், மெத ஹல்தந்துவன பிரதேச செயலாளர் பிரிவில், தங்கொட்டுவ பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள, அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் டப்ளியூ.எல். எச்.பெர்னாண்டோ அவர்களால் வரையப்பட்ட, 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் திகதியிடப்பட்ட, 8996 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம்: ஏ-II : றூ-00 : ப-18

அதிலுள்ள கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக E 111/274 என்ற இலக்கத்தின் கீழ் மாறவில காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2023 நவம்பர் 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும்

நவலோக்க ஸ்ரீல் இன்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட சொத்து

தீர்மான அறிவித்தலுக்கு

தீர்மான அறிவித்தலுக்கு தயவு செய்து 2023 ஏப்ரல் 06ஆம் திகதி வியாழக்கிழமை வெளியான அரசாங்க வர்த்தமானியையும், டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

காணியைச் சென்றடைவதற்கான வழி

நீங்கள், கொழும்பு கோட்டையிலிருந்து, கொழும்பு - கண்டி "A1" நெடுஞ்சாலை வழியாக களனி பாலம் வரை செல்லவும். பின்னர், பேலியகொட புத்தளம் "A3" நெடுஞ்சாலைக்கு இடது புறமாகத் திரும்பவும். அங்கிருந்து, தோப்புவ சந்தியில் 38கி.மீ போஸ்ட் சந்திக்கும் வரை அந்த வீதி வழியாகச் செல்லவும். அங்கிருந்து, தங்கொட்டுவ வீதிக்கு வலது புறமாகத் திரும்பி, சுமார் 05 கி.மீ வரை பயணித்து, வலது பக்கமாக, ஹெட்டிரிப்புவ வீதிக்குத் (தொழிற்சாலை வலய வீதி என அழைக்கப்படும்) திரும்பவும். இந்த வீதியில் நீங்கள் சுமார் 2 கி.மீ தூரம் பயணித்து, மீண்டும் இடது புறமாகத் திரும்பி, P.S வீதியின் இரண்டாவது வளைவைக் கண்டறியும் வரை, மேலும் 175 மீட்டர் தூரம் சென்றதும், இடது புறத்தில் சொத்து அமைந்திருப்பதைக் காணலாம். இது, தங்கொட்டுவைக்கு 3.8 கி.மீ தூரத்திலும், கொழும்பு கோட்டைக்கு 53.7 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது.

கொடுப்பனவு செய்யும் முறை:

ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2½% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரை வரி

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் முகாமையாளர், உதவிப்பொது/அறவீடுகள்/மக்கள் வங்கி தலைமை அலுவலகம், 10வது மாடி, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி 011-2481613, 011-2481514

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது"

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம

ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்

131 வருடகால மகோன்னத சேவை

தலைமை அலுவலகம்
24, டொரிங்டன் வீதி, கண்டி.
தொலைபேசி : 081-2227593
தொலை/பக்ஸ் : 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்
6A, பெயார் பீல்ட் கார்ட்ன்,
கொழும்பு-08.
தொலைபேசி : 011-2671467, 011-2671468
தொலை/பக்ஸ் : 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணையதளம்: www.sandslanka.com

ஆரச்சிகட்டுவ பிரதேச சபை

2024 ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பு வரவுசெலவுத்திட்ட அறிக்கையை பரிசீலனை செய்தல்

2024ம் ஆண்டிற்காக ஆரச்சிகட்டுவ பிரதேச சபையின் குறைநிரப்பு வரவுசெலவுத்திட்ட அறிக்கை பொதுமக்களுக்கு பரீட்சித்துப்பார்ப்பதற்காக 2023 ஒக்டோபர் 20 முதல் நவம்பர் 10 வரை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

பீ.ஏ..எம்.ஷிரானி அபேசிங்க
செயலாளர்
ஆரச்சிகட்டுவ பிரதேச சபை

மீட்கப்படாத அடகு நகைகள் ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட வத்தேகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.08.31ஆம் திகதி உட்பட அத்திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2023.11.18ஆம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகளை 2023.11.18ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு வரையறுக்கப்பட்ட வத்தேகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கண்டி வீதி இல. 46 எனும் அலுவலகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

01. வத்தேகம கிராமிய வங்கி
02. ஹுருகங்கை கிராமிய வங்கி
03. கஹல்ல கிராமிய வங்கி
04. அலுத்கம கிராமிய வங்கி
05. அம்பதென்ன கிராமிய வங்கி
06. உடதலவின்ன கிராமிய வங்கி
07. மடுல்கெலை கிராமிய வங்கி
08. கெலேபொக்க கிராமிய வங்கி
09. மடவளை கிராமிய வங்கி
10. பன்வில கிராமிய வங்கி
11. குடுகலை கிராமிய வங்கி

இப்படிக்கு
பொது முகாமையாளர்,
வரையறுக்கப்பட்ட வத்தேகம பலநோக்குக் கூட்டுறவு சங்கம்,
வத்தேகம.

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2023.09.12 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு திரு ஈ.கே.எச்.எம்.கருணாதிலக அத்தாட்சிப்படுத்திய 2014.09.24 திகதியிட்ட ஈட்டு முறி இல.4009, பிரசித்த நொத்தாரிசு சந்தநிமா ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2015.09.11 திகதியிட்ட ஈட்டு முறி இல.663, பிரசித்த நொத்தாரிசு ஏ.எம்.கே.ஆர். அபேசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2017.12.29 திகதியிட்ட ஈட்டு முறி இல.193, பிரசித்த நொத்தாரிசு ஏ.எம். கே.ஆர். அபேசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2018.05.18 திகதியிட்ட ஈட்டு முறி இல.375, பிரசித்த நொத்தாரிசு பீ .டீ. சமன்மலி அத்தாட்சிப்படுத்திய 2022.12.30 திகதியிட்ட ஈட்டு முறி இல.34 ஆகியவற்றின் பேரில் கோணபொல சந்தி, பலன்னொருவ, இல.202 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு டெடிகமுவகே உபுல் என்பவரிடமிருந்து **மீள் அட்டவணைக் கடன் A** மீது 2023.08.11 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் **ரூ. 11,846,784.03** (பதினொரு மில்லியன் எண்ணூற்று நாற்பத்தாறு ஆயிரத்து எழுநூற்று எண்பத்து நான்கு ரூபாய்களும் மூன்று சதங்களும்) அத்துடன் **ரூ. 11,087,816.28** (பதினொரு மில்லியன் எண்பத்தேழு ஆயிரத்து எண்ணூற்றுப் பதினாறு ரூபாய்களும் இருபத்தெட்டு சதங்களும்) மீது ஆண்டுக்கு பதினாறு (16.0%) வீதத்தில் 2023.08.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், மற்றும் **மீள் அட்டவணைக் கடன் B** மீது 2023.08.11 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் **ரூ. 6,109,412.41** (ஆறு மில்லியன் நூற்று ஒன்பது ஆயிரத்து நாநூற்றுப் பன்னிரெண்டு ரூபாய்களும் நாற்பத்தொரு சதங்களும்) அத்துடன் **ரூ.5,981,068.49** (ஐந்து மில்லியன் தொள்ளாயிரத்து எண்பத்தொரு ஆயிரத்து அறுபத்தெட்டு ரூபாய்களும் நாற்பத்தொன்பது சதங்கள்) மீது ஆண்டுக்கு நான்கு(4.0%) வீதத்தில் 2023.08.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட 2014.09.24 திகதியிட்ட ஈட்டு முறி இல.4009, 2015.09.11 திகதியிட்ட ஈட்டு முறி இல.663, 2017.12.29 திகதியிட்ட ஈட்டு முறி இல. 193, 2018.05.18 திகதியிட்ட ஈட்டு முறி இல. 375, 2022.12.30 திகதியிட்ட ஈட்டு முறி இல. 34, ஆகியவற்றின் பேரில் **மீள் அட்டவணைக் கடன் A** மீது **11,846,784.03** (பதினொரு மில்லியன் எண்ணூற்றி நாற்பத்தாறு ஆயிரத்து எழுநூற்று எண்பத்து நான்கு ரூபாய்களும் மூன்று சதங்களும்) மற்றும் **மீள் அட்டவணைக் கடன் B** மீது **ரூ. 6,109,412.41** (ஆறு மில்லியன் நூற்று ஒன்பது ஆயிரத்து நாநூற்றுப் பன்னிரெண்டு ரூபாய்களும் நாற்பத்தொரு சதங்களும்) அத்துடன் 2023.08.12 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி ஹொரண மேற்தரம் B கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், றைகம் கோரளை கும்புகே பற்றுவில் ஹொரண பிரதே

இப்பாகமுவ பிரதேச சபை

2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் இச்சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2023.12.31ஆம் திகதி வரை இடம்பெறும். பதிவு செய்வதற்காக பின்வரும் மாதிரிப் படிவத்தை (A4 அளவில் தயாரிக்கப்பட்ட) உபயோகித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் நிறுவனத்திற்குக் குறித்த பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். வழங்குநர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைக்காக மீளளிக்கப்படாத 1500.00 ரூபாவை பதிவுக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். இதனை பணமாக, காசோலை அல்லது ''செலுத்தும் காரியாலயம் இப்பாகமுவ'' எனக் குறிப்பிட்டு காசுக்கட்டளை மூலமாகச் செலுத்தலாம். காசோலைகள் அல்லது காசுக் கட்டளைகள் ''தலைவர், இப்பாகமுவ பிரதேச சபை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். அலுவலக நேரத்தினுள் (பி.ப. 3.00 மணிக்கு முன்) ரொக்கப் பணமாகப் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தலாம்.

	(அ) வழங்கல்கள்		(ஆ) சேவை வழங்கல்கள்
1.	அனைத்து வகையான காகிதாதிகள் வழங்கல்	1	டுப்ளோ இயந்திரம்/ புகைப்படப் பிரதி/ தொலைநகல் இயந்திரம்/ வளிச் சீராக்கி இயந்திரம்/ RO நீர் வடிகட்டும் இயந்திரங்கள் உட்பட அலுவலக இயந்திரோபகரணங்களை வழங்குதல் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
2.	அலுவலக உபகரணங்கள் (கணனி / கணனி வன்பொருள் / கணணி மென்பொருள் / டோனர் / ரிபன் / மற்றும் கார்ட்ரிச்)	2.	அனைத்து வகையான வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
3.	அலுவலக உபகரணங்கள் (மரம், பிளாஸ்டிக் / உருக்கு / எம்டிஎப் உற்பத்திகள்)	3.	வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல் (மோட்டர் கிரேடர்/ ஜே.சி.பி. இயந்திரம்/ டிப்பர் வாகனம்/ முச்சக்கரவண்டி/ வேன்/ டிராக்டர் வண்டி/ கொன்கிறீட் கலவை இயந்திரம், வீதி அழுத்தும் இயந்திரம்)
4.	மின்சார உபகரணங்கள் (வீதி விளக்குகள் பராமரிப்பு துணைப்பாகங்கள் மற்றும் அலுவலக மின்சார துணைப்பாகங்கள்)	4.	சட்டச் சேவைகள் மற்றும் நில அளவை சேவைகள் வழங்குதல்
5.	சீருடைக்கான துணி/ திரைச்சீலைகள்/ காலணிகள் காலுறைகள் மற்றும் அலுவலகப் பைகள் வழங்குதல்	5.	அபாயகரமான மரங்களை வெட்டுபவர்கள்
6.	வீதி மற்றும் சுகாதார தொழிலாளர்களுக்குத் தேவையான பொருட்கள் (மழை அங்கிகள், கம்பூட்ஸ், கையுறைகள், வாய்க் கவசங்கள், தலைக் கவசங்கள், பிளாஸ்டிக் கண்ணாடி போன்றன உட்பட)	6.	தகனச்சாலை திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் மற்றும் எரிவாயு வழங்குதல்
7.	அச்சு வேலைகள், அச்சடித்த படிவங்கள், பற்றுச்சீட்டுகள் மற்றும் புத்தகங்கள்	7.	இலத்திரனியல் முறைமைகளைத் தயாரித்தல் மற்றும் கணனி வலையமைப்பிடல், தொலைபேசி வழி திருத்தவேலைகள், உள்ளக தொலைபேசி முறைமைகள், பாதுகாப்புப் கமரா முறைமைகள், விரல் ரேகை பதிவு இயந்திரங்கள், தீயணைப்பு உபகரணங்களை வழங்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல், வாகனங்களுக்கான வளிச்சீராக்கி பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள்
8.	அனைத்து வகையான பதாகைகள், பெயர்ப் பலகைகள் வரைதல் / தயாரித்தல் / அச்சிடல் மற்றும் ஞாபகச் சின்னங்களை வழங்குதல்	8.	அனைத்து வகையான மின்சார உருக்கியொட்டும் வேலைகள்
9.	நீர்ப் பம்பி, பீ.வி.சி. துணைப்பாகங்கள், டீஐ குழாய் துணைப்பாகங்கள், பிளாஸ்டிக் நீர்த் தாங்கிகள், குப்பைத் தொட்டிகள், கொம்போஸ்ட் பீப்பாய்கள்	9.	கட்டிடக் கலைக்கமைவாக வீட்டுத் திட்ட வரைபடம் மற்றும் ஆலோசனைச் சேவைகள்
10.	கனரகப் பொருட்கள் மற்றும் நிறப்பூச்சுகள் வழங்கல்	10	உக்கிப் போகாத குப்பைகள், வெற்று போத்தல்கள், பழைய இரும்பு, பழைய பத்திரிகைகள் உட்பட சிதைந்த பொருட்களை கொள்வனவு செய்தல்
11.	அனைத்து வகையான கட்டிடப் பொருட்கள் மற்றும் கைத்தொழிலுக்கான பொருட்களை வழங்குதல் (கருங்கல், மணல், செங்கல், கூழாங்கல், கிரவல், கற்தூள், சிப்ஸ், மண், அஸ்பெஸ்டாஸ் தகடுகள், ஓடுகள், புளொக்கல் மற்றும் மர வகைகள்)		
12.	அனைத்து ரக வாகனங்களுக்கு டயர், டியூப், பெற்றரி மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்கல்		
13.	அனைத்து வகையான வலுவேற்றப்பட்ட குழாய்கள் உட்பட கொங்கிறீட் உற்பத்திகள்		
14	சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (தும்புத்தடி, ஈர்க்கிள், சவர்க்காரம், மொப், மலசலகூட தூரிகைகள், கிருமிநாசினிகள், சுத்திகரிப்புப் பொருட்கள், துர்நாற்ற நாசினிகள், மலசலகூடத் தொகுதிகள் உட்பட)		
15	இழையான் கொல்லிகள், பீடை நாசினிகள், களை நாசினிகள் உட்பட்ட இரசாயன உற்பத்திகள்		
16	திகதி முத்திரைகள் மற்றும் இறப்பர் முத்திரைகள்		
17	குடிநீர் போத்தல்கள் வழங்குதல்		
18	வீதிப் பராமரிப்புக்குத் தேவையான பொருட்கள் (தார் மற்றும் பிரீமிக்ஸ்)		
19	வீதிப் பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்கள் (வீச்சுக்கத்தி, கத்தி, மண்வெட்டி, முள்ளு, ரேக்கை மற்றும் அறிவாள்)		
20	இசைக் கருவிகள், முன்பள்ளி உபகரணங்கள் / விளையாட்டுப் பொருட்கள் மற்றும் முற்ற விளையாட்டு உபகரணங்கள்		
21	நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகள்		
22	பசளை உறைகள் மற்றும் பொலித்தீன் உறைகள்		
23	கட்டிட நிர்மாண / வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் (நிர்மாண ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து கொள்வதற்கு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட சொத்துச் சான்றுப் பத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)		
24	உற்சவ வேளைகளுக்கான உணவு பானங்கள் வழங்குதல்		
25	உற்சவ வேளைகளுக்கான மேடை, ஒலிபெருக்கி இயந்திரம், மின்பிறப்பாக்கி இயந்திரம், மின்னொளி, பிளாஸ்டிக் கதிரைகள், கூடாரம் உட்பட ஏனைய உற்சவப் பொருட்கள் வழங்குதல்		
26	எரிபொருள் மற்றும் எரிவாயு சிலிண்டர் வழங்குதல்		

(இ) ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்ளல்

ஒப்பந்தக்காரர்கள்	உரிய பதிவுக் கட்டணம்:
1. ரூ. 100000.00 இற்கு குறைந்த கைத்தொழில்கள்	1000.00 + 15% வெட்
2. ரூ. 100000.00 முதல் 500000.00 வரை	3000.00 + 15% வெட்
3. ரூ. 500000.00 முதல் 1000000.00 வரை	5000.00 + 15% வெட்
4. ரூ. 1000000.00க்கு மேல் (இக்டாட் பதிவுடன் இருத்தல் வேண்டும்)	10000.00 + 15% வெட்

பொது நிபந்தனைகள்:

1. வழங்கல்கள் மற்றும் ஒப்பந்தங்களுக்காக பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் வெளியார்களிடமிருந்தும் விலைகளைக் கோரும் உரிமையையை சபை கொண்டுள்ளது.
2. வேண்டுகோள் விடுக்கப்பட்டவுடன் விலைகளைச் சமர்ப்பிக்காத மற்றும் உரிய தரத்திற்கு அமைய பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் சேர்க்கப்படும்.
3. தருவித்தற் கட்டளையின் பிரகாரம் பொருட்களை சபைக்கு போக்குவரத்துச் செய்தல் வேண்டும் என்பதுடன் பொருட்கள் வழங்கும் நாள் முதல் குறைந்தபட்சம் 30 நாட்களுக்கான கடன் வசதியை வழங்குநர்கள் வழங்குதல் வேண்டும்.
4. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
5. முறைப்படி தகவல்கள் வழங்கப்படாத முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் 2023-12-31ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
   - இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் 037-2259977 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்துக் கொள்ளலாம்.

எஸ்.டி.டீ.விமலசேன
செயலாளர்
இப்பாகமுவ பிரதேச சபை.

2023-10-18ஆம் திகதி
இப்பாகமுவ பிரதேச சபையில்.

இப்பாகமுவ பிரதேச சபை

வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

1. வழங்குநர் / ஒப்பந்தக்காரரின் பெயர்: .....
   (தேவையற்ற சொல்லை வெட்டிவிடவும்)
2. முகவரி:.....
3. தொலைபேசி இலக்கம் .....
   தொலைநகல் இலக்கம்: .....
4. வழங்கும் சேவை / பொருள் மற்றும் விடய இலக்கம்: .....
(உதா: (அ) 12, (ஆ) 5)
5. ஒப்பந்தத்தின் தன்மை மற்றும் உரித்துடைய இல (உதா: ஆ 2) .....
6. இக்டாட் பதிவிலக்கம் / வியாபாரச் சான்றிதழ் இல. / அடையாள அட்டை இல. .....
7. பதிவுக் கட்டணம் .....
8. காசோலை இலக்கம் / காசுக் கட்டளை இலக்கம்:.....

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் இயைபுடைய பதிவுச் சான்றிதழ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வழங்குநர் / ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யும் விளம்பரத்திலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்.

....
திகதி **கையொப்பம்**

அலுவலகப் பயன்பாட்டிற்காக

1. செலுத்திய தொகை: ..... பற்றுசீட்டு இலக்கம்:.....

விண்ணப்பத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது..
திகதி:.....

செயலாளர்,
இப்பாகமுவ பிரதேச சபை.

அறிவித்தல்

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

2024 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு நிகழ்வு கலண்டர்கள்

தேசிய விளையாட்டுச் சங்கம்/சம்மேளனம் மற்றும் சர்வதேச விளையாட்டுச் சங்கம்/ சம்மேளத்தினால் 2024ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட விளையாட்டு நிகழ்வு நாற்காட்டிகளை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2023.11.20ஆம் திகதிக்கு முன்பு அனுப்புதல் வேண்டும்.

இதனோடு சம்பந்தப்பட்ட மாதிரிப் பத்திரத்தை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் உங்கள் சங்கத்தின் நாற்காட்டியின் மென் பிரதியாக எமது மின்னஞ்சல் முகவரியான dsd.nscalendar@gmail.com இற்கு அனுப்புமாறு தயவுடன் தெரிவிக்கின்றேன்.

கலாநிதி ஷேமால் பெர்ணாண்டோ Phd
பணிப்பாளர் நாயகம்
2023 ஒக்டோபர் 16ம் திகதி

நொச்சியாகம பிரதேச சபை

2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக நொச்சியாகம பிரதேச சபையில் பதிவு செய்து கொள்வதற்கு ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் 2023-11-30ஆம் திகதி பி.ப. 2.00 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். உருப்படியொன்றிற்கான பதிவுக் கட்டணம் ரூபா 1,000/= (ஆயிரம்) என்பதுடன், ஒவ்வொரு உருப்படிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் மூலம் செலுத்துவதாயின் நொச்சியாகம பிரதேச சபை எனும் பெயரில் எழுதப்படல் வேண்டும். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை அனுப்புதல் கட்டாயமாகும் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2024 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம். பொருட்களை விநியோகிக்க முன்னர் கொடுப்பனவுகளை கேட்கக்கூடாதென்பதுடன், குறைந்த பட்சம் அதற்காக 30 நாட்கள் கடன் வசதியை சபைக்கு வழங்குதல் வேண்டும். சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் பதிவு செய்துள்ள வழங்குநர்களுக்குப் புறம்பாக பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

அட்டவணை

தொடர் இலக்கம்	(பொருட்கள் மற்றும் சேவைகள்)
01.	அலுவலக எழுதுகருவிகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட ஆவணங்கள்/ பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்
02.	அலுவலக உபகரணங்கள் (மேசைகள், கதிரைகள், அலுமாரிகள், தளபாடங்கள், உருக்கு/ மரப்பலகை/ பிளாஸ்டிக்)
03.	புகைப்படப் பிரதி இயந்திரங்கள், கணனி இயந்திரங்கள், அச்சு இயந்திரங்கள் வழங்கல் மற்றும் திருத்தவேலைகள் மற்றும் மை வகைகள் டோனர்கள். ரிபன், CD, DVD
04.	வயர்கள், வீதி விளக்குத் தொகுதிகள் உட்பட மின்சார உபகரணங்கள்
05.	துப்புரவேற்பாட்டுச் சேவைகளுக்கான பொருட்கள் (சவர்க்கார வகைகள், கிருமிநாசினிகள், கம்பூட்கள், கையுறைகள், குப்பைத்தொட்டிகள், விளக்குமாறுகள், தும்புத்தடிகள்)
06.	விளையாட்டுப் பொருட்கள் மற்றும் முன்பள்ளி உபகரணங்கள்
07.	சீருடைத்துணி வகைகள், மழை அங்கிகள், பாதுகாப்பு உடைகள். ஹெல்மட்டுகள்
08.	வாகன உதிரிப்பாகங்கள், டயர், டியுப், பெற்றரிகள்
09.	வாகனங்களுக்கான திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
10.	வீதி அபிவிருத்திக்குத் தேவையான பொருட்கள் - சிறுகற்கள், கருங்கல், கிரவல், மணல், தார், மரப்பலகைகள், விறகு,
11.	கட்டிடப் பொருட்கள்: சீமெந்து, ஓடுகள், செங்கற்கள், இரும்பு, கம்பி, முள்கம்பிகள், மண்வெட்டிகள், கத்திகள், அரிவால்கள், அஸ்பெஸ்டோஸ், அமானோ கூரைத் தகடுகள், நிறப்பூச்சு வகைகள்
12.	ஹியும் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், கொங்கிரீட் கம்பித்தூண்கள் உட்பட கட்டிட உற்பத்திகள்
13.	நீர்க்குழாய் உபகரணங்கள் மற்றும் நீர்மானிகள்
14.	அச்சு வேலைகள், அறிவித்தல் பலகைகள், பதாகைகள், ஞாபகப் படிகங்கள் மற்றும் கேடயங்கள்
15.	உற்சவங்களுக்கான பொருட்கள், போக்குவரத்துச் சேவைகள், உணவு வகைகள்
16.	விவசாய இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள்
17.	கணனி மென்பொருட்கள்
18.	கனரக வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் (JCB, மோட்டர் கிரேடர், கல் உருளைகள்)

செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த வேலைகளை
செயற்படுத்தும் அதிகாரி,
நொச்சியாகம பிரதேச சபை,
நொச்சியாகம.
தொ.பே.இல. 025-2257875

மாதிரி விண்ணப்பப் படிவம்

1. பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் பொருட்கள் மற்றும் சேவைகள்
   இலக்கம்: விபரம் .....
2. வியாபாரத்தின் பெயர்: .....
3. வியாபாரத்தின் முகவரி: .....
4. வியாபரத்தின் தன்மை (தனியார்/கூட்டு/கம்பனி): .....
5. வியாபாரம் அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவு: .....
6. தொடர்பாடல் ஊடகம் : .....

தொலைபேசி (நிலையான)	தொலைபேசி (கையடக்க)	தொலைநகல் இல.	மின்னஞ்சல் முகவரி

7. உரிமையாளர்/ கூட்டு உரிமையாளர்கள்/ பணிப்பாளர்களின் பெயர் மற்றும்முகவரி:
   .....
8. வியாபரப் பதிவுச் சான்றிதழின் இலக்கம் மற்றும் திகதி (பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.)
   இலக்கம்: ..... திகதி: .....
9. 2023ஆம் ஆண்டில் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனத்திற்கு வரி செலுத்திய (வியாபார அதிகாரப் பத்திரம்) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி: (பற்றுச்சீட்டொன்று இணைத்து அனுப்பப்படல் வேண்டும்)
   இலக்கம்: ..... திகதி: .....
10. பதிவுக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி:
    இலக்கம்: ..... திகதி:
    கடன் வசதிகளை வழங்கும் கால எல்லை: .....

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும், சரியானவையெனவும் உறுதிப்படுத்துவதுடன், மேற்படி பண்டங்கள்/ பொருட்கள்/ சேவைகளை வழங்குவதற்காக என்னை/ எமது நிறுவனத்தைப் பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்.

....
திகதி **விண்ணப்பதாரரின் ஒப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை**

அலுவலக உபயோகத்திற்கு:

இந்த வழங்குநர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டவராக உள்ளார்/ இல்லை என்று உறுதிப்படுத்துவதுடன், விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியும்/ முடியாது.

.....
விடயதான உத்தியோகத்தர்

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

117 வேன்கள் விற்பனைக்கு

PK-5211 NISSAN 2017, VAN கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714 5 42 958 . 067082

119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

LJ-2130 ASHOK LEYLAND COMET TIPPER 2011, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714542 958 . 067080

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

YL-0673 BAJAJ 2011, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 067076

வர்த்தகம்

218 மருத்துவ பொருட்கள்/ சிகிச்சை

Dr. ஆப்டீன் சுஜப் நிவ் திஹாரிய மெடிக்கல் 116C, கொழும்பு கண்டி வீதி, திஹாரி சந் தி பெற்றோல் நிலைய ம் அருகே. 07406 5 6 333 சரியா ன நோய் நி ர்ண ய ம் மூலம் அனைத்து நோய்களு க்கும் துரித நிவாரணம். 066248

வேலைவாய்ப்பு

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

ஒரு பேக்கரி பாஸ் தேவை. (அவன் (OVEN WORK) வேலை) 0711661588. 066893

325 தொழில்துறை பொது

மௌலவி தேவை கொழும்பில் பல வருட அனுபவமுள்ள ஹஜ் உம்ரா நிறுவனம் ஒன்றுக்கு வழிகாட்டியாக ஹஜ் / உம்ராவிற்கு ஆட்கள் சேர்த்து. பொறுப்பாக வழி நடத்த, அனுபவம் கட்டாயமானது. உங்கள் கருத்துக்கள், பண கொடுக்கல் உட்பட உங்கள் யோசனைகளை விபரமாக தரவும். Box No. TO 207759, மே/ பா தினரகன் லேக் ஹவுஸ், கொழும்பு. T0207759

Repeat Your Ad For Better Offers

விலைமனுக்களுக்கான அழைப்பு

கைத்தொழில் அமைச்சு

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

கறுப்பு இரும்புக் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

விலைக்கோரல் குறிப்பீடு: **LMSL/SUP/DPC/15/2023**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளவைக்கு தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரயிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் இப்போது கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறையில் நடாத்தப்படும்.

விலைக் கோரல் இல.	பொருட்களின் விளக்கம்	ஆவணக் கட்டணங்கள் (மீளளிக்கப் படாதது)	விலைக் கோரல் பிணை முறி (ரூ)	விலைக் கோரல் பிணை முறி கட்டாயமாக செல்லுபடியாகும் காலவரையறை	விலை மனுக்கள் செல்லுபடி யாகும் நாட்கள்	விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம்
LMSL/SUP /DPC/15/ 2023	கறுப்பு இரும்புக் குழாய்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்	3,000.00	100,000.00	2024-02-12	77	2023-11-14 அன்று பி.ப. 2.30 மணிக்கு

03. ஆர்வமுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவலை இராஜகிரிய, சரண மாவத்தை, 341/21 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டின் வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து பெற்று, 2023-10-20ஆம் திகதி முதல் 2023-11-13ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொடர்பு இலக்கங்கள்: 011-2882025/2883951/2883952.

04. 2023-10-20ஆம் திகதி முதல் 2023-11-13ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 3,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவை இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் நிதிப் பிரிவின் காசாளரின் கருமபீடத்திற்கு ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என குறிப்பிட்டு இரண்டு தனித்தனியான உறைகளில் இட்டு, அவையிரண்டையும் பின்வருமாறு ஒரு உறையில் உள்ளிட்டு, தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய என்ற முகவரிக்கு மேற்குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கனிப்பொருள் மணல் லிமிட்டெட்டில் இந்நோக்கத்திற்காக வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. அனைத்து விலைமனுக்களுடனும் பின்வரும் வகையிலமைந்த விலைமனுப் பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

